𑌶𑍍𑌰𑍀𑌤𑌤𑍍𑌵𑌨𑌿𑌧𑌿𑌃

(𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯 𑌭𑌾𑌗𑌃)

ஸ்ரீதத்துவநிதி

இரண்டாம் பாகம்



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்.

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீடு - 104

𑌶𑍍𑌰𑍀𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌨𑌿𑌧𑌿𑌃

(𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑍋 𑌭𑌾𑌗𑌃)

ஸ்ரீதத்துவநிதி

இரண்டாம் பாகம்

பதிப்பாசிரியர்:

சேஷ. சம். ஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகள்,

சமஸ்கிருத பண்டிதர் (ஓய்வு)

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மஹாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்.

2007 ரூ. 250/-

Bibliographical Data

Title of the Book	:	**SRITHATHUVANIDHI**
		II Part
Editor	:	K.S.Subramania Sasthrigal
Publisher	:	Director Sarasvati Mahal Library.
Publication No.	:	104
Language	:	Sanskrit & Tamil
Edition	:	Edition
Date of Publication	:	November, 2007
Paper Used	:	18.6 Kg. TNPL
Size of Book	:	21 x 14 cm.
Printing and Type Used	:	18 pt. & 12 pt.
Number of Pages	:	702
Price	:	**Rs. 250 /-**
Printer	:	Sarma's Sanatorium Press Pudukkottai.
Binding	:	Stiff Binding
Subject	:	Silpasastra

6-5

வெளியீட்டாளர் முகவுரை

உலகப் புகழ்ப் பெற்ற சிறந்த நூல் நிலையங்களுள் ஒன்றாக விளங்கும் தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையம் பழங்கால ஓலைச்சுவடிகளில் இருந்து எண்ணற்ற இலக்கிய நூல்களையும், இலக்கண நூல்களையும், மருத்துவ நூல்களையும், சோதிட நூல்களையும் வெளியிடுவதுடன் சிற்ப சாத்திரம் தொடர்பான நூல்களையும் பதிப்பித்து வெளியிடுகின்ற மகத்தானப் பணியினைச் சிறப்புற செய்து வருகின்றது.

மைசூர் மகாராஜா ஸ்ரீகிருஷ்ணராஜ உடையார் அவர்கள் பல நூல்களை ஆராய்ச்சி செய்து திரட்டிய பொருண்மைச் சிறப்புக்களை ஸ்ரீதத்துவநிதி எனும் பெயரில் 9 பாகங்களாகக் கொடுத்துள்ளார்.

ஸ்தபதிகளில் பெரும்பாலானோர் கிரந்த எழுத்தில் பயிற்சி உள்ளவர்கள். ஆதலால் இந்நூல் வடமொழி மூலம் கிரந்த லிபியிலும், தமிழில் மொழிபெயர்ப்புச் செய்யப் பெற்றும் வெளியிடப்பட்டுள்ளது. அவ்வரிசையில் தற்போது **ஸ்ரீதத்துவநிதி** என்ற சிற்ப சாஸ்த்திர நூலின் இரண்டாம் பாகம் இரண்டாம் பதிப்பாக வெளிவருகின்றது.

இவ்விரண்டாம் பாகத்தில் நவக்கிரகங்களின் தியானம், அறுபது ஆண்டுகளின் அபிமானி தேவதா தியானம், உத்தராயணம், தக்ஷிணாயனம், ஆறுவகைப் பருவகாலம், மாதங்கள் ஆகியன குறித்த செய்திகளும் எடுத்தியம்பப்பட்டுள்ளன.

மேலும் இந்நூலில் மனிதனின் பிறந்த நாள் பலன், இருபத்தேழு நக்ஷத்திரங்களில் பிறந்தவர்களின் குணங்கள், 27 யோகங்களின் உருவ அமைதி, அதற்கான தானங்கள் முதலான சோதிடச் செய்திகளும் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளன.

இத்தகைய அரிய நூல்களை நன்முறையில் வெளிக்கொணர நிதியுத்வி நல்கும் மைய அரசுக்கு என் நன்றி. இந்நூலை வெளிக்கொணர முயற்சிகள் மேற்கொண்ட சரசுவதி மகால் நூலக நிருவாக அதிகாரி மற்றும் வெளியீட்டு மேலாளர் பொறுப்பு வகிக்கும் திரு. சாமி. சிவஞானம், எம்.ஏ., அவர்களுக்கும், நூலகக் கணினிப் பிரிவினருக்கும் மற்றும் இந்நூல் நன்முறையில் வெளிவர துணைநின்ற அனைவருக்கும் என் நன்றி.

சா. விஜயராஜ் குமார், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்.
05.11.2007

श्री गणेशाय नमः ।

भूमिका ॥

सुविदितं वो भारते दक्षिणेषु [illegible] मही पण्डितमण्डली परिपोषिता [illegible] महीशूरपुरी (मैसूर्) नाम्नी कर्णाटकराजधानी ॥

तत्र च यदुकुलावतंसः सकलराजगुणोपपन्नः नयविनयराजश्री कृष्णराज महाराज इति प्रसिद्धनामधेयो महाराजः प्रजारञ्जनपरो बभूव ॥

सकलकलाभिज्ञः पण्डितवत्सलः पण्डितमण्डलपरिवृतो [illegible] राजा विशेषतः पण्डितलोकसमाराधनबद्धश्रद्धः [illegible] राजश्री चामराज महाराजस्य [illegible] शतं ग्रामान् पण्डितवरेभ्यो ब्राह्मणेभ्यः प्रददाविति तच्चरित्रे प्रतीयते ॥

सोऽयं महाराजः लोकोपकारकरणे प्रवणमतिः तन्त्रागमपुराणेतिहाससंहितादिभ्यः [illegible] ग्रन्थेभ्यः सारतरान् विषयान् संगृह्य, तान् विषयानुरोधेन नवधा विभज्य, सर्वोपयुक्तविषयोपवर्णनानामेतेषां नवानां विभागानां क्रमेण शक्तितत्त्वनिधिः १. विष्णुतत्त्वनिधिः २. शिवतत्त्वनिधिः ३. ब्रह्मतत्त्वनिधिः ४. ग्रहतत्त्वनिधिः ५. वैष्णवतत्त्वनिधिः ६. शैवतत्त्वनिधिः ७. आगमतत्त्वनिधिः ८. कौतुकतत्त्वनिधिः ९. इति संज्ञां कल्पयित्वा, एवं नवनिध्यात्मकं श्रीतत्त्वनिधिनामकं ग्रन्थं विरचितवानिति विज्ञायते ॥

तत्र निधिचतुष्पादकः प्रथमो भागो भवति ।

𑌵𑌿𑌸𑍍𑌤𑍃𑌤𑌃 𑌪𑌞𑍍𑌚𑌮𑍋 𑌨𑌿𑌧𑌿𑌃 𑌷𑌷𑍍𑌠𑍋 𑌭𑌾𑌗𑌃 । 𑌅𑌵𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑍍𑌯𑍇 𑌨𑌿𑌧𑌯𑌃 𑌸𑌪𑍍𑌤𑌮𑍋 𑌭𑌾𑌗𑍋 𑌭𑌵𑌤𑌿 ॥

𑌏𑌵𑌂 𑌭𑌾𑌗𑌤𑍍𑌰𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑍍𑌯𑌮𑌾𑌨𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌶𑍍𑌰𑍀𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌨𑌿𑌧𑍌 𑌪𑍍𑌰𑌥𑌮𑌭𑌾𑌗𑍇 𑌪𑍍𑌰𑌥𑌮𑍇 𑌶𑌕𑍍𑌤𑌿𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌨𑌿𑌧𑍌, 𑌭𑌗𑌵𑌤𑍍𑌯𑌾𑌶𑍍𑌚𑌾𑌮𑍁𑌣𑍍𑌡𑌾𑌦𑌿𑌦𑍇𑌵𑍍𑌯𑌾 𑌧𑍍𑌯𑌾𑌨𑌾𑌕𑌾𑌰𑌸𑍍𑌯 𑌨𑌿𑌰𑍂𑌪𑌣𑌾, 𑌭𑌾𑌵𑌨𑌾, 𑌸𑌂𑌵𑌰𑌣𑌾𑌦𑌿𑌶𑌕𑍍𑌤𑍀𑌨𑌾𑌂, 𑌕𑌾𑌲𑍇𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌾𑌦𑍀𑌨𑌾𑌂, 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑍍𑌯𑌾𑌦𑍀𑌨𑌾𑌂, 𑌤𑌾𑌰𑌾𑌧𑍂𑌮𑌾𑌵𑌤𑍀 𑌸𑍍𑌵𑌰𑍍𑌣𑌾𑌮𑍍𑌬𑌾 𑌬𑌾𑌲𑌾 𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑍀𑌨𑌾𑌂, 𑌷𑌡𑌙𑍍𑌗𑍀𑌨𑌾𑌂, 𑌨𑌵𑌦𑍁𑌰𑍍𑌗𑌾𑌣𑌾𑌂, 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌦𑍇𑌵𑍍𑌯𑌾𑌦𑍀𑌨𑌾𑌂, 𑌇𑌤𑌿 𑌏𑌕𑍋𑌨𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌿𑌂𑌶𑌦𑌧𑌿𑌕𑌦𑍍𑌵𑌿𑌶𑌤𑌸𑌂𑌖𑍍𑌯𑌾𑌕𑌾𑌨𑌾𑌂 (௨௩௯) 𑌦𑍇𑌵𑌤𑌾𑌨𑌾𑌂 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌵𑌬𑍋𑌧𑌕𑌾𑌨𑌿 𑌧𑍍𑌯𑌾𑌨𑌾𑌨𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌿𑌤𑌾𑌨𑌿 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 ॥

𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑍇 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌨𑌿𑌧𑍌, 𑌵𑌿𑌰𑌾𑌟𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑌧𑍍𑌯𑌾𑌨𑌾𑌕𑌾𑌰𑌸𑍍𑌯 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌾𑌦𑌿𑌮𑍂𑌰𑍍𑌤𑍀𑌨𑌾𑌂, 𑌕𑍇𑌶𑌵𑌾𑌦𑌿𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌂𑌶𑌤𑌿 𑌮𑍂𑌰𑍍𑌤𑍀𑌨𑌾𑌂, 𑌦𑌶𑌾𑌵𑌤𑌾𑌰 𑌮𑍂𑌰𑍍𑌤𑍀𑌨𑌾𑌂, 𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑍍𑌯𑍂𑌹 𑌮𑍂𑌰𑍍𑌤𑍀𑌨𑌾𑌂, 𑌗𑌰𑍁𑌡𑌹𑌨𑍁𑌮𑌚𑍍𑌛𑍍𑌰𑍀𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑍀𑌨𑌾𑌮𑌿𑌤𑍍𑌯𑌾𑌹𑌤𑍍𑌯 𑌷𑌟𑍍𑌸𑌪𑍍𑌤𑌤𑌿𑌸𑌂𑌖𑍍𑌯𑌾𑌕𑌾𑌨𑌾𑌂 (௭௬) 𑌦𑍇𑌵𑌤𑌾𑌨𑌾𑌂 𑌧𑍍𑌯𑌾𑌨𑌾𑌨𑍍𑌯𑍁𑌪𑌪𑌾𑌦𑌿𑌤𑌾𑌨𑌿 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 ॥

𑌤𑍃𑌤𑍀𑌯𑍇 𑌶𑌿𑌵𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌨𑌿𑌧𑍌 𑌶𑌿𑌵𑌪𑌞𑍍𑌚𑌾𑌕𑍍𑌷𑌰𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑍍𑌯𑌸𑌾𑌮𑍍𑌬𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰 𑌧𑍍𑌯𑌾𑌨𑌾𑌕𑌾𑌰𑌸𑍍𑌯, 𑌸𑌦𑌾𑌶𑌿𑌵 𑌨𑍀𑌲𑌕𑌣𑍍𑌠𑌮𑌹𑌾𑌘𑍋𑌰𑌾𑌦𑌿𑌮𑍂𑌰𑍍𑌤𑍀𑌨𑌾𑌂, 𑌸𑌦𑍍𑌯𑍋𑌜𑌾𑌤𑌾𑌦𑌿𑌪𑌞𑍍𑌚 𑌮𑍂𑌰𑍍𑌤𑍀𑌨𑌾𑌂, 𑌸𑌪𑍍𑌤𑌤𑌾𑌣𑍍𑌡𑌵𑌮𑍂𑌰𑍍𑌤𑍀𑌨𑌾𑌂, 𑌭𑌵𑌾𑌦𑍍𑌯𑌷𑍍𑌟𑌮𑍂𑌰𑍍𑌤𑍀𑌨𑌾𑌂, 𑌏𑌕𑌾𑌦𑌶𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌣𑌾𑌂, 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌶𑍇𑌖𑌰𑌾𑌦𑌿 𑌪𑌞𑍍𑌚𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌮𑍂𑌰𑍍𑌤𑍀𑌨𑌾𑌂, 𑌦𑍍𑌵𑌾𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌦𑍍𑌗𑌣𑍇𑌶𑌮𑍂𑌰𑍍𑌤𑍀𑌨𑌾𑌂, 𑌸𑌪𑍍𑌤𑌦𑌶𑌸𑍁𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑌮𑍂𑌰𑍍𑌤𑍀𑌨𑌾𑌂, 𑌪𑌞𑍍𑌚𑌾𑌵𑌰𑌣𑌾𑌷𑍍𑌟𑌭𑍈𑌰𑌵 𑌪𑌾𑌰𑍍𑌵𑌤𑍍𑌯𑌾𑌶𑍍𑌚 𑌅𑌘𑍋𑌰𑍇𑌶𑌾𑌦𑍀𑌨𑌾𑌮𑌿𑌤𑌿 𑌆𑌹𑌤𑍍𑌯 𑌏𑌕𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌦𑌧𑌿𑌕𑌶𑌤𑌸𑌂𑌖𑍍𑌯𑌾𑌕𑌾𑌨𑌾𑌂 (௧௩௧) 𑌮𑍂𑌰𑍍𑌤𑍀𑌨𑌾𑌂 𑌧𑍍𑌯𑌾𑌨𑌾𑌨𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌿𑌤𑌾𑌨𑌿 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 ॥

𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑌿𑌧𑍌, 𑌚𑌤𑍁𑌰𑍍𑌮𑍁𑌖𑌸𑍍𑌯 𑌪𑌞𑍍𑌚𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌾𑌂, 𑌮𑌰𑍀𑌚𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌵𑌪𑍍𑌰𑌜𑍇𑌶𑍍𑌵𑌰𑌾𑌣𑌾𑌂, 𑌸𑌪𑍍𑌤𑌰𑍍𑌷𑍀𑌣𑌾𑌂 𑌵𑍇𑌦𑌵𑍇𑌦𑌾𑌙𑍍𑌗𑌾𑌦𑌿𑌦𑍇𑌵𑌤𑌾𑌨𑌾𑌂, 𑌚𑌤𑍁𑌃𑌷𑌷𑍍𑌟𑌿𑌕𑌲𑌾𑌦𑌿𑌦𑍇𑌵𑌤𑌾𑌨𑌾𑌂, 𑌦𑍍𑌵𑍀𑌪𑌾𑌨𑌾𑌂, 𑌅𑌷𑍍𑌟𑌨𑌾𑌗𑌾𑌨𑌾𑌂, 𑌏𑌕𑍋𑌨𑌪𑌞𑍍𑌚𑌾𑌶𑌨𑍍𑌮𑌰𑍁𑌦𑍍𑌦𑍇𑌵𑌾𑌦𑍀𑌨𑌾𑌮𑌿𑌤𑍍𑌯𑌾𑌹𑌤𑍍𑌯 𑌷𑌟𑍍𑌸𑌪𑍍𑌤𑌤𑍍𑌯𑌧𑌿𑌕𑌶𑌤𑌸𑌂𑌖𑍍𑌯𑌾𑌕𑌾𑌨𑌾𑌂 (௧௭௬) 𑌦𑍇𑌵𑌤𑌾𑌨𑌾𑌂 𑌧𑍍𑌯𑌾𑌨𑌾𑌨𑌿 𑌨𑌿𑌰𑍂𑌪𑌿𑌤𑌾𑌨𑌿 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 ॥

𑌏𑌵𑌂 𑌨𑌿𑌧𑌿𑌚𑌤𑍁𑌷𑍍𑌟𑌯𑌾𑌤𑍍𑌮𑌕𑍇 𑌪𑍍𑌰𑌥𑌮𑌭𑌾𑌗𑍇 𑌸𑌪𑍍𑌤𑌦𑌶𑌾𑌧𑌿𑌕𑌷𑌟𑍍𑌶𑌤𑌂 (௬௧௭) 𑌦𑍇𑌵𑌤𑌾 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌬𑍋𑌧𑌕𑌾𑌨𑌿 𑌧𑍍𑌯𑌾𑌨𑌾𑌨𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌿𑌤𑌾𑌨𑌿 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 ॥

𑌅𑌥 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌭𑌾𑌗𑌾𑌤𑍍𑌮𑌕𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌗𑍍𑌰𑌹𑌨𑌿𑌧𑍌, 𑌸𑍂𑌰𑍍𑌯𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌗𑍍𑌰𑌹𑌾𑌣𑌾𑌂, 𑌤𑌦𑌧𑌿𑌦𑍇𑌵𑌤𑌾 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌧𑌿𑌦𑍇𑌵𑌤𑌾𑌨𑌾𑌂 𑌧𑍍𑌯𑌾𑌨𑌾𑌨𑌿, 𑌧𑍂𑌮𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌸𑌾𑌹𑌾𑌯𑍍𑌯𑌦𑍇𑌵𑌤𑌾𑌨𑌾𑌂 𑌧𑍍𑌯𑌾𑌨𑌾𑌨𑌿 𑌪𑍍𑌰𑌭𑌵𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌷𑌷𑍍𑌟𑌿𑌸𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑌾𑌣𑌾𑌂, 𑌤𑌦𑌧𑌿𑌦𑍇𑌵𑌤𑌾𑌨𑌾𑌂 𑌧𑍍𑌯𑌾𑌨𑌾𑌨𑌿, 𑌅𑌯𑌨-𑌋𑌤𑍁-𑌮𑌾𑌸-𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰-𑌯𑍋𑌗-𑌕𑌰𑌣𑌾𑌨𑌾𑌂, 𑌤𑌦𑌧𑌿𑌦𑍇𑌵𑌤𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌧𑍍𑌯𑌾𑌨𑌾𑌨𑌿, 𑌵𑌾𑌰𑌭𑍇𑌦𑍇𑌨 𑌕𑌰𑌣𑌭𑍇𑌦𑍇𑌨 𑌚 𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑌾𑌂 𑌵𑌿𑌵𑌿𑌧𑌕𑌰𑌸𑌂𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌿𑌦𑍇𑌵𑌤𑌾𑌨𑌾𑌂 𑌧𑍍𑌯𑌾𑌨𑌾𑌨𑌿 𑌚 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌿𑌤𑌾𑌨𑌿 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 ॥

𑌤𑌥𑌾, 𑌪𑍍𑌰𑌭𑌵𑌾𑌦𑌿𑌵𑌤𑍍𑌸𑌰𑍇𑌷𑍁, 𑌮𑌾𑌸-𑌤𑌿𑌥𑌿-𑌵𑌾𑌰-𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰-𑌯𑍋𑌗-𑌕𑌰𑌣𑍇𑌷𑍁 𑌜𑌾𑌤𑌾𑌨𑌾𑌂 𑌫𑌲𑌾𑌨𑌿, 𑌮𑌾𑌸𑌾𑌦𑌿𑌷𑍁 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌾𑌨𑌿 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌣𑌿, 𑌦𑌾𑌨𑌾𑌨𑌿 𑌚 𑌸𑌮𑍍𑌯𑌗𑌭𑌿𑌹𑌿𑌤𑌾𑌨𑌿 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 ॥

𑌤𑌥𑍈𑌵 𑌪𑌞𑍍𑌚𑌸𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑌾𑌤𑍍𑌮𑌕𑌯𑍁𑌗𑌾𑌦𑌿𑌦𑍇𑌵𑌤𑌾𑌨𑌾𑌂, 𑌚𑌤𑍁𑌰𑍍𑌯𑍁𑌗𑌾𑌭𑌿𑌮𑌾𑌨𑌿 𑌦𑍇𑌵𑌤𑌾𑌨𑌾𑌂, 𑌮𑍇𑌷𑌾𑌦𑌿𑌰𑌾𑌶𑍀𑌨𑌾𑌂, 𑌅𑌹𑍋𑌰𑌾𑌤𑍍𑌰𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌨𑌾𑌂, 𑌪𑌞𑍍𑌚𑌦𑌶𑌦𑌿𑌵𑌾𑌰𑌾𑌤𑍍𑌰𑌿𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤𑌾𑌨𑌾𑌂, 𑌕𑌲𑌾𑌕𑌾𑌷𑍍𑌠𑌾𑌦𑌿𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌣𑌾𑌂 𑌚 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌣𑍍𑌯𑍁𑌪𑌪𑌾𑌦𑌿𑌤𑌾𑌨𑌿 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 ॥

𑌷𑌡𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑍀𑌨𑌾𑌂 𑌨𑌿𑌬𑌨𑍍𑌧𑌾𑌨𑌾𑌂 𑌵𑌿𑌷𑌯𑌾𑌣𑌾𑌂 𑌚 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑌾𑌰𑌮𑌿𑌹 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌯𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 ॥

𑌇𑌤𑍍𑌥𑌂 𑌸𑌕𑌲𑌦𑍇𑌵𑌤𑌾𑌸𑌾𑌰𑍍𑌵𑌭𑍌𑌮𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌬𑍋𑌧𑌕𑍋𑌽𑌯𑌂 𑌶𑍍𑌰𑍀𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌨𑌿𑌧𑌿𑌃, 𑌯𑌥𑌾 𑌨𑌿𑌖𑌿𑌲𑌦𑍇𑌵𑌤𑌾𑌸𑌾𑌰𑍍𑌵𑌭𑍌𑌮𑌨𑌿𑌰𑍍𑌧𑌾𑌰𑌣𑌪𑌰𑌾𑌣𑌾𑌂 𑌶𑌿𑌷𑍍𑌟𑌪𑌰𑌾𑌣𑌾𑌂, 𑌤𑌤𑍍𑌤𑌦𑍍𑌦𑍇𑌵𑌤𑌾𑌸𑌾𑌰𑍍𑌵𑌭𑍌𑌮𑌨𑌿𑌰𑍍𑌧𑌾𑌰𑌣𑍇 𑌸𑌹𑌕𑌾𑌰𑍋𑌪𑌕𑌾𑌰𑌕𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍, 𑌤𑌥𑌾 𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌭𑌾𑌷𑌾𑌙𑍍𑌗𑍀𑌕𑌰𑌣𑍇𑌨 𑌸𑌾𑌕𑌂 𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌨𑍀𑌯 𑌇𑌤𑌿, 𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌵𑌿𑌦𑍍𑌰𑌾𑌜𑌕𑍀𑌯𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑍁𑌸𑌾𑌰𑍇𑌣𑍈𑌵, 𑌶𑍍𑌰𑍀𑌤𑌞𑍍𑌜𑌪𑍁𑌰𑍀 𑌵𑌿𑌰𑌾𑌜𑌮𑌾𑌨 𑌶𑍍𑌰𑍀𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀𑌮𑌹𑌾𑌲𑌯 𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌹𑌕𑌸𑌮𑌿𑌤𑍍𑌯𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑍁𑌸𑌾𑌰𑍇𑌣, 𑌤𑌤𑍍𑌸𑌮𑌿𑌤𑌿 𑌕𑌾𑌰𑍍𑌯𑌦𑌰𑍍𑌶𑌿𑌭𑌿𑌃, 𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌭𑌾𑌷𑌾𑌙𑍍𑌗𑍀𑌕𑌰𑌣𑍇𑌨 𑌸𑌾𑌕𑌂 𑌪𑌰𑌿𑌷𑍍𑌕𑍃𑌤𑍍𑌯 𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌨𑌾𑌯𑍇𑌦𑌂 𑌶𑍍𑌰𑍀𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀𑌮𑌹𑌾𑌲𑌯𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌵𑌰𑍇 𑌮𑌯𑌿 𑌵𑌿𑌤𑍀𑌰𑍍𑌣𑌂 𑌖𑌲𑍁 ॥

𑌤𑌥𑌾 𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌭𑌾𑌷𑌾𑌨𑍁𑌵𑌾𑌦𑍇𑌨 𑌸𑌾𑌕𑌂 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍 𑌪𑌰𑌿𑌷𑍍𑌕𑍃𑌤𑍍𑌯, 𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌤𑌾𑌂 𑌚 𑌨𑍀𑌤𑌃, 𑌶𑍍𑌰𑍀𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀𑌮𑌹𑌾𑌲𑌯𑌕𑌾𑌰𑍍𑌯𑌦𑌰𑍍𑌶𑌿𑌭𑌿𑌃 𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑌿𑌤𑌃, 𑌶𑍍𑌰𑍀 𑌵𑌾𑌣𑍀𑌵𑌿𑌲𑌾𑌸 𑌮𑍁𑌦𑍍𑌰𑌣𑌾𑌲𑌯𑍇 𑌸𑌮𑍍𑌮𑍁𑌦𑍍𑌰𑌿𑌤𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌯𑌂 𑌶𑍍𑌰𑍀𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌨𑌿𑌧𑌿𑌃 𑌨𑌿𑌖𑌿𑌲 𑌸𑌹𑍃𑌦𑌯 𑌹𑍃𑌦𑌯𑌾𑌨𑌨𑍍𑌦𑌕𑌰𑌃 𑌶𑌿𑌷𑍍𑌟𑌪𑌰𑌾𑌣𑌾𑌂 𑌸𑌹𑌕𑌾𑌰𑍋𑌪𑌕𑌾𑌰𑌕𑌶𑍍𑌚 𑌭𑍂𑌯𑌾𑌦𑌿𑌤𑌿 𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌯𑍇 [illegible] । '𑌯𑌦𑍍𑌯𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌵𑌶𑌤𑍋 𑌦𑍋𑌷𑌲𑍇𑌶𑌾𑌃 𑌸𑍍𑌯𑍁𑌃 𑌸 𑌸𑌹𑍃𑌦𑌯𑍈𑌃 𑌕𑍍𑌷𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑌾𑌃' 𑌇𑌤𑍍𑌯𑌭𑍍𑌯𑌰𑍍𑌥𑌯𑍇 ॥

𑌇𑌤𑍍𑌥𑌂,

[illegible],

𑌕𑍇. 𑌶𑌂. 𑌸𑍁𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍀,

𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀𑌮𑌹𑌾𑌲𑌯 𑌪𑍁𑌸𑍍𑌤𑌕 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌵𑌰𑌃 ।

ஸ்ரீ தத்துவநிதி

சில்ப சாஸ்திர நூல்களை வடமொழியிலிருந்து மொழி பெயர்க்கும் சீரிய தொண்டை, இந் நூலகத்தாரிடம் சென்னை, மாநில சர்க்கார் 1957-ம் ஆண்டு ஒப்படைத்தது. வடமொழியில் சைவ ஆகமங்களையும் வைகானஸ சித்ர கர்மங்களையும் பற்றிய பல அரிய நூல்கள் வெளியிடப் பட்டுள்ளன. தென்னாட்டில் சிற்பக்கலை சோழர்கள் கால முதற்கொண்டு வளர்ச்சியுற்று வந்தது. சமீபகாலத்தில், சாத்திரம் பயின்ற பல ஸ்தபதிகள் கலையை வளர்க்க ஏதுவின்றி இருந்துவந்தபோது மாநில சர்க்கார் நல்ல சந்தர்ப்பத்தில் இந்நிலைமையை ஊக்குவிக்க வேண்டிச் சிற்பப் பயிற்சி நிலயங்களை மாமல்லபுரம், சுவாமிமலை முதலிய இடங்களில் அமைத்தனர். அந்நிலயங்களில் பயிற்சியுறும் மாணவர்கட்கு உபயோகப்படும் அளவில் சிற்ப நூல்கள் தமிழ் மொழியில் மிகவும் அவசியப்பட்டன.

ஸ்தபதிகள் என அழைக்கப்படும் சிற்பிகள் அனைவரும் தம் தொழிலுக்குப் போதிய அளவு வடமொழியில் அறிவு உடைத்திருந்தனர். இக்கலை க்ஷீணதசையடையும் தருவாயில், பல காரணங்களால் சில்ப மரபினர் தம் முன்னோர்கள் இயல்பாகக் கற்ற வடமொழியில் பயிற்சியடைய முடியாது போயினர். ஓரளவு பயிற்சியுடைய ஸ்தபதிகள் இம்மொழியைக் கிரந்த எழுத்தின் மூலமாகவே கற்றறிந்தவர்கள். தென்னாட்டில் வடமொழிக்காக ஏற்பட்ட எழுத்து கிரந்த எழுத்து. வடமொழியில் பிரசுரமான புத்தகங்கள் எல்லாமே தேவநாகரி எழுத்தில் வெளியிடப்பட்டவை. இந்நூல்களின் வடமொழி மூலம், கிரந்த லிபியிலும், மொழிபெயர்ப்பு தமிழிலுமாக வெளியிட வேண்டிய தேவையை நன்றுணர்ந்து சென்னை அரசாங்கத்தார் பொருள் வழங்கி, சரசுவதி மகால் நூல் நிலயத்தின் மூலமாக இந்நூல்களை வெளியிட முன்வந்தனர்,

இந்நூல் நிலையத்தினின்றும், இதுகாறும் கிரந்த எழுத்துக்களில் மூலமும் தமிழ் உரையுடன் வெளிவந்துள்ள புத்தகங்கள் ;—

1. சாரஸ்வதீய சித்திரகர்மம்
2. பிராம்மிய சித்திரகர்மம்
3. காச்யப சில்பம்
4. சில்ப ரத்தினம்
5. சகலாதிகாரம்

இந்நூல்களில் முக்கியமாக பல தேவதைகளின் விக்கிரக அமைப்புகளைப்பற்றியும் அளவுகளைப்பற்றியும், கோயில்களில் உள்ள சில முக்கிய அமைப்புகளைப்பற்றியும் விஸ்தாரமாக விவரிக்கப்பட்டுள்ளன.

இவ்வைந்து வெளியீடுகள் சிற்பப் பயிற்சி நிலையத்தினருக்கு மிக்க உதவியளிக்கின்றன. மேலும் பல ஸ்தபதிகளாலும் சில்பக் கலையில் ஆர்வமுள்ள ஏனையோராலும் இந்நூல்கள் வாங்கப்பட்டு, நூல்களின் விற்பனையும் அதிகரித்துக்கொண்டிருப்பதால், இந்நூல்களைப் பொது மக்களும் சிற்ப வல்லுனர்களும் பெரிதும் விரும்புகிறார்கள் என்பது கண்டு பெரிதும் மகிழ்ச்சியுறுகிறோம்.

மேலும் பல நூல்கள் மொழிபெயர்ப்புடன் தயாராகி வருகின்றன.

'ஸ்ரீ தத்துவ நிதி' என்னும் இந்நூல் தேவதைகளின் தியானம் செய்யும் முறையையும், சைவ, வைணவ, மத சம்பந்தமான தேவதைகளின் விக்ரஹங்களுக்கு இலக்கணத்தையும் தியான சுலோகத்தின்மூலம் விளக்கும் நூலாகும். இந்நூல் மூன்று தொகுதிகளாக வெளியிடப்படும். இதன் முதல் பாகம் ஏற்கெனவே வெளியாகி இருக்கிறது. இப்போது இந்நூலின் இரண்டாம் பாகம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நூல் நிலையத்தினின்று வெளியிடப்பட்டுள்ள மற்ற சிற்ப நூல்களைப்போன்று, இந்நூலும் பொதுமக்களுக்கும் சிற்பிகளுக்கும் பெரிதும் உபயோகமுள்ளதாகவிருக்கும் என நம்புகிறோம்.

இந்நூலைத் திறம்பட மொழிபெயர்த்து, மேன்மைபடப் பதிப்பிற்குக் கொண்டுவந்த, பதிப்பாசிரியர் ஸ்ரீ கே. சம். சுப்ரமண்ய சாஸ்திரியார் அவர்களுக்கு எங்கள் நன்றியும் பாராட்டலும் உரித்தாகுக.

சிற்பக்கலை சிறந்தோங்கிய தமிழகத்தில், இக்கலையின் வளர்ச்சி தேக்கமுற்ற தருணத்தில், இக்கலை வளர்ச்சியுற, பொருளுதவி ஈந்த சென்னை மாநில அரசாங்கத்தினர் அவர்கட்கு, இந்நூல் நிலயத்தின் சார்பாக எங்கள் நன்றி உரியதாகும்.

உ. அ. நாராயணசாமி,
கௌரவ காரியதரிசி,
தஞ்சை சரபோஜி மன்னர்
சரசுவதி மகால் நூல்நிலய நிருவாகக்குழு.

தஞ்சை
22—11—64

உ
கணபதி துணை

முகவுரை

இப்பூவுலகில் புகழ்பெற்று விளங்கும் யதுவம்சத்தில் உதித்த ராஜஸ்ரீ கிருஷ்ணராஜ மஹாராஜா என்பவர், செல்வம்செறிந்த மைஸூர் ஸம்ஸ்தானத்திலிருந்துகொண்டு, கர்னுடக தேசத்தை நீதிநெறிதவருமலாண்டுவந்தார்.

உத்தம ராஜகுணங்களும், கல்வித்திறமையும், கலாஞானமும் பெற்ற இம்மன்னன் பண்டிதர்களுக்குப் பேராதரவு அளித்துப் போற்றி, அவர்களுக்குப் பேருதவியும் செய்துவந்தார்.

இவர், தனது தந்தையான ராஜஸ்ரீ சாமராஜ மஹாராஜாவினிடம் அனுமதிபெற்று நூறு கிராமங்களை, சிறந்த வித்துவான்களான நூறு பிராஹ்மணர்களுக்கு வழங்கினுர் என்று இவருடைய சரித்திர வரலாற்றில் கூறப்பட்டிருக்கிறது.

இவ்வரசன், உலகுக்கோர் பேருதவிசெய்ய விரும்பி, தந்திரம், ஆகமம், புராணம், இதிஹாஸம், ஸம்ஹிதை முதலிய பல நூல்களைப் பார்த்து ஆராய்ந்து, அவைகளிலிருந்து ஸாரமான பல விஷயங்களை எடுத்து, விஷயங்களுக்கேற்றவாறு, அவைகளை ஒன்பது பாகங்களாகத் தொகுத்து, இவ்வொன்பது பாகங்களுடன்கூடிய ஸ்ரீதத்துவநிதி என்னும் இந்நூலை இயற்றியிருக்கிறுர். அந்த ஒன்பது நிதிகளுக்கும், முறையே சக்தி தத்துவநிதி 1. விஷ்ணு தத்துவநிதி 2. சிவதத்துவநிதி 3. பிரஹ்ம தத்துவநிதி 4. கிரஹ தத்துவநிதி 5. வைஷ்ணவ தத்துவநிதி 6. சைவதத்துவநிதி 7. ஆகம தத்துவ நிதி 8. கௌதுக தத்துவ நிதி 9. என்று பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இந்த ஒன்பது நிதிகளுள் முதலாவது நிதியான சக்தி தத்துவநிதியில், ஸ்ரீ சாமுண்டா தேவியின் தியானத்தைத் துவக்கி புவனை, திரிபுரை, அன்னபூரணை முதலியவர்களுடைய தியானங்களும், காமேசுவரி முதலியவர்கள், பிராம்ஹீ முதலியவர்கள், தண்டினீ, மந்திரிணீ முதலியவர்கள், அஷ்டலக்ஷ்மிகள், நவ துர்கைகள், நித்யாதேவிகள்

முதலியவர்களின் தியானங்களும், ஆக 239 சாக்த தேவதைகளின் தியானங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

இரண்டாவது விஷ்ணு தத்துவநிதியில், விராட்புருஷ தியானத்தைத் துவக்கி, சதுர்வியூஹமூர்த்திகள், கேசவாதி 24 மூர்த்திகள், தசாவதார மூர்த்திகள், முதலிய 76 விஷ்ணு மூர்த்திகளின் தியானங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

மூன்றாவது சிவதத்துவநிதியில், சாம்பபரமேசுவர தியானம் துவக்கி, ஸதாசிவ நீலகண்ட மஹாகோராதி மூர்த்திகள், ஸத்யோஜாதாதி பஞ்சமூர்த்திகள், ஸப்த 7 தாண்டவமூர்த்திகள், பவாதி அஷ்ட 8 மூர்த்திகள், ஏகாதச 11 ருத்திரர்கள், சந்திரசேகரர் முதலிய 25 லீலா மூர்த்திகள், 32 கணேசமூர்த்திகள், 17 ஸுப்ரஹ்மண்ய மூர்த்திகள், கட்க ராவண அஷ்டபைரவ சண்டிகேசாதிகளான 131 தேவதைகளின் மூர்த்தி தியானங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

நான்காவது பிரஹ்ம தத்வநிதியில், சதுர்முக மூர்த்தி தியானத்தைத் துவக்கி, 5 பிரஹ்மாக்கள், மரீசி முதலிய 9 பிரஜேசர்கள், ஸப்த 7 ரிஷிகள், வேதங்கள் வேதாங்கங்கள் முதலியவைகளின் அதிதேவதைகள், சதுஷ்ஷஷ்டி 64 கலைகளின் அதிதேவதைகள், திக்பாலகர்கள், அஷ்ட 8 வஸுக்கள், தச 10 விசுவேதேவர்கள், 14 மனுக்கள் முதலான 176 தேவதைகளின் தியானங்கள் கூறப்பட்டிருக்கின்றன. இந்தநான்கு நிதிகளுடன் கூடியது, ஸ்ரீதத்துவநிதி என்னும் இந்நூலின் முதலாவது பாகமாகும்.

இந்நூலின் பெரும்பகுதியான கிரஹதத்துவநிதி என்னும் ஐந்தாவது நிதியானது இரண்டாவது பாகமாகும்.

இரண்டாவது பாகமான கிரஹ நிதியில், ஒன்பது கிரஹங்கள், அவர்களின் அதிதேவதைகள், பிரத்தியதி தேவதைகள் இவர்களின் தியானங்கள், வருஷம் அயனம், ருது, மாஸம், திதி, வாரம், நக்ஷத்திரம், யோகம், கரணம், இவைகளுடையவும், இவைகளின் அதிதேவதைகளின் தியானங்களும், பலவிதமான மகர ஸங்கிராந்தி தேவதா தியானங்களும், கூறப்பட்டிருக்கின்றன

வருஷங்கள், மாஸங்கள், திதி–வார-நக்ஷத்திர–யோக கரணங்களில் பிறந்தவர்களின் பலன்களும் அவைகளில் செய்யவேண்டிய காரியங்களும், தானங்களும் கூறப்பட்டு இருக்கின்றன.

ஐந்து வருஷங்களைக் கொண்ட யுகங்களின் அதி தேவதைகளின் ஸ்வரூபங்களும், மேஷம் முதலிய ராசி களுடையவும், பகல், இரவு, ஸந்தியா காலங்களுடையவும் ஸ்வரூபங்களும், இரவிலும் பகலிலும் கூறப்பட்டிருக்கின்ற பதினைந்து முஹூர்த்தங்களுடையவும் கலை, காஷ்டை, நிமேஷங்களுடையவும் ஸ்வரூபங்களும் கூறப்பட்டிருக் கின்றன.

ஆருவது நிதிமுதல் ஒன்பதாவது நிதிமுடிய கூறப் பட்டிருக்கின்ற விஷயங்கள், மூன்ருவது பாகத்தில் தெரிவிக்கப்படும்.

ஸம்ஸ்கிருத மொழியிலுள்ள இந்நூலை சீர்திருத்தம் செய்து தமிழில் மொழிபெயர்த்து, மூலத்தை கிரந்தலிபி யிலும், தமிழ் மொழி பெயர்ப்பையும் சேர்த்து, பதிப்பிக்கும் படி, தஞ்சாவூர் ஸ்ரீ ஸரஸ்வதிமஹால் நூல் நிலையத்தின் நிர்வாஹக் குழுவினர் எனக்கிட்ட கட்டளையை ஏற்று, நான் இந்நூலிலுள்ள பிழைகளை திருத்தம் செய்து, தமிழில் மொழிபெயர்த்து, கிரந்தலிபியில் மூலத்தையும், தமிழ்மொழி பெயர்ப்பையும் சேர்த்து, பேருழைப்புடன் இந்நூலை பதிப் பித்திருக்கிறேன்.

எண்ணற்ற தேவதைகளின் தியானங்கள் நிறைந்த இந்நூலானது, பண்டிதபெரியோர்களால் போற்றப்பட்டு, சில்பி சிரேஷ்டர்களின் மகிழ்ச்சிக்குரியதாகத் திகழவேண்டு மென்று எல்லாம்வல்ல இறைவனுன விநாயகக் கடவுளை வேண்டுகிறேன்.

காணேசாத்வைதிவர மந்திரமூர்த்தி
க்ஷே. சம். சுப்ரஹ்மண்ய சாஸ்திரி,
தஞ்சை ஸரஸ்வதி மஹால் ஓய்வு பெற்ற பண்டிட்.

வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால் அவை மக்களுக்கு பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப்புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, "நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்

மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

ஶ்ரீ கணேஶாய நம: ।

ஶ்ரீதைத்திரீய ஆரண்யகஸ்ய ப்ரஶ்நஸ்ய (ஸூர்யநமஸ்காரஸ்ய)

விஷயாநுக்ரமணிகா ॥

ஶயநயோ: கதிவ்யஷாரேஷு —

இதி பஞ்சமஸ்ய ப்ரஶ்நஸ்ய விஷயானுக்ரமணிகா ஸமாப்தா ||

ஶ்ரீதத்த்வநிதௌ ஷஷ்டஸ்ய க்ரஹநிதே:

ஶுத்தாஶுத்தபாட: |

ப்ருஷ்டே	பங்க்தௌ	அஶுத்தபாட:	ஶுத்தபாட:
498	22	ஸஹயம்தர	ஸஹயங்கர
522	14	தீப-ஜீவீ	தீவ-ஜீவீ
542	9	உஷ்டாவி	உஷ்டாஹி
567	2	த்யாதித்ய	நிஶீதி
576	4	உமாமஹேஶ்வர	உமாமஹேஶ்வர
628	16	வித்ர	வித்ர
675	24	வியாநகம்	வியாநகம்
720	8	ஸ்வாஷ	ஸ்வாஷ
743	17	வஜ்ரா	வஜ்ர்யா
801	15	ஸ்வாந	ஸ்வாவந
853	3	யாந்த்ய	யாந்த்ய
928	24	வ்ருணிதி	வ்ருணதி
962	4	தைதேரு	தைதேரு
998	6	உதாரா	உதாரா
1008	14	உம்ரஹா ஸெவ	உம்ரஹஸெவா
1027	4	வணோ:	வணோ
1041 / 1048	—	சநுக்ஷ-சக்ஷு	சநுள-சகுள

ஸ்ரீ தத்துவநிதி 5வது கிரஹநிதியில் சுத்தாசுத்த பாடம்

பக்கம்	வரி	அசுத்த பாடம்	சுத்த பாடம்
573	26	வைத்வ தலை	வைத்தலை
618	4	மாக	மாகவும்
637	22	பாளாக	பாராக
637	23	அர்மா	அர்யமா
657	18	பாம்ப	பாம்பு
721	2	3க்ஷ	4
828	21	நேக்கு	நோக்கு

ஸ்ரீதத்துவநிதியில் ஐந்தாவது கிரஹநிதியின் விஷயானுக்ரமணிகை.

ஐந்தாவது க்ரஹரிதியின் விஷயானுக்ரமணிகை
முற்றும்

𑌅𑌥 𑌶𑍍𑌰𑍀𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌨𑌿𑌧𑍌

𑌪𑌞𑍍𑌚𑌮𑍋 𑌗𑍍𑌰𑌹𑌨𑌿𑌧𑌿𑌃 ‖

𑌅𑌧𑌿𑌦𑍇𑌵𑌤𑌾𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌧𑌿𑌦𑍇𑌵𑌤𑌾𑌸𑌹𑌿𑌤
𑌨𑌵𑌗𑍍𑌰𑌹𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌣𑌿.

(𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑍍𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑍇 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌸𑍍𑌵𑌾𑌮𑍀𑌯 𑌵𑌾𑌕𑍍𑌯𑍈𑌃,
𑌶𑍍𑌲𑍋𑌕𑍈𑌶𑍍𑌚𑍋𑌦𑍍𑌧𑍃𑌤𑍇)

𑍧. 𑌤𑌤𑍍𑌰𑌾𑌦𑍌 𑌸𑍂𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

𑌭𑌗𑌵𑌾𑌨𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑍋 𑌗𑍍𑌰𑌹𑌾𑌧𑌿𑌪𑌤𑌿𑌃 𑌕𑌾𑌶𑍍𑌯𑌪𑌗𑍋𑌤𑍍𑌰𑌃 𑌕𑌲𑌿𑌙𑍍𑌗𑌦𑍇𑌶𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌶𑍂𑌰𑌂 𑌵𑌿𑌶𑌾𑌖𑌾𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌜𑌾𑌤𑌜𑌪𑌾𑌪𑍁𑌷𑍍𑌪𑌾𑌵𑌭𑌾𑌸𑌦𑍍𑌯𑍁𑌤𑌿𑌤𑍇 𑌦𑍍𑌵𑌿𑌭𑍁𑌜 𑌪𑌦𑍍𑌮𑌾𑌭𑌯𑌹𑌸𑍍𑌤 𑌸𑌿𑌨𑍍𑌦𑍂𑌰𑌵𑌰𑍍𑌣𑌾𑌮𑍍𑌬𑌰𑌮𑌾𑌲𑍍𑌯𑌾𑌨𑍁𑌲𑍇𑌪𑌨 𑌸𑍍𑌵𑌰𑍍𑌣𑌮𑌾𑌣𑌿𑌕𑍍𑌯𑌖𑌚𑌿𑌤𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣 𑌹𑌸𑍍𑌤𑌤𑍇𑌜𑍋𑌨𑌿𑌧𑍇 𑌤𑍍𑌰𑌿𑌲𑍋𑌕𑍀𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌕 𑌦𑍇𑌵𑌤𑌾𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌮𑍂𑌰𑍍𑌤𑌿 𑌨𑌮𑌸𑍍𑌤𑍇। 𑌸𑌞𑍍𑌜𑍍𑌞𑌾𑌸𑍍𑌵𑌰𑍍𑌣𑌪𑌤𑌾𑌕𑍋𑌪𑌶𑍋𑌭𑌿𑌤𑍇𑌨 𑌸𑌪𑍍𑌤𑌾𑌶𑍍𑌵𑌰𑌥𑌵𑌾𑌹𑌨𑍇𑌨𑌕𑌪𑌚𑍍𑌚𑍇𑌣 𑌰𑌥𑍇𑌨 𑌮𑍇𑌰𑍁𑌂 𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍀𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍 𑌛𑌾𑌯𑌾𑌸𑌂𑌜𑍍𑌞𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌸𑌹 𑌪𑌦𑍍𑌮𑌿𑌨𑍀𑌪𑍁𑌷𑍍𑌕𑌾𑌯𑌾𑌂 𑌤𑌾𑌮𑍍𑌰𑌪𑍀𑌠𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌙𑍍𑌮𑍁𑌖𑌵𑌰𑍍𑌤𑍁𑌲𑌪𑌦𑍍𑌮𑌮𑌧𑍍𑌯𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑌂 𑌸𑌾𑌙𑍍𑌗𑌂 𑌸𑌾𑌯𑍁𑌧𑌂 𑌸𑌶𑌕𑍍𑌤𑌿𑌕𑌂 𑌸𑌪𑌤𑍍𑌨𑍀𑌕𑌂 𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌤𑍍 ‖

𑌪𑌦𑍍𑌮𑌾𑌸𑌨𑌃 𑌪𑌦𑍍𑌮𑌕𑌰𑌃 𑌪𑌦𑍍𑌮𑌗𑌰𑍍𑌭𑌸𑌮𑌦𑍍𑌯𑍁𑌤𑌿𑌃 ।
𑌸𑌪𑍍𑌤𑌾𑌶𑍍𑌵𑌰𑌥𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌦𑍍𑌵𑌿𑌭𑍁𑌜𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌸𑌦𑌾 𑌰𑌵𑌿𑌃 ‖

ஸ்ரீ தத்துவநிதியில்

ஐந்தாவது கிரஹநிதி

(பிரயோகரத்நத்தில் நாராயணபட்டீயத்தில் வாக்கியங் களினுலேயும், மயூகத்தில் சுலோகங்களினுலேயும் கூறப்பட்டு இருக்கின்றன.)

1. அவைகளுள் முதலாவது ஸூரிய த்யாநம்

பகவானுன ஹே ஆதித்திய, கிரகங்களுக்கு அதிபதியாக இருப்பவரும், காசியப கோத்திரத்தில் பிறந்தவரும், கலிங்க தேசத்திற்கு அதிபதியானவ்ரும், ஸப்தமீ திதியில் விசாகா நக்ஷத்திரத்தில் ஜநித்தவரும், சம்பரத்தம்பூவைப்போன்ற சரீர சோபையையுடையவரும், 2 கைகளையுடையவரும், தாமரை மலரையும், அபயத்தையும் கைகளில் தரிப்பவரும், ஸிந்தூர நிறமான ஆடை, மாலை சந்தனங்களை அணிந் திருப்பவரும், ஒளி வீசுகின்ற மாணிக்கக் கற்களாலே இழைக்கப்பட்டவைகளும் ஸகல அங்கங்களிலேயும் அணிந்து கொள்ளப்பட்டவைகளுமான ஆபரணங்களை யுடையவரும், பிரகாசமான தேஜஸ்ஸுக்கு இருப்பிடமாக இருப்பவரும், மூன்று உலகங்களையும் பிரகாசிக்கச் செய் கின்றவரும், தேவனும், மூன்று தேவர்களின் வடிவமான வருமான தங்களை வணங்குகின்றேன்.

நன்கு விறிந்து அணியாக விளங்குகின்ற பதாகையுடன் (துவஜத்துடன்) பிரகாசிப்பதும், 7 குதிரைகளுடன் கூடியதும், ஒரே சக்கரமுடையதுமான ரதத்துடன், மேரு பர்வதத்தை வலம் வருவாயாக. அக்கிநி ருத்திரன் இவர் களுடன், செம்பினுலான பிரதிமையில் (யந்திரத்தில்) பத்மகர்ணிகையில் கிழக்குமுகமான வட்டவடிவமான பீடத்தில் அமருவீராக, என்று கூறி, அங்கங்களுடனும் ஆயுதங்களுடனும் சக்திகளுடனும் கூடியவராக (ஸூரியனை)த்யாநம் செய்யவேண்டும்,

ஸூரியனுனவர், எப்பொழுதும் 2 கைகளுடையவரும், பத்மாஸநத்தில் வீற்றிருப்பவரும், பத்மத்தைக் கையிலேந்தியிருப்பவரும், பத்மத்தின் மத்தியபாகத்தைப்போன்ற சரீர சோபையையுடையவரும், 7 குதிரைகளுடன்கூடிய ரதத்திலிருப்பவருமாவார்.

௨. அத சதுர்வக்த்ர ஸூர்ய த்யானம்.

(சாரதாதிலகே)

ஹேமாம்போஜப்ரவாளப்ரதிமநிஜருசிம் சாரு
 கட்வாங்கபத்மௌ
சக்ரம் சக்திம் ச பாசம் ஸ்ருணிமதிருசிரம்
 அக்ஷமாலாம் கபாலம் ।
ஹஸ்தாம்போஜைர்ததானம் த்ரிநயனவிலஸத்வேத
 வக்த்ராபிராமம்
மார்த்தாண்டம் வல்லபார்த்தம் மணிமயமகுடம் ஹாரதீப்தம்
 பஜாம: ॥
(வித்யார்ணவே)

2. 4 முகங்களுள்ள ஸூரிய த்யாநம்.

(சாரதாதிலகத்தில்)

தங்கத்தாமரையின் குறுத்துபோன்ற தனது உடல் வண்ணத்தையுடையவரும், அழகான கட்வாங்கம் 1, பத்மம் 2, சக்கரம் 3, சக்தி 4, பாசம் 5, அங்குசம் 6, மிகவும் அழகான ஜபமாலை 7, கபாலம் 8 இவைகளைத் தாமரைமலர் போன்ற கைகளில் தரித்திருப்பவரும், 3 கண்களுடன் விளங்குகின்ற 4 முகங்களுடன் அழகாகப் பிரகாசிப்பவரும், மனைவிகளுடன் விளங்குகின்றவரும், ரத்தினங்களாலான கிரீடத்தையணிந்திருப்பவரும், வைரத்தைப்போன்று அல்லது வைர ஆபரணங்களுடன் பிரகாசிப்பவருமான ஸூரிய பகவானை வணங்குவோமாக, (பவழநிறம்)

ஹ்ரீகாராம்தரேண த்யாநம்.

(ஸாரதாதிலகே)

ரக்தாம்புஜாஸநமஶேஷகுணைகஸிந்தும்
பாநும் ஸமஸ்தஜகதாமதிபம் பஜாமி ।
பத்மத்வயாபயவராந் தததம் கராப்ஜை:
மாணிக்யமௌலிமருணாங்கருசிம் த்ரிணேத்ரம் ॥

(ரக்தவர்ண:)

மற்றொருவிதமான த்யாநம்.

(சாரதா திலகத்தில்)

செந்தாமரை மலரில் வீற்றிருப்பவரும், ஸகல குணங்களுக்கும் ஓரே கடலாக விளங்குகின்றவரும், (ஸத்துவம், ரஜஸ், தமஸ் என்னும் 3 குணங்களும் ஸமமாக இருக்கின்ற குணத்ரயஸாமியமூர்த்தியாக இருப்பவரும்) ஸகல ஜகத்திற்கும் அதிபதியாக விளங்குகின்றவரும், 2 தாமரை மலர்கள், அபயம். வரதம் இவைகளை கைகளில் தரிப்பவரும் மாணிக்கக்கற்களாலான கிரீடத்தையணிந்திருப்பவரும், சிவப்பான உடல் வண்ணத்தையுடையவரும், 3 கண்களை யுடையவருமான ஸூரியனை வணங்குகின்றேன். (சிவப்பு நிறம்)

௩. அத ஸூர்யாதிதேவதாக்நி த்யாநம்.

பிம்கப்ரூர்த்வகேஶ: பிம்காக்ஷித்ரயோ
த்ராவர்ண: ।
சாகஸ்த: ஸாக்ஷஸூத்ரஸ்ச வரத: ஶக்திதாரக: ॥

(ஸுவர்ணவர்ண:)

3. ஸூரியனுக்கு அதிதேவதையான அக்கிநி த்யாநம்.

அக்னி பகவான் பொன்னிறமான புருவம் மீசை தாடிகளையுடையவரும், பொன்னிறமான 3 கண்களையுடையவரும், சிவப்பு நிறமானவரும், ஆட்டுக்கடா வாஹநத்தில் வீற்றிருப்பவரும், ஜபமாலை, வரதம் சக்தியாயுதம் இவைகளை தரிப்பவருமாவார்.

ச. அத ஸூர்யப்ரத்யதிதேவதாருத்ர த்யாநம்.

பஞ்சவக்த்ரோ வ்ருஷாரூடஃ ப்ரதிவக்த்ரம் த்ரிலோசநஃ ।
கபாலஶூலகட்வாங்கபிநாகீ சந்த்ரஶேகரஃ ஶிவஃ ॥
(ஶ்வேதவர்ணஃ)

4. ஸூரியனுக்கு பிரத்தியதிதேவதையான ருத்திர த்யாநம்.

ஸூரியனுக்கு பிரத்தியதிதேவதையான பரமேசுவரன் 5 முகங்களுடையவரும், விருஷப வாஹநத்தில் வீற்றிருப்பவரும், ஒவ்வொரு முகத்திலும் மூன்று மூன்று க்ண்களையுடையவரும், கபாலம், சூலம், கட்வாங்கம், பிநாகம் இவைகளை தரிப்பவரும், சந்திரகலையை சிரத்திலுடையவருமாவார். (வெளுப்பு நிறம்)

ரு. அத சந்த்ர த்யாநம்.

ஹிமவத்ஸு ஶோரஶிஜாயிவதே ஸ்வாசயபூர்ணாத்ரி நேத்ர யாமேந தேஶேஷ்வர நேத்ரக்ஷீரயவஹாஜ்ஜம்ப்வதே விஹ்ஜ மஹாவரஹாங்கிதகர ஶ்ருங்காரபாரஹ்ருதாந தேவந ஶக்திகாஹரண ரமணீய ஸம்ஸ்ருஜோகாவ்யாயக தேவதாஸ்வாஹாஸுதே நமஸ்தே । ஸகலஜகஜ்ஜயஜோவஶோபிதேந ஶ்வாஸ்ஸவாஹநேந தேவம் ப்ரதக்ஷிணீக்ருத்ய ஸ்ரமஷாஹிஸ்ஸயா ஸஹ ப்ரதா

ஶ்ரேயஸ்ஸம்ருத்³த்⁴யை ஸ்பா²டிகப்ரதிமாம் ப்ராங்முகீ²ம் சதுரஶ்ர
பீடே²தி⁴திஷ்ட²தி ஸபத்நீகம் ஸாயுத⁴ம் ஸாங்க³ம்
சந்த்³ரம் பா⁴வயேத் ॥

ஶ்வேத꞉ ஶ்வேதாம்ப³ரத⁴ரோ த்³விபு⁴ஜ꞉ ஶ்வேதபூ⁴ஷண꞉ ।
க³தா³பாணிர்த்³விபா³ஹுஶ்ச கர்தவ்யோ வரத³꞉ ஶஶீ ॥

(ஶ்வேதவர்ண꞉)

5. சந்திர த்யாநம்.

பிராம்ஹணர்களுக்கு அதிபதியாக இருப்பவரும், அமிருதமயமான சரீரத்தையுடையவரும், அத்திரி முனிவரின் கோத்திரத்தில் உதித்தவரும், யமுனை நதியையடுத்துள்ள தேசத்திற்கு அரசனாக இருப்பவரும், பசும் பாலைப்போல வெளுப்பான சரீரகாந்தியையுடையவரும், 2 கைகளையுடையவரும், கதையையும் வரதத்தையும் கைகளில் வஹிப்பவரும், வெளுப்பான ஆடை, மாலை சந்தனம் இவைகளை அணிந்திருப்பவரும், முத்துக்களினாலான ஆபரணங்களையணிந்து அழகாக விளங்குகின்றவரும், ஸகலலோகங்களையும் உயிர்ப்பிக்கின்றவரும், தேவர்களுள் முதலில் தோன்றியவரும், பகவானுமான ஹே சந்திர, தங்களை நமஸ்கரிக்கின்றேன்.

நன்கு கட்டப்பட்ட வெண்மையான துவஜத்தினாலே பிரகாசிக்கின்ற 10 குதிரைகளுடன்கூடிய ரதத்துடன், மேரு பர்வதத்தை வலமாக வரவேண்டும். அப்பு (தேவதை) களுடனும் உமாதேவியுடனும் பத்மத்தின் அக்கினி திக்கிலுள்ள தளமத்தியில் சதுரச்ர (சச்சதுரமான) பீடத்தில் கிழக்கு முகமாக இருக்கின்ற ஸ்படிகப்பிரதிமையில் உட்காருவீராக. என்று கூறி, மனைவி, புதல்வன், ஆயுதம் ஆகிய அங்கங்களுடன் கூடிய சந்திரனை த்யாநம் செய்ய வேண்டும்.

சந்திரனானவர் வெளுப்பு நிறமுடையவரும், வெளுப்பு ஆடையையணிந்திருப்பவரும், 10 குதிரைகளுடைய (ரதத்திலிருப்ப) வரும், வெண்மையான ஆபரணங்களையணிந்திருப்பவரும், கதையை கையில் வைத்துக்கொண்டிருப்பவரும், வரதஹஸ்தமுடையவரும். 2 கைகளுடையவருமாவார். இவ்வித லக்ஷணங்களுடன் சந்திரனைக் கல்பிக்க வேண்டும். (வெளுப்பு நிறம்)

𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌾𑌨𑍍𑌤𑌰𑍇𑌣 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

(𑌶𑌾𑌰𑌦𑌾𑌤𑌿𑌲𑌕𑍇)

𑌕𑌰𑍍𑌪𑍂𑌰𑌸𑍍𑌫𑌟𑌿𑌕𑌾𑌵𑌦𑌾𑌤𑌮𑌨𑌿𑌶𑌂 𑌪𑍂𑌰𑍍𑌣𑍇𑌨𑍍𑌦𑍁
𑌬𑌿𑌮𑍍𑌬𑌾𑌨𑌨𑌂
𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌹𑌾𑌰𑌵𑌿𑌭𑍂𑌷𑌿𑌤𑍇𑌨 𑌵𑌪𑍁𑌷𑌾 𑌨𑌿𑌰𑍍𑌮𑍂𑌲𑌯𑌨𑍍𑌤𑌂 𑌤𑌮𑌃 ।
𑌹𑌸𑍍𑌤𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌕𑍁𑌮𑍁𑌦𑌂 𑌵𑌰𑌂 𑌚 𑌦𑌧𑌤𑌂 𑌨𑍀𑌲𑌾𑌲𑌕𑍋
𑌦𑍍𑌭𑌾𑌸𑌿𑌤𑌂
𑌸𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌙𑍍𑌕𑌸𑍍𑌥𑌮𑍃𑌗𑍋𑌦𑌿𑌤𑌾𑌶𑍍𑌰𑌯𑌗𑍁𑌣𑌂 𑌸𑍋𑌮𑌂
𑌸𑍁𑌧𑌾𑌬𑍍𑌧𑌿𑌂 𑌭𑌜𑍇 ॥

(𑌶𑍍𑌵𑍇𑌤𑌵𑌰𑍍𑌣𑌃)

மற்றொருவிதமாக சந்திர த்யானம்.

(சாரதா திலகத்தில்)

பச்சைக்கற்பூரம், ஸ்படிகம் இவைகளைப்போல் வெளுப்பாக இருப்பவரும், பூர்ணமான சந்திரபிம்பத்தைப் போன்ற முகமுடையவரும், முத்துமாலைகளையணிந்திருக்கின்ற சரீரகாந்தியினாலே இருளை முற்றிலும் நாசம் செய்பவரும், இரு கைகளிலும் ஆம்பல், வரதம் இவைகளை தரிப்பவரும், நீலமான அளகங்களுடன் விளங்குகின்றவரும் (அளகம்—முன்னுச்சிமயிர்) தனது மடியிலிருக்கின்ற மானினாலே கூறப்பட்ட ஆச்ரயகுணத்தையுடையவரும்,

அமிருத ஸமுத்திரமாக இருப்பவருமான சந்திரனை வணங்குகின்றேன். (வெளுப்பு நிறம்.)

௬. 𑌅𑌥 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌧𑌿𑌦𑍇𑌵𑌤𑌾𑌨𑌾𑌮𑌪𑌾𑌂 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

𑌆𑌪𑌃 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌰𑍂𑌪𑌧𑌾𑌰𑌿𑌣𑍍𑌯𑌃 𑌶𑍍𑌵𑍇𑌤𑌾 𑌮𑌕𑌰𑌵𑌾𑌹𑌨𑌾𑌃 ।
𑌦𑌧𑌾𑌨𑌾𑌃 𑌪𑌾𑌶𑌕𑌲𑌶𑍌 𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌭𑌰𑌣𑌭𑍂𑌷𑌿𑌤𑌾𑌃 ॥
(𑌶𑍍𑌵𑍇𑌤𑌵𑌰𑍍𑌣𑌾𑌃)

6. சந்திரனுக்கு அதிதேவதையான அப்புக்களின் த்யாநம்.

சந்திரனுக்கு அதிதேவதைகளான அப்புக்கள் பெண்ணுருவத்தை தரித்திருப்பவைகளும், வெளுப்பு நிறமானவைகளும், மகர வாஹநத்திலிருப்பவைகளும், பாசம், கலசம் இவைகளை தரித்திருப்பவைகளும், முத்துக்களாலான ஆபரணங்களை அணிந்திருப்பவைகளுமாம். (வெளுப்பு நிறம்)

௭. 𑌅𑌥 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌧𑌿𑌦𑍇𑌵𑌤𑍋𑌮𑌾 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

𑌅𑌕𑍍𑌷𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌚 𑌪𑌦𑍍𑌮𑌂 𑌚 𑌦𑌰𑍍𑌪𑌣𑌂 𑌚 𑌕𑌮𑌣𑍍𑌡𑌲𑍁𑌂 ।
𑌉𑌮𑌾 𑌬𑌿𑌭𑌰𑍍𑌤𑌿 𑌹𑌸𑍍𑌤𑍈𑌸𑍍𑌤𑍁 𑌪𑍂𑌜𑌿𑌤𑌾 𑌤𑍍𑌰𑌿𑌦𑌶𑍈𑌰𑌪𑌿 ॥
(𑌸𑍍𑌵𑌰𑍍𑌣𑌵𑌰𑍍𑌣𑌾)

7. சந்திர பிரத்தியதிதேவதையான உமையின் த்யாநம்.

தேவர்களாலேயும் பூஜிக்கப்பட்ட உமாதேவியானவள், ஜபமாலை, தாமரைமலர், கண்ணாடி, கமண்டலம் இவைகளை கைகளில் தரித்துக்கொண்டிருப்பவளாவாள். (ஸுவர்ண வர்ணம்)

௮. 𑌅𑌥 𑌅𑌙𑍍𑌗𑌾𑌰𑌕 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

𑌭𑍌𑌮𑌾𑌙𑍍𑌗𑌾𑌰𑌕 𑌅𑌵𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌕𑍃𑌤𑍇 𑌭𑌰𑌦𑍍𑌵𑌾𑌜𑌸𑌗𑍋𑌤𑍍𑌰

அவந்திதேஶேஶ்வரம் ஶ்ரவண நக்ஷத்ரோத்பந்நம் ஜ்வாலா வர்ணோபேதம் சதுர்புஜோபேதம் ஶக்திஶூலகதாகட்வாங்க தாரிணம் ரக்தாம்பரமால்யாநுலேபந ப்ரவாலாபரண பூஷிதஸகலாங்கோபேதம் ஸுதேஜோகலிதம் நமாமி । ஸம்பத்தரக்தத்வஜோபஶோபிதேந ரக்தமேஷாஷ்டரத வாஹநேந மேரும் ப்ரதக்ஷிணீகுர்வாணம் பஜே । ஸூர்ய ஸ்யாக்ரம் ஸஹ வஹ்நிதக்ஷிணமத்யே ரக்தவர்ண ப்ரதிமாம் தக்ஷிணாபிமுகீம் த்ரிகோணபீடஸ்திதாம் । இதி ஸாங்கம் ஸாயுதம் ஸபத்நீகம் பாவயேத் ॥

ரக்தமால்யாம்பரதர: ஶக்திஶூலகதாதர: ।
சதுர்புஜோ மேஷகத: வரத: ஸ்யாத் தராஸுத: ॥
(ரக்தவர்ண:)

8. அங்காரக த்யாநம்

அக்கினி வடிவமுடையவரும், பரதுவாஜ கோத்திரத்தி லுதித்தவரும், அவந்தி தேசத்திற்கு அரசனாக இருப்பவரும் திருவோண நக்ஷத்திரத்திலுதித்தவரும், தீச்சுடர்போன்ற உடல் வண்ணத்தையுடையவரும், 4 கைகளையுடையவரும், சக்தி, சூலம், கதை, கட்வாங்கம் இவைகளையேந்தியிருப்ப வரும், சிவப்பு நிறமான ஆடை, மாலை, சந்தனங்களை அணிந்திருப்பவரும், பவழங்களாலான ஆபரணங்களை யணிந்து துலங்கும் ஸகல அங்கங்களையுமுடையவரும், காணத்தக்க ஒளியையுடையவரும், பகவானுமான ஹே அங்காரக தங்களை வணங்குகின்றேன்.

கட்டப்பட்டிருக்கின்ற சிவப்பு துவஜத்துடன் விளங்கு கின்ற சிவப்பு நிறமுடைய 8 மேஷங்கள் (செம்மரியாடுகள்) பூட்டப்பட்ட ரதமாகிய வாஹநத்துடன் மஹாமேரு மலையை வலமாக வரவேண்டும்.

பூமிதேவி முருகன் இவர்களுடன் பத்மத்தின் தென் பக்கத்திலிருக்கும் இதழின் நடுவில் தெற்குமுகமான முக்கோண வடிவமான பீடத்தில் சிவப்பு சந்தனப் பிரதிமையில் அமருவீராக. என்றுகூறி, அங்கங்களுடனும் ஆயுதங்களுடனும் மனைவியுடனுமிருக்கின்ற அங்காரகனை பாவிக்கவேண்டும்.

அங்காரகனெனவர் சிவப்பு மாலை, சிவப்பு ஆடை தரித்திருப்பவரும், 4 கைகளுடையவரும், சக்தி, சூலம் கதைகளை தரித்திருப்பவரும், வரதஹஸ்தமுடையவரும், ஆட்டுக்கடா வாஹநத்தில் செல்லுகின்றவருமாவர். (சிவப்பு நிறம்.)

௯. அத அங்காரகாதிதேவதாபூமி த்யாநம்.

ஶுக்லவர்ணா ஶ்ரீ காயஶ்ச திவ்யாபரணபூஷிதா ।
சதுர்புஜா ஸௌம்யவபுஶ்சண்டாம்ஶுஸத்ருஶாம்பரா ॥
ரத்நபாத்ரம் ஸஸ்யபாத்ரம் பாத்ரமோஷதிஸம்யுதம் ।
பத்மம் கரே ச தத்யாத்யா ஸோ தேவீ யாதவநந்தந ॥ ௨ ॥
திக்ஜாநாம் சதுர்ணாம் ஸா காயஶ்ச வர்ஷ்மதா
ததா ।
(ஶ்வேதவர்ணா)

9. அங்காரகாதிதேவதையான பூமி த்யாநம்.

ஹே கிருஷ்ண, திவ்யமான ஆபரணங்களையுடையவளும், 4 கைகளுடையவளும், ஸௌம்யமான சரீரத்தையுடையவளும், ஸூரியனைப்போல் பிரகாசமான ஆடையையணிந்திருப்பவளுமான பூமிதேவியை, வெளுப்புநிறமுடையவளாகக் கல்பிக்கவேண்டும்.

அந்த பூமிதேவியின் கைகளில், ரத்நங்கள் நிறைந்த

பாத்திரம், தானியங்கள் நிறைந்த பாத்திரம், ஓஷதிகள் நிறைந்த பாத்திரம், தாமரை மலர் இவைகளைக் கல்பிக்க வேண்டும்.

அந்த பூமிதேவியை, 4 திக்கஜங்களின் முதுகின்மீது வீற்றிருப்பவளாகவும் கல்பிக்கவேண்டும். (வெளுப்புநிறம்)

௯. அத அங்காரகப்ரத்யதிதேவதா ஸ்கந்த த்யானம்.

ஸ்கந்த: ஷண்முகோ தேவ: ஶிகிவாஹநபூஷண: |
ரக்தாம்பரதரோ தேவ: மயூரவரவாஹந: || ௧ ||

குக்குடம் ச ததா கண்டாம் தஸ்ய தக்ஷிணஹஸ்தயோ: |
பதாகா வைஜயந்தீ ஸ்யாச் ஶக்தி: ஸ்கந்தஸ்ய ச
வாமயோ: || ௨ ||

(பாடலவர்ண:)

10. அங்காரக ப்ரத்தியதிதேவதையான ஸ்கந்த த்யாநம்.

மயில் தோகையை அணிந்திருப்பவரும், சிவப்பு ஆடையையணிந்திருப்பவரும், சிறந்த மயில் வாஹநத்தில் வீற்றிருப்பவருமான குமாரனை, 6 முகங்களுடன் கல்பிக்க வேண்டும். அவருடைய வலது கைகளில், கோழி, மணி இவைகளையும், இடது கைகளில், வைஜயந்திபதாகை சக்தியாயுதம் இவைகளையும் கல்பிக்கவேண்டும். (பாடல வர்ணம்)

௧௧. அத புத த்யாநம்.

ஹேமவர்ண(ஸௌம்ய) ஸௌம்யரூபதரம் ஸர்வஜ்ஞாநமய அத்ரிகோத்ர ஆத்ரேயம் ப்ரதிஷ்டாநக்ஷேத்ராதிப மகத தேசேஶ்வர கர்ணிகாரவர்ணாம்பரதரம் சதுர்புஜ கட்கசர்மகதாவரதாநாங்கிதகர பீதகந்தமால்யாநுலேபந

𑌉𑌤𑍍𑌤𑍁𑌙𑍍𑌗𑌹𑌰𑌿𑌦𑍍𑌵𑌰𑍍𑌣𑌧𑍍𑌵𑌜𑌾𑌲𑌙𑍍𑌕𑍃𑌤 𑌸𑌚𑌤𑍁𑌸𑍍𑌸𑌿𑌂𑌹𑌯𑍁𑌕𑍍𑌤𑍇 𑌵𑌿𑌰𑌾𑌜
𑌮𑌾𑌨𑍇 𑌰𑌥𑍇 । 𑌸𑌕𑌲𑌸𑍁𑌵𑌰𑍍𑌣𑌨𑌿𑌰𑍍𑌮𑌿𑌤𑌛𑌤𑍍𑌰𑌶𑍋𑌭𑌿𑌤𑍇 𑌚
𑌚𑌤𑍁𑌸𑍍𑌸𑌿𑌂𑌹𑌰𑌥𑌵𑌾𑌹𑌨𑍇 𑌮𑍇𑌰𑍁𑌂 𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍀𑌕𑍁𑌰𑍍𑌵𑌾
𑌣𑌾𑌯 । 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌸𑌹 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌾𑌯
𑌉𑌦𑍍𑌯𑌤𑍍 𑌸𑍌𑌵𑌰𑍍𑌣𑌰𑌤𑍍𑌨𑌖𑌚𑌿𑌤 𑌬𑌾𑌣𑌾𑌕𑌾𑌰
𑌪𑍀𑌠𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌯 𑌸𑌾𑌙𑍍𑌗𑌂 𑌸𑌾𑌯𑍁𑌧𑌂 𑌸𑌪𑌰𑌿𑌵𑌾𑌰𑌂
𑌸𑌶𑌕𑍍𑌤𑌿𑌂 𑌭𑌾𑌵𑌯𑍇𑌤𑍍 ॥

𑌪𑍀𑌤𑌸𑍍𑌰𑌗𑌂𑌬𑌰𑌧𑌰𑌃 𑌕𑌰𑍍𑌣𑌿𑌕𑌾𑌰𑌸𑌮𑌦𑍍𑌯𑍁𑌤𑌿𑌃 ।
𑌖𑌡𑍍𑌗𑌚𑌰𑍍𑌮𑌗𑌦𑌾𑌪𑌾𑌣𑌿𑌃 𑌸𑌿𑌂𑌹𑌸𑍍𑌥𑍋 𑌵𑌰𑌦𑍋 𑌬𑍁𑌧𑌃 ॥
(𑌕𑌨𑌕𑌵𑌣𑍍𑌡𑍁𑌃)

11. புத த்யாநம்.

பெருமையுடைய ஹே புத, அழகான மேனியை யுடையவனே, ஸகல ஜ்ஞாநமயமாக இருப்பவனே, அத்திரியின் கோத்திரத்திலுதித்தவனே துவாதசியன்று அவிட்ட நக்ஷத்திரத்தில் ஜனித்தவனே, மகதநாட்டிற்கு அதிதேவதையாக இருப்பவனே, குங்குமத்தின் நிறத்தைப் போன்ற சரீரகாந்தியையுடையவனே, 4 கைகளை யுடையவனே, கைகளில், கத்தி, கேடயம், கதை, வரதம் இவைகளை தரிப்பவனே, மஞ்சள் நிறமான மாலை, சந்தனம் இவைகளை தரிப்பவனே, மரகதக்கற்களாலே செய்யப்பட்ட ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட ஸகல அங்கங்களையு முடையவனே, வித்துவான்களுக்கு இஷ்டமானவனே உன்னை வணங்குகின்றேன்.

உயரத்தூக்கிக்கட்டப்பட்டிருக்கின்ற பச்சை நிறமான துவஜத்தினாலே பிரகாசிக்கின்ற நான்கு சிங்கங்கள் பூட்டப் பட்ட ரதவாஹநத்துடன், மேரு பர்வதத்தை பிரதக்ஷிணம் செய்துகொண்டு வரவேண்டும். விஷ்ணு, புருஷன், இவர்

களுடன்கூட, பத்மத்தின் ஈசாநியத்திலிருக்கின்ற தளத்தின் நடுவில், வடக்கு முகமான ஸ்வர்ணமயமான பதுமையில் பாணுகாரமான பீடத்தில் அமரவேண்டும். என்று கூறி, ஆயுதங்கள், பரிவாரங்கள், சக்திகள் இவர்களுடன் பாவனை செய்யவேண்டும்.

புதனுனவர், மஞ்சள்நிறமான மாலையும் ஆடையுமணிந் திருப்பவரும், கர்ணிகார புஷ்பத்தைப்போன்ற நிறமுடையவரும், கத்தி, கேடம், கதை (வரதம்) இவைகளை கைகளில் தரிப்பவரும், சிம்ஹவாஹநத்திலிருப்பவரும், வரங்களையளிப்பவருமாவார். (தங்கநிறம்)

கஉ. அத² பு³த⁴ஸ்யாதி⁴தே³வதா விஷ்ணு த்⁴யாநம்.

விஷ்ணு: கௌமோத³கீ பத்³மஶங்க²சக்ராயுத⁴: க்ரமாத் ।
ப்ரத³க்ஷிணம் த³க்ஷிணாத⁴: கராதா³ரப்⁴ய நித்யஶ: ॥
(ஶ்வேதவர்ண:)

12. புதனுக்கு அதிதேவதையான விஷ்ணுவின் த்யாநம்.

விஷ்ணுவானவர், முறையே, கௌமோதகீ என்னும் கதை, பத்மம், சங்கம், சக்கரம் இவைகளை தரிப்பவராவார். இந்த ஆயுதங்களை எப்பொழுதும், வலதுபக்கம் கீழ்க் கையிலிருந்து வலமாகக் கல்பித்துக்கொள்ளவேண்டும். (வெளுப்பு நிறம்)

கங. அத² பு³த⁴ப்ரத்யதி⁴தே³வதா பூருஷ த்⁴யாநம்.

பூருஷஸ்த்ரிமூர்தி: ஸ்வர்ணவர்ண: சதுர்பு⁴ஜ:
ஶங்க²சக்ரக³தா³பத்³மாயுத⁴: கார்ய: ॥
(ஸ்வர்ணவர்ண:)

13. புதனுடைய பிரத்தியதிதேவதையான புருஷனுடைய த்யாநம்.

புருஷ மூர்த்தியானது, ஸுவர்ணத்தைப்போன்ற நிறமும், 4 கைகளும், கைகளில் சங்கம், சக்கரம், கதை, பத்மம், இவைகளை தரித்திருப்பதாகவும் கல்பிக்கப்பட வேண்டும். (தங்க நிறம்)

௧௪. அத ப்ருஹஸ்பதி த்யானம்.

ஹேமவதோ ப்ருஹஸ்பதிதேவதாயா: ஆங்கி ரஸகோத்ர: ஸிந்துதேசேஶ்வர: பீதவர்ணவஸ்த்ர ஶாந்தமூர்தே: வரதஹஸ்த: தண்டகமண்டல்வக்ஷஸூத்ரதராம் கிதகர: பீதாம்பரதராத்யாபரண: வர்ஷாணாம் ஹரணகாரணீய ஸகலஸம்பத்ப்ராயிணதே நம: | ஸகல பீதபுஷ்போபஶோபிதேந அஷ்டாஶ்வரதவாஹநேந மேரும் ப்ரதக்ஷிணீகுர்வாணாய | ஐம் ப்ரூம் ப்ருஹஸ்பதயே ஸஹ வஷட்காரஸம்யுக்த ஸுவர்ணப்ரதிமாரூபஸ் ரூபம் பீதவஸ்த்ரதரம் ப்ரஸன்னம் திஷ்டது | இதி ஸாங்கம் ஸாயுதம் ஸவாஹனம் ஸபத்நீகம் ஸஶக்திகம் த்யாயேத் ||

அஷ்டபி: பாண்டரைர்யுக்த: வாஜிபி: காஞ்சனே ரதே |
திஷ்டது ததி தேவ வர்ஷம் ராஶௌ ராஶௌ ப்ருஹஸ்பதி: || ௧ ||

தேவதைத்யகுரூ தத்வத் பீதஶ்வேதௌ சதுர்புஜௌ |
தண்டினௌ வரதௌ கார்யௌ ஸாக்ஷஸூத்ர கமண்டலூ || ௨ ||

(கனகவர்ண:)

14. பிருஹஸ்பதி த்யாநம்.

பகவானுன ஹே பிருஹஸ்பதே, ஸகல தேவதைகளுக்குமாசாரியனுக இருப்பவரே, ஆங்கீரஸகோத்திரத்திலுதித்தவரே, ஸிந்துதேசத்திற்கு அதிதேவதையாக இருப்பவரே, பிரகாசமான ஸ்வர்ணம் போன்ற அங்கங்களின் ஒளியையுடையவரே, 4 கைகளையுடையவரே, தண்டம், கமண்டலம், ஜபமாலே, வரதங்களாலே பிரகாசிக்கின்ற கைகளையுடையவரே, மஞ்சள் நிறமான ஆடை, மாலே, சந்தனம் இவைகளை தரித்திருப்பவரே, புஷ்பராகக் கற்களாலான ஆபரணங்களாலே ரமணீயமாக இருப்பவரே, ஸகல வித்தியைகளுக்குமதிபதியாக இருப்பவரே, தங்களை வணங்குகின்றேன்.

பிணைத்துக்கட்டப்பட்ட மஞ்சள் நிறமான துவஜத்தினுலே பிரகாசிக்கின்ற 8 குதிரைகள் பூட்டிய ரதத்துடன், மஹாமேரு மலேயை வலமாக வரவேண்டும். இந்திரன், பிரஹ்மா இவர்களுடன் பத்மத்தின் வடதிசையிலுள்ள இதழின் நடுவில், வடக்கு முகமாக இருக்கின்ற ஸ்வர்ண பிரதிமையில், நீண்ட சதுரச்சிரமான பீடத்தில் உட்காரவேண்டும். என்று, அங்கங்கள், ஆயுதங்கள் பரிவாரங்கள், மனைவிகள், சக்திகள் இவைகளுடன் பாவனை செய்யவேண்டும். (பாவநம்–த்யாநம்)

பிருஹஸ்பதியானவர், 8 வெண்மையான குதிரைகள் பூட்டப்பட்ட தங்க ரதத்தில் அமர்ந்து, ஒவ்வொரு ராசியிலும் ஒவ்வொரு வருஷகாலம் வீதமாக இருந்து வருகின்றவராவார்.

தேவகுரு, தைத்தியகுரு இவ்விருவர்களையும், முறையே, மஞ்சள் நிறமாகவும், வெளுப்பு நிறமாகவும், 4 கைகளையுடையவர்களாகவும், தண்டம், வரதம், ஜபமாலே, கமண்டலம் இவைகளை தரிப்பவர்களாகவும் கல்பிக்கவேண்டும். (தங்க நிறம்) (2)

௧௫. அத² கு³ர்வதி⁴தே³வதேந்த்³ர த்⁴யாநம்.

சதுர்த³ந்தக³ஜாரூடோ⁴ வஜ்ராங்குஶலஸத்கர: ।
ஶசீபதி: ப்ரகர்தவ்ய: நாநாப⁴ரணபூ⁴ஷித: ॥
(ஸ்வர்ணவர்ண:)

15. குருவுக்கு அதிதேவதையான இந்திரனுடைய த்யாநம்.

கிழக்கு திக்குக்கு அதிபதியான இந்திரனை, நான்கு தந்தங்களுடன் கூடிய ஐராவதமென்னும் யானையின் மீது வீற்றிருப்பவனாகவும், வஜ்ராயுதம், அங்குசம் இவைகளை ஏந்தி பிரகாசிக்கின்ற கைகளையுடையவனாகவும், நாநாவித மான ஆபரணங்களையும் அணிந்திருப்பவனாகவும் கல்பிக்க வேண்டும். (தங்க நிறம்)

௧௬. அத² கு³ரோ: ப்ரத்யதி⁴தே³வதாப்³ரஹ்ம த்⁴யாநம்.

பத்³மாஸநஸ்த²ம் ஜடிலம் சதுர்வக்த்ராக்ஷஸூத்ரஸ்ருவ
பாத்ரககமண்ட³லுத⁴ரம் க்ருஷ்ணாஜிநவாஸஸம் பார்ஶ்வ
ஸ்தி²தஹம்ஸம் ப்³ரஹ்மாணம் பா⁴வயேத் ॥
(பாடலவர்ண:)

16. குருவின் பிரத்தியதிதேவதையான பிரஹ்மாவின் த்யாநம்.

பிருஹஸ்பதியின் பிரத்தியதிதேவதையான பிரஹ்ம தேவரை, பத்மாஸநத்திலிருப்பவராகவும், ஜடைகளை தரிப்பவராகவும், மான் தோல் வஸ்திரம் இவைகளை தரிப்பவராகவும், பக்கத்திலிருக்கின்ற அன்னபக்ஷியை யுடையவராகவும் பாவிக்கவேண்டும். (பாடல வர்ணம்)

௧௭. அத² ஶுக்ர த்⁴யாநம்.

𑌭𑌗𑌵𑌨𑍍 𑌭𑌾𑌰𑍍𑌗𑌵 𑌸𑌕𑌲𑌦𑍈𑌤𑍍𑌯𑌗𑍁𑌰𑍋 𑌭𑌾𑌰𑍍𑌗𑌵
𑌗𑍋𑌤𑍍𑌰 𑌭𑍋𑌜𑌕𑌟𑌦𑍇𑌶𑍇𑌶𑍍𑌵𑌰 𑌰𑌜𑌤𑌾𑌭𑌾𑌙𑍍𑌗𑌕𑌾𑌨𑍍𑌤𑍇
𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜 𑌦𑌣𑍍𑌡𑌕𑌮𑌣𑍍𑌡𑌲𑍍𑌵𑌕𑍍𑌷𑌮𑌾𑌲𑌾𑌵𑌰𑌦𑌾𑌨𑌾𑌙𑍍𑌕𑌿𑌤𑌕𑌰
𑌶𑍁𑌕𑍍𑌲𑌾𑌮𑍍𑌬𑌰𑌮𑌾𑌲𑍍𑌯𑌾𑌨𑍁𑌲𑍇𑌪𑌨 𑌵𑌜𑍍𑌰𑌾𑌸𑌨𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤
𑌸𑌰𑍍𑌵𑌾𑌙𑍍𑌗 𑌸𑌕𑌲𑌨𑍀𑌤𑌿𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌪𑍍𑌰𑌵𑍀𑌣𑌾𑌤𑍍𑌮𑌕 𑌨𑌮𑌸𑍍𑌤𑍇 ।
𑌶𑍁𑌕𑍍𑌲𑌯𑌜𑍍𑌞𑍋𑌪𑌵𑍀𑌤𑌶𑍋𑌭𑌿𑌤𑍇𑌨 𑌶𑍁𑌕𑍍𑌲𑌾𑌷𑍍𑌟𑌾𑌶𑍍𑌵𑌰𑌥𑌵𑌾𑌹𑌨𑍇𑌨
𑌮𑍇𑌰𑍁𑌂 𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍀𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑍁 𑌆𑌗𑌚𑍍𑌛 । [illegible]
[illegible] 𑌰𑌜𑌤𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌾𑌂
[illegible]
𑌸𑌾𑌯𑍁𑌧𑌂 𑌸𑌪𑌰𑌿𑌵𑌾𑌰𑌂 𑌸𑌪𑌤𑍍𑌨𑍀𑌕𑌂 𑌸𑌶𑌕𑍍𑌤𑌿𑌂 𑌭𑌾𑌵𑌯𑍇𑌤𑍍 ॥

[illegible] ।
[illegible] ॥ 1 ॥
[illegible] ।
[illegible] ॥
([illegible])

17. சுக்கிர த்யாநம்.

பகவானுன, ஹே பார்கவ (சுக்ர பகவானே) ஸகல அஸுரர்களுக்கும் குருவாக இருப்பவரே, பார்கவ கோத்திரத்திலுதித்தவரே, போஜகடம் என்ற தேசத்திற்கு அதிதேவதையாக இருப்பவரே, வெள்ளியைப்போல் பிரகாசமான சரீரகாந்தியையுடையவரே, 4 கைகளை யுடையவரே, தண்டம், கமண்டலம், ஜபமாலை, வரதம்

இவைகளினாலே பிரகாசிக்கின்ற கைகளையுடையவரே, வெளுப்பான ஆடை, புஷ்பம், சந்தனங்களை தரிப்பவரே, வைரநகைகளாலே அலங்கரிக்கப்பட்ட ஸகல அங்கங்களையு முடையவரே, ஸகல நீதி சாஸ்திரங்களிலும் நுண்ணறிவு படைத்தவரே தங்களை வணங்குகின்றேன்.

வெண்மையான த்வஜத்துடன் பிரகாசிக்கின்ற 8 வெண்குதிரைகளுடன் கூடிய ரதவாஹநத்துடன் மேரு மலையை வலமாக வரவேண்டும்.

இந்திராணீதேவி, இந்திரன் இவ்விருவர்களுடனும், பத்மத்தில் கிழக்கேயுள்ள தளத்தின் மத்தியில், கிழக்கு முகமாக இருக்கின்ற வெள்ளி பிரதிமையில் பஞ்சகோண பீடத்தில் வீற்றிருக்கவேண்டும். என்று கூறி, அங்கங் களுடனும், ஆயுதங்களுடனும் பரிவாரங்களுடனும், பத்திநிகளுடனும், சக்தியுடனும் பாவிக்கவேண்டும்.

(அஸுரகுருவான சுக்கிராசாரியாருடைய) ரதமானது பெரிதாக இருக்கவேண்டும். அது நல்ல இரிசிக்கட்டை யுடையதாகவும், மூக்கணையுடையதாகவும், பூமியிலுதித்த குதிரைகள் பூட்டப்பட்டதாகவும், (அம்புராத்தூணி, வில், வேல், முதலிய ஆயுதங்களுடையதாகவும்) பிதாகையுடைய தாகவும், வெளுப்பு நிறமாகவும் இருக்கவேண்டும்.

தேவகுரு தைத்தியகுரு இருவரும், மாசற்றவர் களாகவும், முறையே மஞ்சள் நிறமாகவும் வெளுப்பு நிறமாகவும் இருப்பவர்களாகவும், 4 கைகளுடையவர் களாகவும், தண்டம், வரதம், ஜபமாலை, கமண்டலம் இவைகளையுடையவர்களாகவும் கல்பிக்கப்படவேண்டும். (வெளுப்பு நிறம்) (2)

௧அ. அத ஶுக்ராயிதேவதெஂஇந்த்ராணீ த்யாநம்.

வாஜெ ஶுவ்லா: கரெ காயஶா ஸஙஶ்ரா ஸஷா஥ஙஜேஷ் ।

𑌸𑍁𑌖𑌾𑌸𑌨𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 𑌕𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌾 𑌵𑌿𑌭𑍍𑌰𑌾𑌜𑌾 𑌵 𑌦𑌯𑌾 𑌶𑌚𑍀 ॥

(𑌕𑌨𑌕𑌵𑌰𑍍𑌣𑌃)

18. சுக்கிரனுக்கு அதிதேவதையான இந்திராணீ த்யாநம்

சசீதேவியை இரண்டு கைகளுடையவளாகவும், அபயஹஸ்தமான வலது கையையுடையவளாகவும், இடது கையில் ஸந்தானமென்னும் கல்பவிருக்ஷத்தின் பூங்கொத்தை வைத்துக்கொண்டிருப்பவளாகவும் கல்பிக்க வேண்டும். (தங்க நிறம்) (1)

௧௯. 𑌅𑌥 𑌶𑍁𑌕𑍍𑌰𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌧𑌿𑌦𑍇𑌵𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍

𑌶𑍍𑌵𑍇𑌤𑌹𑌸𑍍𑌤𑌿 𑌸𑌮𑌾𑌰𑍂𑌢𑌂 𑌵𑌜𑍍𑌰𑌾𑌙𑍍𑌕𑍁𑌶𑌲𑌸𑌤𑍍𑌕𑌰𑌂 ।
𑌸𑌹𑌸𑍍𑌰𑌨𑍇𑌤𑍍𑌰𑌂 𑌪𑍀𑌤𑌾𑌭𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌹𑍃𑌦𑌿 𑌵𑌿𑌭𑌾𑌵𑌯𑍇 ॥

(𑌕𑌨𑌕𑌵𑌰𑍍𑌣𑌃)

19. சுக்கிரனுக்கு பிரத்யதிதேவதையான இந்திரனின் த்யாநம்.

வெள்ளை வாரணத்தின்மீது வீற்றிருப்பவனும், வஜ்ரம், அங்குசம் இவைகளுடன் பிரகாசிக்கின்ற கைகளையுடையவனும், ஆயிரம் கண்களையுடையவனும், மஞ்சள் நிறமாக இருப்பவனுமான இந்திரனை ஹிருதயத்தில் த்யாநம் செய்கின்றேன். (கனக வர்ணம்)

௨௰. 𑌅𑌥 𑌶𑌨𑍈𑌶𑍍𑌚𑌰𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍

𑌭𑌗𑌵𑌨𑍍 𑌶𑌨𑍈𑌶𑍍𑌚𑌰 𑌸𑍂𑌰𑍍𑌯𑌤𑌨𑌯 𑌕𑌾𑌶𑍍𑌯𑌪𑌗𑍋𑌤𑍍𑌰 𑌸𑍌𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌦𑍇𑌶𑍇𑌶𑍍𑌵𑌰 𑌕𑌜𑍍𑌜𑌲𑌸𑌮𑌾𑌙𑍍𑌗𑌦𑍃𑌷𑍍𑌟𑍇 𑌗𑍃𑌧𑍍𑌰𑌵𑌾𑌹 𑌚𑌾𑌪𑌬𑌾𑌣𑌕𑍃𑌪𑌾𑌣𑌾𑌭𑌯𑌾𑌙𑍍𑌕𑌿𑌤 𑌕𑌰

𑌪𑍀𑌤𑌾𑌂𑌬𑌰𑌮𑌾𑌲𑍍𑌯𑌾𑌨𑍁𑌲𑍇𑌪𑌨 𑌨𑍀𑌲𑌰𑌤𑍍𑌨𑌭𑍂𑌷𑌣𑌾𑌲𑌂
𑌕𑍃𑌤𑌸𑌰𑍍𑌵𑌾𑌂𑌗 𑌸𑌕𑌲𑌭𑍁𑌵𑌨𑌭𑍀𑌷𑌣𑌾[illegible]
[illegible] । 𑌉𑌚𑍍𑌛𑍍𑌰𑌿𑌤𑌨𑍀𑌲𑌧𑍍𑌵𑌜𑍋𑌪𑌶𑍋𑌭𑌿𑌤𑍇𑌨 𑌨𑍀𑌲𑌗𑍃𑌧𑍍𑌰𑌾𑌷𑍍𑌟
𑌰𑌥𑌵𑌾𑌹𑌨𑍇𑌨 𑌮𑍇𑌰𑍁𑌂 𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍀𑌕𑍁𑌰𑍍𑌵𑌾𑌣𑌾𑌗𑌚𑍍𑌛 ।
𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌯𑌮𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌸𑌹 [illegible]
[illegible]
𑌸𑌾𑌂𑌗𑌂 𑌸𑌾𑌯𑍁𑌧𑌂 𑌸𑌪𑌰𑌿𑌵𑌾𑌰𑌂 𑌸𑌪𑌤𑍍𑌨𑍀𑌕𑌂 𑌸𑌶𑌕𑍍𑌤𑌿𑌂
𑌆𑌵𑌾𑌹𑌯𑍇𑌤𑍍 ॥

𑌇𑌂𑌦𑍍𑌰𑌨𑍀𑌲𑌦𑍍𑌯𑍁𑌤𑌿𑌃 𑌶𑍂𑌲𑍀 𑌵𑌰𑌦𑍋 𑌗𑍃𑌧𑍍𑌰𑌵𑌾𑌹𑌨𑌃 ।
𑌬𑌾𑌣𑌚𑌾𑌪𑌧𑌰𑍋 𑌵𑍀𑌰𑌃 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑍋𑌽𑌰𑍍𑌕𑌸𑍁𑌤𑌸𑍍𑌤𑌥𑌾 ॥

(𑌕𑍃𑌷𑍍𑌣[illegible])

20. ஶனைஶ்சர த்யாநம்

பகவானுன ஹே ஶனைஶ்சர, பாஸ்கரனுக்குப் புதல்வரே, காசியபகோத்திரத்திலுதித்தவரே, ஸௌராஷ்டிர தேசத்திற்கு அதிபனாக இருப்பவரே, மை போன்ற சரீரகாந்தியையுடையவரே, 4 கைகளுடையவரே, வில், அம்பு, கத்தி, அபயம் இவைகளை கைகளில் தரிப்பவரே மஞ்சள் நிறமான ஆடை, மாலை, சந்தனம் இவைகளை தரிப்பவரே, நீலரத்நக்கற்களாலான ஆபரணங்களை யணிந்த ஸகல அங்கங்களையுமுடையவரே, ஸகல புவநங்களையும் பயப்படும்படி செய்யக்கூடிய கோபமயமான ஸ்வரூபத்தையுடையவரே, தங்களை வணங்குகின்றேன்.

ரதத்தின் மேலே தூக்கிக்கட்டப்பட்ட நீலநிறமான துவஜத்துடன் பிரகாசிக்கின்ற நீலநிறமான 8 கழுகுகளால் சுமக்கப்பட்ட ரதமாகிய வாஹநத்திலிருந்துகொண்டு, மேரு பர்வதத்தை வலமாகச் சுற்றிக்கொண்டு வருவீராக.

பிரஜாபதி, யமன் இவ்விருவர்களுடனும் பத்மத்தின் மேற்குப்பக்கத்திலிருக்கின்ற மேற்கு முகமான கருப்பு நிறமான இரும்புப்பிரதிமையில், வில்வடிவமான பீடத்தின் மத்தியில் வீற்றிருக்கவேண்டும். என்று கூறி, அங்கங்களுடனும் ஆயுதங்களுடனும், பரிவாரங்களுடனும், பத்நிகளுடனும், சக்தியுடனும் பாவிக்க (த்யாநம் செய்ய) வேண்டும்.

சூரியன் புதல்வனான சனைச்சரனை, எப்பொழுதும், இந்திரநீலக்கல்லைப்போன்ற சரீரகாந்தியுடையவராகவும், கத்தியையும் வரதஹஸ்தத்தையும் தரிப்பவராகவும், கழுகு வாஹநத்திலிருப்பவராகவும், வில், அப்பு இவைகளை தரித்த வீரபுருஷனாகவும் கல்பிக்கவேண்டும். (கருப்பு நிறம்) (1)

உக. அுய ஶநூயிதெவதாஷஜாவதி யூாநமு.

ஹ்ஂஸயாநேந கதுவூஃ ந வ காயபுஸ்தாஜூவஃ ।
ஸாவித்ரீ தஸூ கதுவூா வாஜொக்ஷஂமமதா ஶாஹா ॥

ஷஹ்ஷொக்ஷஂ ஸகயுஂ காயபுஂ ரூஷவஂ ஸவபுஂ
வஜாவதெஃ ।
யஜெஞாவவீதீ ஹ்ஂஸஸ்தஃ ஶாகவக்ஷூஸ்தஸபுஜஃ ॥ உ ॥
சுக்ஷஷூ ஜஂ ஷூவஂ ஷிஹூஸ் கூஂஷிகாஂ வாஷுகா
தயா ।
(வஷவணாபுஃ)

21. சனியின் அதிதேவதையான பிரஜாபதியின் த்யாநம்.

பிரஜாபதியை, அன்னவாஹநத்துடன் கல்பிக்க வேண்டும். 4 முகங்களுடன் கல்பிக்கக்கூடாது. (ஒரே முகத்துடன் கல்பிக்கவேண்டும் என்பது பொருள்) அவருடைய இடது மடியில், மங்களகரமான குணங்களை

யுடைய ஸாவித்திரீ தேவியைக்கல்பிக்கவேண்டும். பிரஜாபதியின் ஸ்வரூபத்தை, பிரஹ்மாவுக்குக்கூறியிருப்பதைப்போல ஸகல லக்ஷணங்களுமமைந்திருக்கும்படி கல்பிக்க வேண்டும்.

இந்த பிரஜாபதியானவர், ஒரு முகமுடையவரும், 4 கைகளுடையவரும், யஜ்ஞோபவீதத்தை, தரிப்பவரும், ஜபமாலை, ஸ்ருவம், கிண்டி, புஸ்தகம் இவைகளை தரிப்பவரும், அன்ன வாஹநத்திலிருப்பவருமாவார். (பத்மவர்ணம், பத்மம்-செந்தாமரை மலர்)

௨௨. 𑌅𑌥 𑌶𑌨𑌿𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌧𑌿𑌦𑍇𑌵𑌤𑌾𑌯𑌾𑌃 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

𑌰𑌕𑍍𑌤𑌾𑌕𑍍𑌷𑌃 𑌪𑌾𑌶𑌹𑌸𑍍𑌤𑌶𑍍𑌚 𑌯𑌮𑍋 𑌮𑌹𑌿𑌷𑌵𑌾𑌹𑌨𑌃 ।
𑌕𑌾𑌯𑌃(𑌯𑍂𑌃) 𑌕𑌰𑌾𑌲𑌵𑌦𑌨𑌃 𑌨𑍀𑌲𑌾𑌙𑍍𑌗𑌶𑍍𑌚𑌾𑌤𑌿𑌭𑍀𑌷𑌣𑌃 ॥
(𑌨𑍀𑌲𑌵𑌰𑍍𑌣𑌃)

22. சனிக்கு பிரத்தியதிதேவதையான யமனுடைய த்யாநம்.

யமனை, சிவந்த கண்களையுடையவராகவும், கையில் பாசத்தை வைத்துக்கொண்டிருப்பவராகவும், மஹிஷ வாஹநத்திலிருப்பவராகவும், (மஹிஷ—எருமை) பயங்கரமான முகத்தையுடையவராகவும், நீலநிறமான சரீரத்தை யுடையவராகவும், மிகவும் பயங்கரமான ஸ்வரூபத்தை யுடையவராகவும் கல்பிக்கவேண்டும்.

௨௩. 𑌅𑌥 𑌰𑌾𑌹𑍋𑌰𑍍𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

𑌶𑍂𑌰𑍍𑌪𑌵𑌾𑌨𑍍 𑌰𑌾𑌹𑍋 𑌰𑌵𑌿𑌸𑍋𑌮𑌵𑌿𑌮𑌰𑍍𑌦𑌨 𑌸𑌿𑌂𑌹𑌿𑌕𑌾
𑌨𑌨𑍍𑌦𑌨 𑌵𑍈𑌵𑍇𑌕𑌨𑌸𑍀𑌮𑍋𑌤𑍍𑌥 𑌬𑌭𑍍𑌰𑍁𑌸𑍇𑌮𑍇𑌶𑍍𑌵𑌰 𑌕𑌾𑌯
𑌸𑍈𑌹𑍍𑌯𑌾𑌦𑌿𑌤𑍇 𑌵𑍍𑌯𑌾𑌘𑍍𑌰𑌵𑌦𑌨 𑌵𑌤𑍍𑌸𑌹𑍍𑌰𑌜 𑌵𑌜𑍍𑌰𑌵𑌰𑍍𑌯𑌸𑌂𑌯𑍁
𑌵𑌰𑌦𑌾𑌨𑌾𑌂𑌕𑌿𑌤𑌕𑌰 𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌂𑌬𑌰𑌾𑌭𑌾𑌯𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑍇𑌵𑌨 𑌮𑍋

கோமேதகாபரணபூஷித ஸர்வாங்க ஶூர்பாஸநமத்யே
நமஸ்தே । ஸமுச்ச்ரிதத்வஜோபஶோபிதேந க்ருஷ்ண
ஸிம்ஹரதவாஹநேந மேருமப்ரதக்ஷிணீகுர்வந்
ஆகச்ச । ஸர்வாகாராஹ்வாம் ஸஹ பத்நீபுத்ராதி
பரிவாரைஸ்ஸஹ ஶூர்பாகாரம் தக்ஷிணாபிமுகம் ஶூர்பா
காரபீடமத்யே திஷ்ட । இதி ஸாங்கம் ஸாயுதம் ஸபரி
வாரம் ஸபத்நீகம் ஸஶக்திம் பாவயேத் ॥

கராளவதந: கட்கசர்மஶூலீ வரப்ரத: ।
நீலஸிம்ஹாஸநஸ்தஶ்ச ராஹுரத்ர ப்ரஶஸ்யதே ॥

(நீலவர்ண:)

23. ராகு த்யாநம்

பகவானான ஹே ராகுவே, ஸூரியன், சந்திரன் இவர்களை ஹிம்ஸிப்பவரே (மறைப்பவரே), ஸிம்ஹிகையின் புதல்வரே, பைடீநஸி கோத்திரத்திலுதித்தவரே, பர்பர தேசத்திற்கு அதிதேவதையாக இருப்பவரே, காலமேகத்தை போன்ற நிறமுடையவரே, (காலம்—கருப்பு) புலிமுக முடையவரே, 4 கைகளுடையவரே, கத்தி, கேடயம், சூலம், வரதம் இவைகளை கைகளில் வஹிப்பவரே, கருப்பான ஆடை, மாலை, சந்தனம் இவைகளையணிந்திருப்பவரே, கோமேதக ரத்நங்களினாலான ஆபரணங்களை ஸகல அங்கங்களிலுமணிந்திருப்பவரே, பராக்கிரமத்திற்கு இருப்பிடமாக இருப்பவரே, தங்களை வணங்குகின்றேன்.

ரதத்தின் மேலே தூக்கிக்கட்டப்பட்ட துவஜத்துடன் விளங்குகின்ற கருப்பு நிறமான சிங்கம் பூட்டப்பட்ட ரதமாகிய வாஹனத்திலேறி மேரு மலையை இடமாகச்சுற்றிக் கொண்டுவரவேண்டும்,

ஸர்பம், காலன், இவர்களுடன், தாமரைமலரின் நைர்ருதி (தென்மேற்கு) திசையிலிருக்கின்ற இதழின் நடுவில் தென் திசையை நோக்கியிருக்கின்ற சயத்தினாலான பிரதிமையில், முறத்தைப்போன்ற வடிவமுடைய பீடத்தில் வீற்றிருக்க வேண்டும். என்று, அங்கங்களுடனும், ஆயுதங்களுடனும், பரிவாரங்களுடனும், மனைவிகளுடனும், சக்தியுடனும் பாவிக்கவேண்டும்.

பயங்கரமான முகத்தையுடையவனும், கத்தி, கேடயம், சூலம், வரதம் இவைகளை தரிப்பவனும், நீலநிறக் கற்களாலான ஸிம்ஹாஸனத்தில் அல்லது நீலநிறமான ஸிம்ஹத்தின் மீது வீற்றிருப்பவனுமான ராஹுவானவன், எனக்கு சுபங்களை அளிப்பானாக. (நீலமேகத்தைப்போன்ற நிறம்)

௨௪. அத ராஹ்வதிதேவதாஸர்ப்பத்யாநம்.

அக்ஷஸூத்ரபாஶஸர்வா: கம்பிகாவக்த்ர
பூஷணா: |
ஏகதேஹாஸ்த்ரிதேஹா வா ஸர்வே காயாஶ்ச
பீஷணா: ||
(ரக்தவர்ணா:)

24. ராஹுவுக்கு அதிதேவதைகளான ஸர்பங்களின் த்யாநம்.

ஸர்பங்கள் எல்லாவற்றையும், ஜபமாலையும், கயிறும் வஹிப்பவைகளாகவும், கிண்டியின் வாலைப்போன்ற (மூக்கைப்போன்ற) ஆபரணங்களையுடையவைகளாகவும், ஒரு உடல் அல்லது மூன்று உடல்கள் உடையவைகளாகவும் பயங்கரமான ஸ்வரூபமுடையவைகளாகவும் கல்பிக்க வேண்டும்.

உரு. 𑌅𑌥 𑌰𑌾𑌹𑍁𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌧𑌿𑌦𑍇𑌵𑌤𑌾𑌕𑌾𑌲𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍 ।

𑌕𑌾𑌲𑌃 𑌕𑌰𑌾𑌲𑌵𑌦𑌨𑌃 𑌨𑍀𑌲𑌾𑌙𑍍𑌗𑍋𑌽𑌤𑌿𑌭𑍀𑌷𑌣𑌃 ।
𑌪𑌾𑌶𑌦𑌣𑍍𑌡𑌧𑌰𑌃 𑌕𑌾𑌰𑍍𑌯𑌃 𑌸𑌰𑍍𑌪𑌵𑍃𑌶𑍍𑌚𑌿𑌕𑌰𑍋𑌮𑌵𑌾𑌨𑍍 ॥
(𑌕𑍃𑌷𑍍𑌣𑌵𑌰𑍍𑌣𑌃)

25. ராஹுவின் ப்ரத்தியதிதேவதையான காலனின் த்யானம்.

காலனை, பயங்கரமான முகமுடையவனாகவும், நீலநிற முடையவனாகவும், அதிபயங்கரமான ஸ்வரூபமுடைய வனாகவும், பாசம், தண்டம் இவைகளை தரித்தவனாகவும், பாம்புகள் தேள்கள் இவைகளை உரோமங்களாக உடைய வனாகவும் கல்பிக்கவேண்டும். (கருப்பு நிறம்)

உசா. 𑌅𑌥 𑌕𑍇𑌤𑍁𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍 ।

𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌕𑍇𑌤𑍁𑌰𑌨𑍍𑌤𑌰𑍍𑌵𑍇𑌦𑍀 𑌜𑍈𑌮𑌿𑌨𑌿𑌗𑍋𑌤𑍍𑌰𑌜 𑌅𑌸𑍍𑌯
𑌦𑍇𑌶𑌾𑌧𑌿𑌪 𑌧𑍂𑌮𑍍𑌰𑌵𑌰𑍍𑌣𑌃 𑌧𑍍𑌵𑌜𑌾𑌕𑍃𑌤𑌿 𑌸𑌿𑌂𑌹𑌜 𑌮𑌹𑌾𑌵𑌰
𑌧𑍍𑌵𑌜𑌾𑌙𑍍𑌕𑌿𑌤𑌕𑌰 𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰(𑌵𑌸𑍍𑌤𑍍𑌰)𑌆𑌭𑌰𑌣𑍋𑌪𑍇𑌤 𑌦𑍇𑌵
𑌸𑌰𑍍𑌵𑌾𑌲𑌙𑍍𑌕𑌾𑌰𑌾𑌭𑌰𑌣𑌭𑍂𑌷𑌿𑌤 𑌸𑌰𑍍𑌵𑌾𑌙𑍍𑌗 𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌗𑌨𑍍𑌧
𑌅𑌨𑍁𑌲𑍇𑌪 । 𑌸𑌞𑍍𑌜𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌧𑍍𑌵𑌜𑌵𑌿𑌰𑌾𑌜𑌿𑌤𑍇𑌨 𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰
𑌕𑌪𑍋𑌤𑌰𑌥𑌵𑌾𑌹𑌨𑍇𑌨 𑌦𑍇𑌵𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍀𑌕𑍃𑌤𑌪𑍁𑌣𑍍𑌯
𑌗𑌨𑍍𑌧 । 𑌶𑍍𑌰𑍀𑌗𑍃𑌧𑍍𑌰𑌚𑌿𑌤𑍍𑌰𑌰𑌥𑌵𑌾𑌹𑌨𑌂 𑌸𑌹 𑌦𑍇𑌵𑌾𑌯𑌤𑌨𑌦𑍍𑌵𑌾𑌰
𑌦𑍇𑌶𑍇 𑌕𑍁𑌶𑌦𑍍𑌵𑍀𑌪𑌾𑌧𑌿𑌪𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌭𑌿𑌮𑍁𑌖𑌂 𑌧𑍍𑌵𑌜𑌾𑌕𑌾𑌰
𑌪𑍀𑌠𑌸𑌨𑍍𑌨𑌿𑌵𑍇𑌶𑌿𑌤 𑌸𑌾𑌙𑍍𑌗𑌂 𑌸𑌾𑌯𑍁𑌧𑌂 𑌸𑌪𑌰𑌿𑌵𑌾𑌰𑌂
𑌸𑌪𑌤𑍍𑌨𑍀𑌕𑌂 𑌸𑌶𑌕𑍍𑌤𑌿𑌕𑌂 𑌭𑌾𑌵𑌯𑍇𑌤𑍍 ॥

𑌧𑍂𑌮𑍍𑌰𑌾 𑌦𑍍𑌵𑌿𑌬𑌾𑌹𑌵𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌗𑌦𑌿𑌨𑍋
𑌵𑌿𑌕𑍃𑌤𑌾𑌨𑌨𑌾𑌃 ।
𑌕𑌪𑍋𑌤𑌵𑌾𑌹𑌨𑌾 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌕𑍇𑌤𑌵𑌃 𑌸𑌰𑍍𑌵𑌵𑌰𑌪𑍍𑌰𑌦𑌾𑌃 ॥

ஸர்வே கிரீடிந: கார்யா: க்ரஹா லோகஹிதா
வஹா: ।
(கேதோர்த்யாநாவாஹநாதி ஸர்வம் ஸகலைக்யேவ ப்ரயோகம் ।
யஜுர்வேதிந:.)

26. கேதுவின் த்யாநம்.

பகவானான ஹேகேதுவே, புகை வடிவமாக இருப்பவரே, ஜைமினியின் கோத்திரத்தில் ஜனித்தவரே, மத்தியதேசத்திற்கு அதிபதியாக இருப்பவரே, புகை நிறமான துவஜத்தின் வடிவமாக இருப்பவரே, 2 கைகளை யுடையவரே, கதை, வரதம் இவைகளை கைகளில் வஹிப்பவரே, பலவிதமான மாலை, ஆடை, சந்தனங்களை தரித்திருப்பவரே, சிறந்த வைடூரியக்கற்களாலே கல்பிக்கப்பட்ட ஆபரணங்களை ஸகல அங்கங்களிலும் அணிந்திருப்பவரே, ஆச்சரியத்தை விளைவிக்கும் ஆற்றலை யுடையவரே தங்களை வணங்குகின்றேன்.

கட்டப்பட்ட சித்திர துவஜத்துடன் கூடிய விசித்திர மான (பற்பல வர்ணங்களுடன் கூடிய) மாடப்புருவாகிய அல்லது மாடப்புருக்களாலே சுமக்கப்பட்ட ரதமாகிய வாஹநத்துடன் மேருமலையை இடமாகச் சுற்றிவருவீராக.

பிரஹ்மா, சித்ரகுப்தன், இவர்களுடன் தாமரைமலரில் வாயு திக்கிலிருக்கின்ற இதழின் மத்தியில், தெற்கு முகமாக இருக்கின்ற வெண்கலப்பிரதிமையில் துவஜ வடிவமான பீடத்தில் வீற்றிருக்கவேண்டும்.

என்று கூறி, அங்கங்களுடனும், ஆயுதங்களுடனும், பரிவாரங்களுடனும், மனைவிகளுடனும், சக்தியுடனும் கூடியவராக பாவிக்கவேண்டும். (கேதுக்கள் வெகுபேர் களானாலும், அவர்களுள் ஒருவரே முக்கியமானவர். புகை நிறம்)

௨௭. அத கேதோரதிதேவதா ப்ரஹ்ம த்யாநம்.

(சைவாகமே)

விரிஞ்சிம் வாக்பதிம் ச்வேதபங்கஜஸ்தம் சதுர்முகம் ।
அக்ஷஸ்ரக்குண்டிகாபீதிதாநஹஸ்தம் விசிந்தயேத் ॥

(பத்மவர்ண:)

27. கேதுவின் அதிதேவதையான பிரஹ்மாவின் த்யாநம்.

(சைவாகமத்தில்)

வாக்குகளுக்கு பதியான பிரஹ்மதேவரை, வெண் தாமரை மலரில் வீற்றிருப்பவராகவும், சிறந்த ஒளியுடைய வராகவும், ஜபமாலை, குண்டிகை, (கிண்டி) அபயம், வரதம் இவைகளை கைகளிலேந்திக்கொண்டிருப்பவராகவும் த்யாநம் செய்ய வேண்டும். (தாமரை மலரின் நிறம்)

௨௮. அத கேதோ: ப்ரத்யதிதேவதா சித்ரகுப்த த்யாநம்.

(ஹஸ்தாக்ஷரீயே)

ஸுதிவ்யவேஷம் ஸ்வாகாரம் ஸிம்ஹாஜம் ஸௌம்யதர்சநம் ।
தக்ஷிணே லேகநீம் சைவ ஹ்யயோ வாமே ச பத்ரகம் ॥
ஸிம்ஹஸ்கந்தோந்நதாக்ஷம் சித்ரகுப்தம் விபாவயேத் ।

(கநகவர்ண:)

28. கேதுவின் பிரத்தியதிதேவதையான சித்திரகுப்தனின் த்யாநம்.

சித்திரகுப்தனை, அதி ஸுந்தரமான வேஷத்தை யுடையவனாகவும், அழகான வடிவமுடையவனாகவும்,

2 கைகளுடையவனுகவும், ஸௌம்யமான பார்வையுடைய வனுகவும், அல்லது ஸௌம்ய ஸ்வரூபத்துடன் காணப் படுகின்றவனுகவும், வலது கையில் எழுத்தாணியையும், இடது கையில் ஓலையையும் வைத்துக்கொண்டிருப்பவனுக வும், பொன் நிறமான மீசை, மயிர், கண் இவைகளை யுடையவனுகவும், பாவிக்க (த்யாநம் செய்ய) வேண்டும். (தங்க நிறம்)

அத² கர்மஸாத்³கு³ண்யதே³வதாநாம் த்⁴யாநம்.

௨அ. தத்ராதௌ³ து³ர்கா³ த்⁴யாநம்.

(பை⁴ரவாக³மே)

து³ர்கா³ம் விபத்த்யப⁴யதே³ ஹஸ்தாஷ்டகவிபூ⁴ஷிதாம் ।
த்⁴யாயாமி தை³த்யஹந்த்ரீம் தாம் ரக்தாஸ்வாத³நதத்பராம் ॥
(நீலவர்ண:)

கர்ம ஸாத்குண்ய தேவதைகளின் த்யாநம்.

29. அவைகளுள் முதலில் துர்கையின் த்யாநம்.

8 கைகளுடன்கூடியவளும், மஹிஷாஸுரனை வதைப் பவளும், ரக்தபாநம் செய்ய விருப்பமுள்ளவளுமான அந்த துர்காதேவியை, ஆபத்துக்களை களைந்தெறிவதற்காக த்யாநம் செய்கின்றேன். (நீலநிறம்)

௩௦. அத² க³ணபதி த்⁴யாநம்.

(ரௌரவாக³மே)

வக்ரதுண்ட³ம் க³ஜேஶ்வரம் ஶம்பு⁴ஸூநும் மோத³கப்ரியம் ।
ஸர்வவிக்⁴நஹரம் நமஸ்யாமி ஸிந்தூ³ராருணவிக்³ரஹம் ॥
(ரக்தவர்ண:)

30. கணபதி த்யாநம்.

(சைவாகமத்தில்)

ஒரே தந்தமுடையவரும், துதிக்கையுடையவரும், மோதகத்தில் (கொழுக்கட்டையில்) பிரியமுடையவரும், முறம்போன்ற காதுகளையுடையவரும், சிறந்த பெருச்சாளியின் மீது வீற்றிருப்பவருமான, யானைமுகத்தோனை (யானைமுகமுடைய கணபதியை) சிரத்தாலே வணங்குகின்றேன். (சிவப்பு நிறம்)

௩௧. 𑌅𑌥 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌪𑌾𑌲𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍

(𑌕𑌾𑌰𑌣𑌾𑌗𑌮𑍇)

𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌪𑌾𑌲𑌂 𑌶𑍍𑌯𑌾𑌮𑌵𑌰𑍍𑌣𑌂 𑌭𑍍𑌰𑍁𑌕𑍁𑌟𑍀𑌕𑍁𑌟𑌿𑌲𑌾𑌨𑌨𑌂 ।
𑌤𑍍𑌰𑌿𑌲𑍋𑌚𑌨𑌂 𑌚𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑌕𑍇𑌶𑌂 [illegible]𑌦𑌂𑌷𑍍𑌟𑍍𑌰𑌕𑌮𑍍 ॥

𑌨𑍂𑌪𑍁𑌰𑌾𑌲𑌙𑍍𑌕𑍃𑌤𑌾𑌙𑍍𑌗𑌂 𑌚 𑌸𑌰𑍍𑌪[illegible]𑌭𑍂𑌷𑌿𑌤𑌮𑍍 ।
[illegible] 𑌕𑌪𑌾𑌲𑌸𑍍𑌰𑌗𑍍𑌵𑌿𑌭𑍂𑌷𑌣𑌮𑍍 ॥

𑌨𑌾𑌗𑌯𑌜𑍍𑌞𑍋𑌪𑌵𑍀𑌤𑌂 𑌚 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑍌𑌲𑌿𑌂 𑌦𑌿𑌗𑌮𑍍𑌬𑌰𑌮𑍍 ।
𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 [illegible]𑌧𑌾𑌰𑌿𑌣𑌮𑍍 ॥ ௩ ॥

𑌵𑌾𑌮𑍇 [illegible] ([illegible] 𑌚) [illegible]
𑌬𑌿𑌭𑍍𑌰𑌤𑌮𑍍 ।
𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌪𑌾𑌲𑌮𑌹𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌸𑌰𑍍𑌵𑌾𑌰𑌿𑌷𑍍𑌟𑍋𑌪𑌶𑌾𑌨𑍍𑌤𑌯𑍇 ॥
(𑌶𑍍𑌯𑌾𑌮𑌵𑌰𑍍𑌣𑌃)

31. க்ஷேத்திர பால த்யாநம்.

(காரணாகமத்தில்)

க்ஷேத்திர பாலகரும் (தானிருக்குமிடத்தைக் காப்பவரும்), பச்சை நிறமானவரும், கோபத்தினாலே வளர்ந்த

ரூபத்தினாலே கோணலான முகத்தையுடையவரும், 3 கண்களையுடையவரும், மேல்நோக்கான கேசங்களையுடையவரும், அதிகமாக கோபமடைந்தவரும், அழகான தெத்திப்பற்களையுடையவரும், பாதஸரங்களினாலே அலங்காரம் செய்யப்பட்ட கால்களையுடையவரும், ஸர்ப்பங்களாலான சங்கிலிகளையணிந்திருப்பவரும், சிறிய மணிகளை (சலங்கைகளை) கணுக்கால்களுக்கு மேலே அணிந்திருப்பவரும், கபாலமாலையையணிந்திருப்பவரும், நாகரூபமான யஜ்ஞோபவீதத்தையணிந்திருப்பவரும், சிரஸ்ஸில் சந்திரகலையையணிந்திருப்பவரும், திகம்பரனாக (ஆடையில்லாமல்) இருப்பவரும், வலது பக்கத்திலுள்ள கைகளில் சூலம், வேதாலம், (வேதாலம் — பூதத்தினாலே ஆக்கிரமிக்கப்பட்ட சவம்) கத்தி, துந்துபி வாத்தியம், இவைகளையும், இடது பக்கம் கைகளில் மண்டையோடு, மணி, கேடயம், வில் இவைகளையும் தரிப்பவருமான க்ஷேத்திரபாலகரை, ஸகலவிதமான துன்பங்களும் நீங்கும் பொருட்டு நான் வணங்குகின்றேன். (பச்சை நிறம்)

௩௨. அத அபயங்கர த்யாநம்.

(ஶைவாகமே)

நதஜநஸந்தோஹ பீதிவ்ராதவிநாஶநம் |
அபயங்கரமீஶாநம் ஸததம் ஸௌக்யதாயிநம் ||
(கநகவர்ண: கநகஸ் ஸர்வாலங்க்ருதஶ் | ஶா நி.)

32. அபயங்கர த்யானம்.

(சைவாகமத்தில்)

தன்னை வணங்குகின்ற ஜனத்தொகுதிகளுடைய பயக்கூட்டங்களை நாசம் செய்கின்றவரும், எப்பொழுதும் ஸௌக்கியத்தையளிப்பவருமான அபயங்கர மூர்த்தியை நான் வணங்குகின்றேன். (தங்க நிறம், மற்றயாவும்

இந்திரனைப்போன்றதாகும். 4வது விதியில் பார்த்துக் கொள்ளவும்)

௩௩. அத² வாஸ்துபுருஷ த்⁴யானம்

(ஶைவாக³மே)

மானத³ண்ட³ம் கராப்³ஜேன வஹந்தம் ஹ்யவநிஶோத⁴கம் ।
வந்தே³(அ)ஹம் வாஸ்துபுருஷம் ஶயானம் ஶயனே ஶுபே ॥

(நீலவர்ண: । த்³விபு⁴ஜ:)

33. வாஸ்து புருஷ த்யாநம்.

(சைவாகமத்தில்)

கையில் அளவுகோலை வஹித்துக்கொண்டிருப்பவரும், பூமியை சோதிப்பவரும், சுபமான படுக்கையில் படுத்திருப்பவருமான வாஸ்து புருஷனை நான் வணங்குகின்றேன். (நீலநிறம். இரண்டு கைகள்)

௩௪. அத² ம்ருத்யுஞ்ஜய த்⁴யானம்.

(ஶைவாக³மே)

பு²ல்லஸரோஜமத்⁴யஸ்த²ம் ஸம்பூர்ணசந்த்³ராநநம் ।
மணிப³த்³த⁴ஜடாவிமுக்தசந்த்³ரம் விதத்⁴வதிம் ॥ ௧ ॥

முத்³ராம் பாஶம் புஸ்தகம் ச பி³ப்⁴ராணம் சாக்ஷ
ஸூத்ரகம் ।
ஹஸ்தாதி³ஹாரஶீர்ஷாணம் ம்ருத்யுஞ்ஜயமுபாஸ்மஹே ॥ ௨ ॥

(ஶ்வேதவர்ண:)

34. மிருத்யுஞ்ஜய த்யாநம்.

(சைவாகமத்தில்)

மலர்ந்த தாமரை மலரின் மத்தியிலிருப்பவரும்,

சந்திரன், சூரியன், அக்னி இவைகளை கண்களாக உடையவரும். சிரஸ்ஸில் வைத்துக்கொள்ளப்பட்ட சந்திரனிலிருந்து பெருகுகின்ற அமுதத்தினாலே நனைந்திருப்பவரும், வெண்மையான நிறமுடையவரும், முத்திரை, (சின்முத்திரை) பாசம், புஸ்தகம், ஜபமாலை இவைகளை வஹிப்பவரும், பக்தர்களின் துன்பங்களை நாசம் செய்கின்றவரும், ஸகலலோகங்களுக்கும் ஈசுவரனாகவுமிருக்கின்ற மிருத்யுஞ்ஜயனை உபாஸிப்போமாக. (வழிபடுவோமாக) (வெளுப்பு நிறம்) (2)

ஙடு. ஊய வதாயபூமஹ்லாஷவாணீ.
(வஃவாராணெ)

வவம் வுஜவெஷஂஃவஃ நா யாஹா ஈாஜது கூதாஃயஃ ।
ஸாவக்லாஉாதவஸீவாஷ்வி நீஶுாஜ்ஸாகவலஹிலாஃ ‖ க ‖

ஸவெ- ஸஅவஹ்ஸஸல்வாஷ்வஸஃயுஂகாணொஜ்வூஃ ।
ஶாவவஃயாஹ்லாவெ- வஶாஹயகாஹ்மா வெவ ‖ உ ‖

35. நான்கு யுகங்களின் ஸ்வரூபங்கள்.
(பாத்ம புராணத்தில்)

ஹே அரசனே! இவ்விதமாக, கிருதாதிகளான யுக தேவதைகள், சிறந்த காளையின் முகம்போன்ற முகங்கள் உடையவர்களும், நன்கு பழுத்த மாம்பழம், காயாம்பூ, நீலோத்பலம், கிளி (பச்சைக்கிளி இவைகளைப்போன்ற நிறம் உடையவர்களும், எல்லோரும் நல்ல ஆடை, நல்ல புஷ்பம் சிறந்த அலங்காரங்கள் இவைகளாலே பிரகாசிப்பவர்களும், எல்லோரும் சங்கம், பத்மம், வரதம், அபயம் இவைகளை தரித்த கைகளையுடையவர்களுமாவார்கள்.

ஙசு. தஆ கஹிவாஷஹ்லாஷவடீ
(ஸ்ரீவிஷ்ணுஹாமவதெ)

𑌨𑍃𑌪𑌲𑌿𑌙𑍍𑌗𑌧𑌰𑌂 𑌶𑍂𑌦𑍍𑌰𑌂 𑌘𑍍𑌨𑌨𑍍𑌤𑌂 𑌗𑍋𑌮𑌿𑌥𑍁𑌨𑌂 𑌪𑌦𑌾 ।
௧. 𑌸𑍍𑌕𑌂. ௧௬ 𑌅𑌧𑍍𑌯𑌾.)

𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌾𑌨𑍍𑌤𑌰𑌂 —

𑌦𑌣𑍍𑌡𑌹𑌸𑍍𑌤𑌂 𑌚 𑌵𑍃𑌷𑌲𑌂 𑌦𑌦𑍃𑌶𑍇 𑌵𑍃𑌷𑌲𑌾𑌞𑍍𑌛𑌨𑌂 ॥
(௧ 𑌸𑍍𑌕𑌂. ௧ 𑌅𑌧𑍍𑌯𑌾.) (𑌕𑍃𑌷𑍍𑌣𑌵𑌰𑍍𑌣𑌃)

36. அவற்றுள் கலிபுருஷனுடைய ஸ்வரூபம்.

(ஸ்ரீ விஷ்ணு பாகவதத்தில்)

அரசனுடைய வேஷத்தை தரித்தவனும், சூத்திர ஜாதியும், கோமிதுனத்தை (பசுமாடு, காளைமாடு இரண்டையும்) காலாலே உதைத்துக்கொண்டுமிருக்கின்ற (கலிபுருஷனைக் கண்டார்) (1 ஸ்கந்தம், 16வது அத்தியாயத்தில்)

மற்றொரு விதம்:—

தண்டத்தை கையில் வைத்துக்கொண்டிருப்பவனும், விருஷபத்தை அடையாளமுடையவனுமான சூத்திரனைப் பார்த்தார். (1 ஸ்க. 1 அத்தியாயம்) (கருப்பு நிறம்)

௧௭. 𑌅𑌥 𑌚𑌤𑍁𑌰𑍍𑌯𑍁𑌗𑌾𑌭𑌿𑌮𑌾𑌨𑌿𑌦𑍇𑌵𑌤𑌾 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

(𑌵𑌹𑍍𑌨𑌿𑌪𑍁𑌰𑌾𑌣𑍇)

𑌕𑍃𑌤𑍇 𑌵𑍃𑌷𑌃 𑌶𑍍𑌵𑍇𑌤𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌤𑌾𑌯𑌾𑌂 𑌰𑌕𑍍𑌤𑌵𑌰𑍍𑌣𑍋 𑌦𑍍𑌵𑌾𑌪𑌰𑍇 𑌤𑌥𑌾 ।
𑌪𑍀𑌤𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑌶𑍍𑌚 𑌨𑌲𑌿𑌨𑌾𑌭𑍋 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌃 𑌪𑌰𑌃
𑌪𑌰𑌾𑌤𑍍 ॥ ௧ ॥

𑌶𑌙𑍍𑌖𑌂 𑌶𑌾𑌰𑍍𑌙𑍍𑌗𑌂 𑌗𑌦𑌾𑌂 𑌚𑌕𑍍𑌰𑌂 𑌦𑌧𑌾𑌨𑌾 𑌬𑌾𑌹𑍁𑌭𑌿𑌃
𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑍀𑌷𑍍𑌟𑌾𑌰𑍍𑌥𑌹𑌸𑍍𑌤𑌾𑌃 𑌯𑍁𑌗𑌾𑌭𑌿𑌮𑌾𑌨𑌿𑌦𑍇𑌵𑌤𑌾𑌃 ॥

37. 4 யுகங்களின் அபிமானி தேவதைகளின் த்யாநம்.
(பத்ம புராணத்தில்)

பரமபுருஷனான வாஸுதேவனானவர் கிருத யுகத்தில் வெளுப்பு நிறமாகவும், திரேதாயுகத்தில் சிவப்பு நிறமாகவும், துவாபரயுகத்தில் மஞ்சள் நிறமாகவும், கலியுகத்தில் மேகத்தைப்போன்ற கருப்பு நிறமாகவுமிருப்பவராவார். இவர்கள் முறையே சங்கம், சார்ங்கம் (வில்), கதை, சக்ராம் இவைகளை கைகளில் தரிப்பவர்களும், ஸுகாஸநத்தில் இருப்பவர்களும், அழகான கைகளையுடையவர்களுமாவார்கள். இவர்கள் யுகங்களின் அதிதேவதைகளாவார்கள். (2. 4)

அத ப்ரபவாதிஷஷ்டிஸம்வத்ஸராணாம் ஸ்வரூபாணி—
(காரணாகமே உத்தரதந்த்ரே ஹோராயாம்)

ருஅ. தத்ராதௌ ப்ரபவஸம்வத்ஸரஸ்வரூபம்.

அக்ஷமாலாக்ஷவிபூதிர்த்விபாத்ஸ்தூல விக்ரஹ:
க்ருஷ்ணவர்ண: |
ரக்தாக்ஷ: ஸ்தூலதேஹஸ்து ப்ரபவோ ப்ராஹ்மண:
ஸ்ம்ருத: ‖
(க்ருஷ்ணவர்ண:)

பிரபவாதிகளான 60 வருஷங்களின் ஸ்வரூபங்கள்.
(காரணாகமத்தில்–மதநரத்நத்தில்–ஹோரையில்)
38. பிரபவ ஸம்வத்ஸர ஸ்வரூபம்.

பிராம்ஹண ஜாதியும், புருஷனுமான பிரபவ ஸம்வத்ஸரத்திற்கு அதிதேவதையானவர், ஜபமாலையும், விபூதியும் தரித்திருப்பவரும், 2 கால்களுடையவரும், கருப்புநிறமாக இருப்பவரும், சிவந்த கண்களையுடையவரும், பருத்த சரீரத்தையுடையவருமாவார். (கருப்பு நிறம்)

௩௯. அத விபவஸம்வத்ஸரஸ்வரூபம்.

ரக்தமுக்தாமயீம் மாலாம் ததாநம் கண்டதேஶகே ।
திவ்யாங்கதம் ரதாரூடம் த்யாயேத்விபவவத்ஸரம் ॥
(மேகவர்ண:)

39. விபவ ஸம்வத்ஸர ஸ்வரூபம்.

சிவப்பு முத்துக்களாலான மாலையை கழுத்தில் தரிப்பவரும், சிறந்த தோள்வளையை தரிப்பவரும், ரதத்திலேறிக் கொண்டிருப்பவருமான இப்படிப்பட்ட விபவ ஸம்வத்ஸர தேவதையை த்யாநம் செய்யவேண்டும். (மேகநிறம்)

௪௰. அத ஶுக்லஸம்வத்ஸரஸ்வரூபம்.

திவ்யாங்கராகஸம்யுக்தம் ஶ்வேதவஸ்த்ராவஶோபிதம் ।
விபீதகத்ருமச்சாயோ த்யாயேச்சுக்லாப்தவத்ஸரம் ॥
(ஶ்வேதவர்ண:)

40. சுக்ல ஸம்வத்ஸர ஸ்வரூபம்.

திவ்யமான அங்கராகத்தை (சந்தனம் முதலிய நறுமணமுள்ள பூசிக்கொள்ளக்கூடிய வஸ்துக்களை) பூசிக் கொண்டிருப்பவரும், வெளுப்பு ஆடையை அணிந்து சோபிப்பவருமான சுக்ல ஸம்வத்ஸர தேவதையை விபிகல்பதருமத்திற்குக் கீழே த்யாநம் செய்யவேண்டும். (வெளுப்பு நிறம்)

௪௧. அத ப்ரமோதூதஸம்வத்ஸரஸ்வரூபம்.

வஜ்ராவேஷ்டாங்கதச்சத்ரீ தூம்ராக்ஷ:
ஶ்யாமதேஹயுக் ।
ப்ரமோதூத ஸ விஜ்ஞேய: காஞ்சநாஞ்சிதவிக்ரஹ: ॥
(ஶ்யாமவர்ண:)

41. பிரமோதூத ஸம்வத்ஸர ஸ்வரூபம்.

பிரமோதூத ஸம்வத்ஸர அபிமான மூர்த்தியானது, 5 முகங்களும், அதிபயங்கரமான ஸ்வரூபமும், மிரளும் பார்வையுடைய கண்களும், நீலநிறமான சரீரமும், மனைவியினுலே கட்டித்தழுவப்பட்டிருக்கின்ற சரீரமுமுடையவராவார். (நீலநிறம்)

௪௨. அத ப்ரஜாபதிஸம்வத்ஸரஸ்வரூபம்.

ஜ்வலத்காலாநலப்ரக்ய: வரதாபயபாணிகஃ ।
லம்போதரோ லோஹிதாக்ஷ: வத்ஸரஸ்ய ப்ரஜாபதி: ॥
(ரக்தவர்ண:)

42. பிரஜாபதி ஸம்வத்ஸர த்யாநம்.

பிரஜாபதி ஸம்வத்ஸர தேவனுனவர், கொழுந்துவிட்டு எறிந்துகொண்டிருக்கின்ற பிரளயகாலத்திய தீயைப் போன்ற சரீரகாந்தியும், வரதம், அபயங்களை தரித்த கைகளும், பருத்த வயிறும், சிவந்த கண்களுமுடையவராவார். (சிவப்பு நிறம்)

௪௩. அத ஆங்கிரஸஸம்வத்ஸரஸ்வரூபம்,

பாலே நயநயோர்மத்யே சக்ராகாரம் ஸிதப்ரபம் ।
பத்மஹஸ்தத்வயம் தேவம் த்யாயேதாங்கிரஸாஹ்வயம் ॥
(ஶ்வேதவர்ண:)

43. ஆங்கிரஸ ஸம்வத்ஸர ஸ்வரூபம்.

𑌅𑌥 𑌚𑍈𑌤𑍍𑌰𑌾𑌦𑌿𑌮𑌾𑌸𑌾𑌨𑌾𑌂 𑌵𑌰𑍍𑌣𑌾𑌃 —
(𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌧𑌰𑍍𑌮𑍋𑌤𑍍𑌤𑌰𑍇 𑌖𑌾𑌣𑍍𑌡𑌾𑌮𑌧𑍍𑌯𑍇 𑌅)

𑌚𑍈𑌤𑍍𑌰𑍋 𑌮𑌧𑍁𑌰𑍍𑌲𑍋𑌹𑌿𑌤𑌶𑍍𑌚 𑌵𑍈𑌶𑌾𑌖𑍋
𑌮𑌾𑌧𑌵𑌃 𑌸𑌿𑌤𑌃 ।
𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌃 𑌶𑍁𑌕𑍍𑌰𑌃 𑌶𑍍𑌵𑍇𑌤𑌵𑌰𑍍𑌣𑌃 𑌶𑍁𑌚𑌿𑌰𑌾𑌷𑌾𑌢𑌕𑍋
𑌰𑍁𑌣𑌃 ॥

𑌶𑍍𑌰𑌾𑌵𑌣𑌸𑍍𑌤𑍁 𑌹𑌰𑌿𑌦𑍍𑌵𑌰𑍍𑌣𑌃 𑌦𑍇𑌵𑌤𑌾 𑌤𑍁 𑌨𑌭𑌃𑌸𑍍𑌮𑍃𑌤𑌃 ।
𑌭𑌾𑌦𑍍𑌰𑍋 𑌨𑌭𑌸𑍍𑌯𑌃 𑌶𑍍𑌵𑍇𑌤𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌶𑍍𑌵𑌯𑍁𑌗𑍍𑌰𑍋𑌹𑌿𑌤𑍋
𑌽𑌰𑍁𑌣𑌃(𑌤𑍍𑌵𑌿𑌷𑌃) ॥௨॥

𑌊𑌰𑍍𑌜𑍇 𑌚𑍈𑌵 𑌕𑌾𑌰𑍍𑌤𑍍𑌤𑌿𑌕𑌃 𑌶𑍍𑌵𑍇𑌤𑌃 𑌮𑌾𑌰𑍍𑌗𑌶𑍀𑌰𑍍𑌷𑌃
𑌸𑌹𑌸𑍍𑌸𑌿𑌤𑌃 ।
𑌪𑍁𑌷𑍍𑌯𑌸𑍍𑌸𑌹𑌸𑍍𑌯𑍋 𑌹𑌰𑌿𑌤𑌃 𑌮𑌾𑌘𑍋𑌪𑌿
𑌹𑌰𑌿𑌤𑌃𑌸𑍍𑌮𑍃𑌤𑌃(𑌤𑌪𑌃) ॥௩॥

𑌫𑌾𑌲𑍍𑌗𑍁𑌨𑍋𑌪𑌿 𑌤𑌪𑌸𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌃 𑌵𑌰𑍍𑌣𑌤𑌃 𑌪𑌾𑌟𑌲𑌃
𑌸𑍍𑌮𑍃𑌤𑌃 ।
𑌉𑌕𑍍𑌤𑌾 𑌮𑌾𑌸𑌾𑌧𑌿𑌦𑍇𑌵𑌾𑌸𑍍𑌤𑍁 𑌵𑌰𑍍𑌣𑍈𑌶𑍍𑌚 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌪𑌤𑍇 ॥

சைத்திரம் முதலிய மாதங்களின் நிறங்கள்.
(விஷ்ணு தர்மோத்தரத்திலும் காரணாகமத்திலும்)

ஹே அரசனே! சைத்திர மாதத்திற்கு அதிதேவதை மது என்பவராவார். இவருடைய நிறம் சிவப்பாம். (1)

வைசாக மாதத்திற்கு அதிதேவதை மாதவனாவார். இவருடைய நிறம் வெளுப்பாகும். (2)

ஜியேஷ்ட மாதத்திற்கு அதிதேவதை சுக்கிலன் என்பவராவார். இவருடைய நிறம் வெளுப்பாகும். (3)

ஆஷாட மாஸத்திற்கு அதிதேவதை சுசி என்பவராவார். இவருடைய நிறம் சிவப்பாகும். (4)

சிராவண மாஸத்திற்கு அதிதேவதை நபஸ் என்பவர் ஆவார். இவருடைய நிறம் பச்சையாம். (5)

பாத்திரபத மாஸத்திற்கு அதிதேவதை நபஸியனாவார். இவருடைய நிறம் வெளுப்பாகும். (6)

ஆசுவயுஜ மாஸத்திற்கு அதிதேவதை இஷன் என்பவர் ஆவார். இவர் சிவப்பு நிறமானவர். (7)

கார்த்திக மாஸத்திற்கு அதிதேவதை ஊர்ஜன் என்பவராவார். இவர் வெளுப்பு நிறமானவர். (8)

மார்கசீர்ஷ மாஸத்திற்கு அதிதேவதை ஸஹன் என்பவராவார். இவர் வெளுப்பு நிறமானவர். (9)

புஷ்ய மாஸத்திற்கு அதிதேவதை, ஸஹஸியன் என்பவராவார். இவர் பச்சை நிறமானவர். (10)

மாக மாஸத்திற்கு அதிதேவதை தபஸ் என்பவராவார். இவருடைய நிறம் பச்சை நிறமாகும். (11)

பால்குன மாஸத்திற்கு அதிதேவதை தபஸியன் என்பவராவார். இவருடைய நிறம் பாடலமாகும், (பாடலம்-வெளுப்பு கலந்த சிவப்பு நிறம்.) (12)

இவ்விதமாக சைத்திராதி மாஸாதிதேவதைகளும், அவர்களுடைய நிறங்களும் கூறப்பட்டிருக்கின்றன.

அத சைத்ராதிமாஸேஷு தத்தந்மாஸக்ருத்ய ஸ்நாநதாநபூஜோபாயநாநி —

(பட்டபாஸ்கரீயே பாத்மவாமநபுராண பாரதாதிஷு)

தத்ராதௌ சைத்ரே —

சைத்ரே மாஸி விசித்ராணி ஶயநாந்யாஸநாநி ச ।
விஷ்ணோ: ப்ரீத்யர்த்தமேதாநி தேயாநி ப்ராஹ்மணேஷ்விதி ॥

சைத்திரம் முதலிய மாதங்களுள், அந்த அந்த மாதங்களில் செய்யவேண்டிய ஸ்நாநம், தாநம், பூஜையில் காணிக்கை இவைகள்.

(பட்டபாஸ்கரீயத்திலும், பாத்ம புராணம்-வாமந புராணம்-பாரதம் இவைகளிலும்)

அவற்றுள் சைத்திர மாதத்தில்.

சைத்திர மாதத்தில், மஹாவிஷ்ணுவின் பிரீதியை உத்தேசித்து, அழகான பற்பலவிதமான படுக்கைகள் ஆஸனங்கள், (கம்பளி முதலிய விரிப்புகள்) இவைகளைப் பிராமணர்களுக்கு தாநம் செய்யவேண்டும் என்று கூறப் பட்டிருக்கின்றது. (1)

வைஶாகே —

வைஶாகே விதிநா ஸ்நாநம் தேவநத்யாதிகே பஹி: ।
ஹவிஷ்யம் ப்ரஹ்மசர்யம் ச ஹவி:ஶய்யா நியமஸ்தித: ॥ ௧ ॥
வ்ரதம் தாநம் தபோ தேவி மதுஸூதநபூஜநம் ।
அவிஜ்ஞாநஸஹஸ்ராக்யம் பாபம் தஹதி தாருணம் ॥

வைசாக மாதத்தில்.

வைசாக மாதத்தில், வெளியில் (தன்னிருப்பிடத்திற்கு வெளியிலுள்ள) தேவநதீ முதலியவைகளில் (தேவநதீ

தேவர்களாலே வெட்டப்பட்ட நதி. கங்கை போன்றவைகள்) விதியுடன் ஸ்நானம் செய்து, ஹவிஸ்ஸை ஆகாரம் செய்து, (ஹவிஸ்–கஞ்சி வடிக்காத அன்னம்) பிரஹ்மசரிய நியமத்துடன் (ஸ்திரீகளுடன் புணர்ச்சி முதலியவைகள் இன்றி) பூமியிலேயே (படுக்கையின்றி) படுத்துக்கொள்ளுவது என்ற நியமத்துடன், விரதங்கள், தானங்கள் செய்து கொண்டு, மன அமைதியுடன் மதுஸூதனனை பூஜைசெய்து கொண்டு வரவேண்டும். அப்படிச்செய்து வந்தால் அது 1000 பிறவிகளில் செய்யப்பட்டுள்ள கொடிய பாபங்களையும் பொசுக்கிவிடும். (2)

ஜ்யேஷ்டே —

உதகும்பாம்ஶ்ச தேநூஶ்ச தாலவ்ருந்தம் ச சந்தநம் ।
த்ரிவிக்ரமஸ்ய ப்ரீத்யர்த்தம் தாதவ்யம் ஜ்யேஷ்டமாஸி ச ॥

ஜியேஷ்ட மாஸத்தில்.

ஜியேஷ்ட மாஸத்தில், திரிவிக்கிரமனுடைய பிரீதியை உத்தேசித்து, ஜலம் நிறைந்த குடங்கள், பசுமாடுகள், விசிறி சந்தனம் இவைகளை தானம் செய்யவேண்டும். (3)

ஆஷாடே —

உபாநஹௌ ததா ச²த்ரம் லவணாமலகாநி ச ।
ஆஷாடே வாமநப்ரீத்யை தாதவ்யாநீஹ பக்திதஃ ॥

ஆஷாடமாஸத்தில்.

ஆஷாடமாதத்தில், வாமநமூர்த்தியின் பிரீதியைக் கருதி, 2 பாதரக்ஷைகள், குடை, உப்பு, நெல்லிக்கனி இவைகளை பக்தியுடன் தானம் செய்யவேண்டும். (4)

ஶ்ராவணே —

வஸ்த்ரம் ச க்ஷீரகும்பாம்ஶ்ச வஸ்த்ரவம்ஶம் ப²லாநி ச ।

ஶ்ராவணே ஶ்ரீத4ரப்ரீத்யை தா3தவ்யாநி தி3நே தி3நே ||

சிராவண மாஸத்தில்.

சிராவணமா தத்தில், ஸ்ரீதானுடைய பிரீதியைவேண்டி ஒவ்வொருநாளும், நெய் பால் நிறைந்த குடங்கள், நெய்யில் செய்யப்பட்ட பணியாரங்கள், பழங்கள், இவைகளை தானம் செய்யவேண்டும். (5)

பா4த்3ரபதே3 —

மாஸி பா4த்3ரபதே3 த3த்3யாத் பாயஸம் மது4ஸர்பிஷீ |
ஹ்ருஷீகேஶப்ரீணநார்த2ம் லவணம் ஸகு3டௌ3த3நம் ||

பாத்திரபத மாஸத்தில்.

பாத்திரபத மாஸத்தில், ஹிருஷீகேசனை மகிழ்விக்கும் பொருட்டு, பாயசம், தேன், நெய், கண்ணுடி, சர்க்கரைப் பொங்கல் இவைகளை தானம் செய்யவேண்டும். (6)

ஆஶ்வயுஜே —

ஸுத்3ருட4ம் ஸ்தி2ராங்க3ம் வ்ருஷப4ம் த3தி4 சாம்லரஸாதி3கம் |
ப்ரீத்யர்த2ம் பத்3மநாப4ஸ்ய தே3யமாஶ்வயுஜே நரை: ||

ஆசுவயுஜ மாஸத்தில்.

ஆசுவயுஜமாஸத்தில், மனிதர்கள், பத்துமநாபனுடைய பிரீதியின் பொருட்டு, நல்ல அழுத்தமான அங்கங்களுடன் கூடிய விருஷபம் (காயடிக்காத காளைமாடு) தயிர், புளிப்புச் சுவையுடைய பதார்த்தங்கள் முதலியவைகள் இவைகளை தானம் செய்யவேண்டும். (7)

கார்த்திகே —

ரஜதம் கநகம் தீ3பாந் மணிமுக்தாப2லாதி3கம் |
தா3மோத3ரஸ்ய ப்ரீத்யர்த2ம் ப்ரத3த்3யாத் கார்த்திகே நர: |

கார்த்திக மாஸத்தில்.

மனிதன், கார்த்திக மாஸத்தில், தாமோதரன் பிரீதி அடையும்பொருட்டு, வெள்ளி, தங்கம், தீபங்கள், முத்து முதலிய ரத்நங்கள் இவைகளை தாநம் செய்யவேண்டும்.

ஊாமுஶீஷெ —

வஜொஷாஸ்ரநா ஶாவஃ ஶகடாநூவபூஜாவிகம் ।

ஊாதவூா விஷுவஸம்ஷ்ரீதெ்ஷ ஊாமுஶீஷெ

நரொத்தமெஃ ॥

மார்கசீர்ஷ மாஸத்தில்.

உத்தமகுணமுடைய மனிதர்கள், மார்கசீர்ஷ மாஸத்தில் விஷ்ணுவின் பிரீதியைக்குறித்து, கழுதை, ஒட்டகம், குதிரை, மனிதன், பசுமாடுகள், வண்டிகள், வெள்ளாடுகள், செம்மரியாடுகள் இவைகளை தாநம் செய்யவேண்டும். (9)

வஷெ —

வஷஊவஸம் து களஜெ்ய வெகஹக்தெந யஃ

க்ஷிவெசு ।

ஸுஹரொ ஶுஸுமீயஶு யஶொஹாமீ வ ஜாயதெ ॥

பௌஷ மாதத்தில்.

ஹே தருமராஜனே ! யாதொருவன் (தினந்தோறும்) ஓரேவேளை போஜனம் செய்துகொண்டு பௌஷமாஸத்தை கழிப்பானே, அவன் நல்ல அறிவுடையவனுகவும், பார்த்துக்களிப்புறத்தக்க நல்ல அழகுடையவனுகவும், புகழ் பெற்றவனுகவுமாவான். (10)

ஊவெ —

ஊவஊவி வ யஃ ஹாயாக ஸெநஞயெ-ுண ஹாரத।
வளஂஙரீகஷுஂ தஹ௱ ஜிவஸெ ஜிவஸெ ஹவெக ॥

மாக மாஸத்தில்.

யாதொருவன், மாகமாஸத்தில் இடைவிடாமல் ஸ்நாநம் செய்துவருவானே, அவனுக்கு ஒவ்வொருநாளும் பௌண்டரீகவேள்வி செய்த பலன் கிடைக்கும். *(11)*

ஹாஞுநெ —

ஹாஞுநெ வீ,ஹயொ மாவஃ வஸூஂ கூஜ்ஞாஜிநாயிதஂ।
ஜொவிநஹீணநாய-ாய ஊதவ௱ஂ வரஷஷ-ஹ ॥

பால்குந மாஸத்தில்.

ஹே புருஷ சிரேஷ்ட! கோவிந்தனை மகிழ்விக்கச் செய்வதற்காக பால்குந மாஸத்தில் நெல், பசுமாடு, மான் தோலுடன் ஆடை இவைகளை தாநம் செய்யவேண்டும்.

அய ஊவாஜி ஆஜஶஊவெஷு ஊநாநி —
(ஊநவிஂதாஉணள விஷுயெ-ாதுஜெ வ)

தஞாஜள ஊவெ —

திலஹூஊநாநாவெ து யாஊஂ ஹொகஂ ந மஹதி ।

மாகம்முதலிய மாஸங்களில் செய்யவேண்டிய தாநங்கள்.
(தாநசிந்தாமணியிலும், விஷ்ணு தர்மோத்தரத்திலும்)

அவற்றுள் முதலாவது மாக மாஸத்தில்.

மாக மாஸத்தில், எள்ளை தாநம் செய்கின்றவன் யமலோகத்திற்குச் செல்லமாட்டான். (புண்ணிய லோகங்களையடைவான் என்பது பொருள்.) *(1)*

ஃபால்குநே —

ப்ரியங்கும் ஃபால்குநே தத்வா ப்ரியோ பவதி ஸர்வதா ||

பால்குந மாஸத்தில்.

பால்குந மாஸத்தில் தினை தானியத்தை தானம் செய்பவன் உலகத்தில் ஜநங்களின் அன்புக்குரியவனுவான்.

சைத்ரே —

சைத்ரே சித்ராணி வஸ்த்ராணி தத்வா

ஸௌபாக்யமச்நுதே |

சைத்திர மாஸத்தில்.

சைத்திர மாஸத்தில் பற்பலவிதமான ஆடைகளை தானம் செய்பவன், ஸகலவிதமான போகபாக்கியங்களையு மடைவான். (3)

வைசாகே —

ஸ்வர்காணாம் அபூபதாநேந வைசாகே ஸ்வர்கமச்நுதே ||

வைசாக மாஸத்தில்.

வைசாகமாஸத்தில் அபூபங்களை (அப்பத்தை) தானம் செய்பவன் ஸ்வர்கலோகத்தையடைவான். (4)

ஜ்யேஷ்டே —

சத்ரதாநாத் ததா ஜ்யேஷ்டே ஸர்வான் காமான்

ஸமச்நுதே |

ஜியேஷ்ட மாஸத்தில்.

ஜியேஷ்ட மாஸத்தில் குடைகளை தானம் செய்கின்றவன், விரும்பிய எல்லாவற்றையுமடைவான். (5)

ஆஷாடே —

ஆஷாடே வஸ்த்ரதாநம் ஷேயம் ஸர்வஸௌக்யம் ப்ரதாயகம் ||

ஆஷாட மாஸத்தில்

ஆஷாட மாஸத்தில் பச்சைக்கற்பூரம் கலந்த சந்தனத்தை தானம்செய்பவன் மஹத்தான பலனை அடைவான். (6)

ஶ்ராவணே —

ஶ்ராவணே வஸ்த்ரதானேன கீர்திதம் ஸுமஹத்ஃபலம் ।

சிராவண மாஸத்தில்.

சிராவண மாஸத்தில் ஆடைகளை தானம் செய்பவன் மிகச்சிறந்த பலனையடைவான் என்று கூறப்பட்டிருக்கின்றது. (7)

பாத்ரபதே —

ப்ரோஷ்டபத்யாம் ததா தானே ஸ்ரீதானம் பாணிதஸ்ய ச ॥

பாத்திரபத மாஸத்தில்.

பாத்திரபத மாஸத்தில் பாணிதமெனப்படும் பானகத்தை தானம் செய்பவன், மிகச்சிறந்த பலனை அடைவான். (பாணிதம் – கருப்பஞ்சாற்றினாலே செய்யப்பட்ட பானகம்) (8)

ஆஶ்விநே —

ஆஶ்விநே க்ருததானேன ரூபவானபிஜாயதே ।

ஆசுவிந மாஸத்தில்

ஆசுவிந மாஸத்தில் நெய்யை தானம் செய்பவன், அழகுடையவனாவான். (9)

கார்த்திகே —

கார்த்திகே தீபதானேன ஸர்வைஶ்வர்யமவாப்நுயாத் ॥

கார்த்திக மாஸத்தில்.

கார்த்திக மாஸத்தில் தீபத்தை தாநம் செய்பவன் ஸகலவிதமாக பிரகாசிப்பவனுவான். (10)

ஊாமூஶீஷெ--

ஞவணஂ ஊாமூஶீஷெ தாஉகவா வஸஹாமூஸ்ஷூதெ ।

மார்கசீருஷ மாஸத்தில்.

மார்கசிர்ஷ மாஸத்தில் லவணத்தை (உப்பை) தாநம் செய்பவ்ன் ஸகலவிதமான போகபாக்கியங்களையும் அடைவான். (11)

வளஷெ--

வளஷெ கநகஷாநெந வஶாஂ வாஷிஂ தயெவ வ ॥

பௌஷ மாஸத்தில்.

பௌஷ மாஸத்தில் தங்கத்தை தாநம் செய்கின்றவன் மிகச்சிறந்த சரீர புஷ்டியையடைவான். (12)

ஊய வெதூாஜிஶாஷெஷு ஜாதாநாஂ மூணாঃ--

(ஜாதகாஹரணெ)

தத்ராஉள வெத்ரெ--

ஸஸ்கஜவிஜ்ஜாவி நயொவவஷொ

ஹொமீ நஶঃ ஸூாநயாஶாஜஹொக்கா ।

ஸதூாத்ருஷாநாநாஶதஸு ஊஂதீ

வெத்ரொஜவஸூவி விதிக்ருஂதுঃ ॥

சைத்திரம் முதலிய மாதங்களில் பிறந்தவர்களின் குணங்கள்.

(ஜாதகாபரணத்தில்)

அவற்றுள் சைத்திர மாஸத்தில்.

சைத்திர மாஸத்தில் ஜநித்த மனிதன், நல்ல காரியங்கள், வித்தியை, வணக்கம் இவைகளுடன் கூடியவனாகவும், ஸுகபோகங்களையனுபவிப்பவனாகவும், மதுரமான (இனிப்பான அல்லது நல்ல சுவையுடைய) அந்நத்தை புஜிப்பவனாகவும், தகுதியுள்ள பாத்திரத்தில் தாநம் செய்ய விருப்பமுடையவனாகவும், மந்திரியாகவும், விசித்திரமான (ஆச்சரியகரமான) ஆலோசனைகளைக்கூறும் புத்தி ஸாமர்த்தியமுடையவனாகவுமிருப்பான். (1)

வைஶாகே —

ஸுதேஷண: ஸுஷ்டுகுணாபிராமீ
ஸுதாந்த பலீயாந் த்விஜதேவபக்த: |
காமீ சிராயு: ஜலயாநஶீல:
ஸ்யாந்மாதவே பாந்தவஸௌக்யயுக்த: ||

வைசாக மாஸத்தில்

வைசாக மாஸத்தில் ஜநித்த மனிதன், பிள்ளையினிடம் அளவற்ற பாசமுடையவனாகவும், சரீரபுஷ்டி முதலிய குணங்களுடையவனாகவும், அதிகமான சரீரபலமுடையவனாகவும், பிராம்ஹணர்களிடத்திலும் தேவதைகளிடத்திலும், பக்தியுடையவனாகவும், காமியாகவும் வெகு காலம் ஜீவித்திருப்பவனாகவும், ஜலத்தில் செல்லக்கூடிய சப்பல் முதலியவற்றில் பிரயாணம் செய்ய விருப்பமுடையவனாகவும், பந்துக்களுடைய ஸௌக்கியமுடையவனாகவுமிருப்பான். (2)

ஜ்யேஷ்டே —

க்ஷமாந்விதஸ்ஸத்குணவித்தவ்ருத்தி:
விதேஶவாஸாபிரதிஷ்ட தீவ்ர: |

விசித்ரபா³ஷீ: ஸுதீ³ர்க⁴ஸூத்ர:
ஜ்யேஷ்டோ²ஜ்ஜவ: ச்ரேஷ்ட²தமோ நர: ஸ்யாத் ॥

ஜியேஷ்ட மாஸத்தில்.

ஜியேஷ்ட மாஸத்தில் ஜநித்த மனிதன், பொறுமையுடையவனும், நிலையற்ற மனமுடையவனும், இதர தேசங்களில் வஸிக்க விருப்பமுடையவனும், தீவிரனும், (தீவிரன் – சுறுசுறுப்புடையவன் அல்லது பெருமுயற்சியுடையவன்.) விசித்திரமான (ஆச்சர்யகரமான) புத்தியையுடையவனும், தீர்கஸூத்திரனும் (தீர்கஸூத்திரன் – வெகுகாலம் ஆலோசிப்பவன்.) ஆவான்.

ஆஷாடே⁴ –

ப³ஹுவ்யயோ(அ)நல்பவசோவிலாஸ:
ஸதா³பராதீ⁴ கு³ருவத்ஸலச்ச ।
ஸதா³க்³நிமாந்த்³யோ ஹிதக்ருத்யக்ருத் ஸ்யாத்
ஆஷாட⁴ஜோ மாநதராதி⁴கோ நா ॥

ஆஷாட மாஸத்தில்.

ஆஷாட மாதத்தில் பிறந்தவன், அதிகச்சிலவு செய்பவனாகவும், அளவு கடந்து பேசுகின்றவனாகவும், தவறுகள் செய்யும் ஸ்வபாவமுடையவனாகவும், ஆசானிடத்தில் அன்பு உடையவனாகவும், எப்பொழுதும் அக்நிமாந்தியமுடையவனாகவும், (அக்நிமாந்தியம்—அஜீர்ணம்) நல்ல காரியங்களை செய்கின்றவனாகவும், மிகுந்த தற்பெருமையுடையவனாகவுமிருப்பான். (4)

ச்ராவணே –

பாபைச்ச புண்யைச்ச ஸமந்விதைச்ச
ஸாக்ஷீ ச தாதஸ்ய நிதே³சகர்தா ।

ஶோகப்ரவீண: கவிவாந் வதாந்ய:
ய: ஶ்ராவணே மாஸ்யவதீர்ணஜந்மா ||

சிராவண மாதத்தில்.

சிராவண மாஸத்தில் ஜனித்த மனிதன், புதல்வர்கள், பேரன்பேத்திகள், மனைவி, நண்பர்கள் இவர்களுடன் ஸுகியாக இருப்பான், தகப்பன் உத்தரவின்படி நடப்பவன் ஆவான். உலகத்தில் பிரஸித்திபெற்றவனுகவும், கபாதிக மான சரீரமுடையவனுகவும், அதிகமான ஈகையுடையவ னுகவும், புண்ணியமான (சிறந்த) குணங்களுடன் கூடியவனுகவுமிருப்பான். (5)

பாத்ரபதே —

ஶ்ரீமாந் பவேத் க்ஷீணகளேபரஶ்ச
தாதா ச காந்தாஸுதஸௌக்யயுக்த: |
ஸுகேஷு து:கேஷு விகாரதோ ஹி உதஸ்தி:
யஸ்மிந் பவேத் பாத்ரபதே ஸுஜந்மா ||

பாத்திரபத மாஸத்தில்.

பாத்திரபத மாஸத்தில் பிறந்த மனிதன் நிறைந்த செல்வமுடையவனுகவும், இளைத்த சரீரமுடையவனுகவும், ஈகையுடையவனுகவும், மனைவி மக்களுடைய ஸௌக்கியம் உடையவனுகவும், ஸுகங்களினுலேயும் துக்கங்களினுலேயும் மாறுபாடடைந்தவனுகவும், அயோக்கியனுகவுமிருப்பான்.

ஆஶ்வயுஜே —

40 விவாதஶீலோ ராஜகார்யநிஷ்ட:
ஶ்ருங்காரயுக்தோ பஹுஸௌக்யயுக்த: |

தாதா குணஜ்ஞோ பஹுபுத்ரவாம்ஶ்ச தீ:
ஸ்யாதாஶ்விநேऽஶ்வாதிஸம்ருத்திபாக் ॥

ஆசுவயுஜ மாஸத்தில்.

. ஆசுவயுஜமாஸத்தில் பிறந்தவன், வித்துவானுகவும், செல்வமுடையவனுகவும், ராஜகுலத்திற்கு பிரியமானவனுகவும், நல்ல காரியங்களைச் செய்கின்றவனுகவும், அநேகம் ஸேவகர்களுடையவனுகவும், கொடையாளியாகவும், நற்குணங்களையறிந்தவனுகவும், (நற்குணங்களுடையவனுகவும்) அநேகம் பிள்ளைகளையுடையவனுகவும், குதிரை முதலியவைகள் நிறைந்திருப்பவனுமாவான். (7)

கார்த்திகே —

ஸத்கர்மக்ருத் பஹுவாக்விலாஸ:
ய: பூர்ணஸ்வம் குஞ்சிதாக்ரகஶ்ச ।
காமம் ஸகாம: க்ரயவிக்ரயார்த்தம்
ஸத்கார்யக்ருத் கார்த்திகஜாதஜந்மா ॥

கார்த்திக மாஸத்தில்.

கார்த்திக மாஸத்தில் பிறந்த மனிதன், நல்ல காரியங்களைச் செய்கின்றவனுகவும், பற்பல விஷயங்களையும் பலவிதமாகப் பேசும் திறமையுடையவனுகவும், நிறைந்த செல்வமுடையவனுகவும், ஒடிந்து மடங்கிய முன்னுச்சி மயிர்களையுடையவனும், மிகுந்த காமமுடையவனும், கிரயவிக்கிரயங்களுக்காக சிறந்த காரியங்களைச்செய்கின்றவனும் ஆவான். [கிரயம்—விலைக்கு வாங்குதல், விக்கிரயம்—விலைக்கு விற்பது] (8)

மார்கஶீர்ஷே —

ஸத்தீர்த்தயாத்ராநிரதஸ்ஸுஶீல:
க்ஷமாக்ஷமாவாந் க்ஷுப்ரோ விலாஸீ ।

வரோவக்ஶதர யர்தவஸாய்ஊரமஃ
ஊரமெரஹூவொ வெ விஹவெஷ்ஸரெதஃ ॥

மார்கசீருஷ மாஸத்தில்.

மார்கசீருஷ மாஸத்தில் பிறந்தவன், தீர்த்த யாத்திரைகளைச் செய்துகொண்டிருப்பவனுகவும், நல்ல ஸ்வபாவமுடையவனுகவும், பற்பலகலைகளிலும் சிறந்த ஸாமர்த்தியமுடையவனுகவும், விலாஸியாகவும் [அழகாக ஆடை ஆபரணங்களையணிந்து சிறப்பாக இருப்பவனுகவும்] பிறருக்கு உதவி செய்கின்றவனுகவும், நல்ல வழியைக்கைக் கொண்டவனுகவும், செல்வங்களுடன் கூடியவனுகவும் இருப்பவனுவான். (9)

வஷெ) —

வரோவகாரீ விதவித்ஹீநஃ
கஷ்டாஜிதாயவ்யகரஜ விியிஜ்ஞஃ ।
வஂமஂத்ஃ கரதஶாஸ்யக்ஷஃ
வஸெ விஶெஷீ(ஷாஜ)வஷஃகஶாவாந ॥

புஷ்ய மாஸத்தில்.

புஷ்ய மாஸத்தில் பிறந்த மனிதன், பிறருக்கு உபகாரங்கள் செய்பவனுகவும், தகப்பனுல் கொடுக்கப்பட்ட செல்வமற்றவனுகவும், தான் கஷ்டப்பட்டுத் தேடிய பொருளை சிலவு செய்பவனுகவும், முறைகளையறிந்தவனுகவும் பிறரறியாமல் ஆலோசனை செய்கின்றவனுகவும், சாஸ்திரங்களைக் கற்றறிந்தவனுகவும், விசேஷித்து கலைகளைக் கற்றவனுகவுமிருப்பான், (10)

ஊவெ —

வஂத்விஜ வெஷிகவாயயொமஃ
யொமொக்ஷவிஷிஹவநாநயக்ஷஃ ।

ஸுெவிபுஶெஷாக் விஜிதாரிஸஂவஃ

ஶாஸெூவஃ ஸூாதநவொ உநுஷூஃ ‖

மாக மாஸத்தில்.

மாக மாஸத்தில் பிறந்த மனிதன்; சிறந்த மந்திரங்களைக் கற்றறிந்தவனாகவும், வைதிகமான உபாஸநா மார்க்கத்தில் நல்ல பற்றுதலுடையவனாகவும், யோக நூல்களில் கூறப்பட்டிருக்கின்ற வித்தியை (மந்திரங்களை) அப்பியாஸம் செய்வதில் பற்றுதலுடையவனாகவும், தனது புத்திஸாமர்த்தியத்தினாலே பகைவர்களின் தொகுதியை வெற்றிகொள்ளுகின்றவனாகவும், எவ்விதத்திலும் மேன்மையுடையவனாகவுமிருப்பான். *(11)*

ஃபால்குநே —

வரோவகாரீ ஸாமஂ்ஜீ தயாலுஃ

ஸஹாநிதஃ கொஂமகாயஶாலீ ।

விலாஸிநீகெலிவிதாநஶீலஃ

யஃ ஃபால்குநே ஸாஂவசோவிலாஸஃ ‖

பால்குந மாஸத்தில்.

பால்குந மாஸத்தில் பிறந்தவன், பிறருக்கு உதவி செய்பவனாகவும், ஸாமர்த்தியமுடையவனாகவும், தயையுடையவனாகவும், நல்ல வலிமையுடையனாகவும், அழகான சரீரத்துடன் விளங்குகின்றவனாகவும், ஸ்திரீகளிடத்தில் விளையாடும் முறைகளைக் கற்றறிந்து நடக்கும் ஸ்வபாவமுடையவனாகவும், ஸாரமற்ற வார்த்தைகளைப்பேசுகின்றவனுமாவான். (விஷயமில்லாமல் சவுட்டாலடிப்பவன் என்று பொருள்) *(12)*

௧௮௨. 𑌅𑌥 𑌚𑍈𑌤𑍍𑌰𑌾𑌦𑌿𑌮𑌾𑌸𑌾𑌭𑌿𑌮𑌾𑌨𑌿𑌦𑍇𑌵𑌤𑌾𑌨𑌾𑌂 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

(𑌶𑌾𑌰𑌦𑌾𑌤𑌿𑌲𑌕𑍇)

𑌮𑌾𑌰𑍍𑌗𑌶𑍀𑌰𑍍𑌷𑌾𑌦𑍍𑌯𑍂𑌰𑍍𑌜𑌾𑌨𑍍𑌤𑌂 𑌕𑍇𑌶𑌵𑌾𑌦𑍍𑌯𑌾 𑌹𑌿 𑌦𑍇𑌵𑌤𑌾𑌃 ।
𑌪𑍂𑌜𑍍𑌯𑌾𑌃 𑌕𑍍𑌰𑌮𑍇𑌣 𑌮𑌾𑌸𑍇𑌷𑍁 𑌸𑌰𑍍𑌵𑌸𑌮𑍍𑌪𑌤𑍍𑌸𑌮𑍃𑌦𑍍𑌧𑌯𑍇 ॥

(𑌏𑌷𑌾𑌂 𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌨𑌿 𑌕𑍇𑌶𑌵𑌾𑌦𑌿𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌵𑌤𑍍 𑌨𑌿𑌂 ௨)

182. சைத்திராதி மாஸாபிமாநி தேவதைகளின் த்யாநம்.

(சாரதா திலகத்தில்)

மார்கசீருஷமாஸம் முதல் ஊர்ஜமாஸம் வரையில் 12 மாஸங்களுக்கும் கேசவாதிகள் தேவதைகளாவார்கள். ஆகையால், எல்லாவிதசெல்வங்களும் நிறைந்திருப்பதற்காக அந்த அந்த மாஸங்களில் அந்த அந்த மாஸங்களின் அபிமானி தேவதாமூர்த்திகளை பூஜிக்கவேண்டும். (இவைகளின் லக்ஷணங்கள் கேசவாதி 24 மூர்த்திகளின் லக்ஷணத்தில் கூறியிருப்பதைப் போன்றவைகளேயாம். நி. 2)

𑌅𑌥 𑌮𑍇𑌷𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌸𑌂𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑍀𑌨𑌾𑌂 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌣𑌿 —

(𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑌾𑌰𑍍𑌣𑌵𑍇)

௧௮௩. 𑌤𑌤𑍍𑌰𑌾𑌦𑍌 𑌮𑍇𑌷𑌸𑌂𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌿𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑍍

𑌜𑌟𑌿𑌲𑌾 𑌵𑌹𑍍𑌨𑌿𑌰𑍂𑌪𑌾 𑌚 𑌤𑍍𑌰𑍍𑌯𑌕𑍍𑌷𑌾 𑌶𑌾𑌰𑍍𑌦𑍂𑌲𑌵𑌾𑌹𑌨𑌾 ।
𑌖𑌟𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑌾𑌭𑌯𑌹𑌸𑍍𑌤𑌾 𑌸𑍍𑌰𑌾𑌦𑍈𑌕𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌾 𑌕𑌰𑌾𑌲𑌿𑌕𑌾 ॥

𑌅𑌶𑍍𑌵𑌿𑌨𑍍𑌯𑌰𑍍𑌧𑍇 𑌸𑌦𑌾 𑌧𑍍𑌯𑍇𑌯𑌾𑌚 𑌮𑍇𑌷𑌸𑌂𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌿𑌰𑍀𑌦𑍃𑌶𑍀 ।

(𑌰𑌕𑍍𑌤𑌵𑌰𑍍𑌣𑌾)

மேஷம் முதல் மீநம் வரையில் 12 ஸங்கிராந்திகளின் ஸ்வரூபங்கள்—(ஜியோதிஷார்ணவத்தில்)

183. அவற்றுள் முதலாவது மேஷ ஸங்கிராந்தியின் ஸ்வரூபம்.

முதலாவதான மேஷ ஸங்கிராந்தியின் தேவதை யானவள், (ஸங்கிராந்தி–மாஸப்பிறப்பு) சடையுடைய வளும், தீயின் வடிவமுடையவளும், (தீச்சுடரைப்போல் சிவப்பான வடிவமுடையவளும்,) 3 கண்களுடையவளும், புலியை வாஹநமாகவுடையவளும், கபாலம், அபயங்களை கைகளிலேந்தியிருப்பவளும், ஒரே முகமுடையவளும், கராளீ என்று பெயருடையவளும், (பயங்கரமான ஸ்வரூபமுடைய வளும்) ஆவாள். இவள் எப்பொழுதும் நமக்கு ஸந்தோஷத்தையளிப்பாளாக. (சிவப்பு நிறம்) (1)

௧௮௪. அத வ்ருஷபஸங்க்ராந்தி ஸ்வரூபம்.

ஏகவக்த்ரா த்விஹஸ்தா ச த்ரிணேத்ரா ஸிம்ஹவாஹநா ।
ஶ்வேதவர்ணா மஹாகோரா கபாலாபயஸம்யுதா ॥
த்விதீயா வ்ருஷஸங்க்ராந்தி: ஸதா ஹர்ஷயது ந: ॥
ஶ்வேதவர்ணா)

184. விருஷப ஸங்கிராந்தி ஸ்வரூபம்.

இரண்டாவதான விருஷப ஸங்கிராந்தி தேவதை யானவள், ஒரு முகமுடையவளும், 2 கைகளுடையவளும், 3 கண்களுடையவளும், ஸிம்ஹத்தை வாஹநமாகவுடைய வளும், வெண்மையான நிறமுடையவளும், மஹாகோரா என்று பெயருடையவளும், (அதிபயங்கரமான தோற்றம் உடையவளும்) கைகளில் கபாலத்தையும் அபயத்தையும் தரிப்பவளுமாவாள். இவள், எனக்கு எப்பொழுதும் ஸந்தோஷத்தையளிக்கவேண்டும். (வெளுப்பு நிறம்) (2)

௧௮௫. அத மிதுனஸங்க்ராந்தி ஸ்வரூபம்

விரூபாக்ஷீ ஹரிதவர்ணா த்ரிநேத்ரா
ஸூகராஸ்திதா ।
அபயம் ச கபாலம் ச தாரயந்த்யேகவக்த்ரிகா ॥

மிதுனாக்யா து ஸங்க்ராந்திரிஷ்டஸித்திப்ரதாஸ்து நः (நः) ॥
(ஹரிதவர்ணா)

185. மிதுந ஸங்கிராந்தி ஸ்வரூபம்.

மிதுந ஸங்கிராந்தி தேவதையானவள் விரூபாக்ஷீ என்று பெயருடையவளும், (விகாரமான கண்களையுடையவளும்,) பச்சை நிறமானவளும், 3 கண்களுடையவளும், பன்றியின் மீது வீற்றிருப்பவளும், அபயம், கபாலங்களை தரிப்பவளும், ஒரே முகமுடையவளும், மங்களகரமான குணங்களுடையவளுமாவாள். இவள், நமக்கு எப்பொழுதும் இஷ்ட ஸித்தியை அளிக்கவேண்டும். (பச்சை நிறம்) (3)

௧௮௬. அத கர்கடகஸங்க்ராந்தி ஸ்வரூபம்.

மஹோதரீ சைகவக்த்ரா கடகாக்யா ச்வாநஸ்திதா ।
பாடலாங்கீ த்விஹஸ்தா ச கபாலாபயதாரிணீ ॥
(பாடலவர்ணா)

186. கடக ஸங்கிராந்தி ஸ்வரூபம்.

கடக ஸங்கிராந்தி தேவதையானவள், மஹோதரீ என்று பெயருடையவளும், (பெருவயிறு படைத்தவளும்,) ஒரு முகமுடையவளும், நாய் வாஹநத்தின்மீது வீற்றிருப்பவளும், சிவப்பு நிறமாக இருப்பவளும், 2 கைகளுடையவளும், கபாலம், அபயங்களை, தரிப்பவளுமாவாள். (பாடல வர்ணம்) (4)

௧௮௭. அத² ஸிம்ஹஸங்க்ராந்தி ஸ்வரூபம்

கபாலசாமரகரா ரக்தா க³ர்த³ப⁴ஸம்ஸ்தி²தா ।
ஜிம்ஹிகா ஸிம்ஹஸங்க்ராந்திரேகவக்த்ரா ப்ரஸீத³து ॥
(ரக்தவர்ணா)

187. ஸிம்ஹ ஸங்கிராந்தி ஸ்வரூபம்.

கபாலம், சாமரங்களை கைகளில் தரிப்பவளும், சிவப்பு நிறமாக இருப்பவளும், கழுதையின் மீது வீற்றிருப்பவளும், ஜிம்ஹிகை என்று பெயருடையவளும், (கபட ஸ்வபாவம் உடையவளும்) ஓரே முகமுடையவளுமான ஸிம்ஹ ஸங்கிராந்தி தேவதையானவள் அருள் செய்வாளாக. (சிவப்பு நிறம்) (5)

௧௮௮. அத² கந்யாஸங்க்ராந்தி ஸ்வரூபம்.

க்ருஷ்ணாங்கா³ ரக்ததே³ஹா த்ரிணேத்ரா க³ஜஸம்ஸ்தி²தா ।
ஸிம்ஹிகா நாம விஜ்ஞேயா கபாலாப⁴யஶோபி⁴தா ॥
கந்யாஸங்க்ராந்திரித்யுக்தா பித்ருப்ரீதிகரா ஶுபா⁴ ॥
(முகே² க்ருஷ்ணவர்ணா, தே³ஹே ரக்தவர்ணா)

188. கந்யா ஸங்கிராந்தி ஸ்வரூபம்

கந்யா ஸங்கிராந்தி தேவதையானவள், கருப்பு முகமுடையவளும், சிவப்பு நிறமான சரீரமுடையவளும், 3 கண்களுடையவளும், யானை வாஹனத்தின் மீது வீற்றிருப்பவளும், ஸிம்ஹிகை என்று பெயருடையவளும், கபாலம், அபயங்களுடன் பிரகாசிப்பவளும், பிதிரு தேவதைகளுக்கு பிரியமாக இருப்பவளும், மங்களகரமான குணங்களுடையவளுமாவாள். (முகத்தில் கருப்பு நிறம், சரீரத்தில் சிவப்பு நிறம்) (6)

௧௮௯. 𑌅𑌥 𑌤𑍁𑌲𑌾𑌸𑌂𑌕𑍍𑌰𑌾𑌂𑌤𑌿 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑍍.

𑌷𑌡𑌾𑌨𑌨𑌾 𑌨𑍀𑌲𑌵𑌰𑍍𑌣𑌾 𑌕𑍁𑌕𑍍𑌕𑍁𑌟𑌸𑍍𑌥𑌾 𑌤𑍁𑌲𑌾𑌹𑍍𑌵𑌯𑌾 ।
𑌮𑌨𑍍𑌦𑌾 𑌤𑍍𑌰𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌸𑌹𑌿𑌤𑌾 𑌕𑌪𑌾𑌲𑌾𑌭𑌯𑌧𑌾𑌰𑌿𑌣𑍀 ॥
(𑌨𑍀𑌲𑌵𑌰𑍍𑌣𑌾)

189. துலா ஸங்கிராந்தி ஸ்வரூபம்.

துலா ஸங்கிராந்தி தேவதையானவள், ஆட்டு முகம் உடையவளும், நீலநிறமானவளும், கோழியின் மீது வீற்றிருப்பவளும் மந்தை என்று பெயருடையவளும் (மந்தமான ஸ்வபாவமுடையவளும்) 3 கண்களுடையவளும், கபாலம், அபயங்களை தரிப்பவளுமாவாள். (நீலநிறம்) (7)

௧௯௰. 𑌅𑌥 𑌵𑍃𑌶𑍍𑌚𑌿𑌕𑌸𑌂𑌕𑍍𑌰𑌾𑌂𑌤𑌿 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑍍.

𑌅𑌜𑌾𑌰𑍂𑌢𑌾 𑌨𑍀𑌲𑌵𑌰𑍍𑌣𑌾 𑌤𑍍𑌰𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌾 𑌹𑍍𑌰𑌾𑌦𑌿𑌨𑍀 𑌤𑌥𑌾 ।
𑌕𑌪𑌾𑌲𑌶𑌕𑍍𑌤𑌿𑌹𑌸𑍍𑌤𑌾 𑌚 𑌸𑌂𑌕𑍍𑌰𑌾𑌂𑌤𑌿𑌃 𑌵𑍃𑌶𑍍𑌚𑌿𑌕𑌾𑌹𑍍𑌵𑌯𑌾 ॥
(𑌨𑍀𑌲𑌵𑌰𑍍𑌣𑌾)

190. விருச்சிக ஸங்கிராந்தி ஸ்வரூபம்.

விருச்சிகஸங்கிராந்தி தேவதையானவள், ஆட்டின்மீது வீற்றிருப்பவளும், நீலநிறமானவளும், 3 கண்களுடையவளும், ஹிராதினீ என்று பெயருடையவளும், (சத்தம் போடுகின்றவளும்) கபாலம், சக்தி இவைகளை கைகளில் தரிப்பவளுமாவாள். (நீலநிறம்) (8)

௧௯௧. 𑌅𑌥 𑌧𑌨𑍁𑌸𑍍𑌸𑌂𑌕𑍍𑌰𑌾𑌂𑌤𑌿 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑍍.

𑌸𑌿𑌂𑌹𑌸𑍍𑌥𑌾 𑌤𑍍𑌰𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌾 𑌚 𑌚𑌿𑌤𑍍𑌰𑌵𑌰𑍍𑌣𑌾𑌜𑌰𑌾𑌹𑍍𑌵𑌯𑌾 ।
𑌕𑌪𑌾𑌲𑌾𑌭𑌯𑌹𑌸𑍍𑌤𑌾 𑌚 𑌧𑌨𑍁𑌸𑍍𑌸𑌂𑌕𑍍𑌰𑌾𑌂𑌤𑌿𑌰𑍀𑌦𑍃𑌶𑍀 ॥
(𑌚𑌿𑌤𑍍𑌰𑌵𑌰𑍍𑌣𑌾)

191. தநுஸ் ஸங்கிராந்தி ஸ்வரூபம்.

தநுஸ் ஸங்கிராந்தி தேவதையானவள், மஹிஷ வாஹநத்திலிருப்பவளும், 3 கண்களுடையவளும், சித்திர வர்ணோஜ்வலா என்று பெயருடையவளும், கபாலம், அபயங்களை கையில் வஹிப்பவளுமாவாளென்று கூறப்படுகிறது. (சித்திர வர்ணம்) (9)

௧௯௨. அத மகரஸங்க்ராந்திஸ்வரூபம்.

ஜவாகுஸுமவர்ணா ச த்ரிணேத்ரா ஸூகரானநா ।
கபாலவஜ்ரஹஸ்தா ச ராக்ஷஸீ சோஷ்ட்ரவாஹநா ॥
ஸாஸ்மாகம் மகரஸங்க்ராந்திரபீஷ்டபலதாயிநீ ।

(ரக்தவர்ணா)

192 மகர ஸங்கிராந்தி ஸ்வரூபம்.

மகர ஸங்கிராந்தி தேவதையானவள் சம்பரத்தம் பூவைப்போன்ற நிறமுடையவளும், 3 கண்களுடையவளும், பன்றிமுகமுடையவளும், கபாலம், வஜ்ஜிரங்களை கைகளில் தரிப்பவளும், ராக்ஷஸீ என்று பெயருடையவளும், ஒட்டக வாஹநமுடையவளுமாவாள். இவள் (நமக்கு) விரும்பிய பலன்களையளிப்பாளாக. (10)

௧௯௩ அத கும்பஸங்க்ராந்தி ஸ்வரூபம்.

பஞ்சிகா து ஸமாக்யாதா நீலவர்ணா த்ரிலோசநா ।
கபாலாபயஹஸ்தா ச கும்பஸங்க்ராந்திரீரிதா ॥

(நீலவர்ணா)

193. கும்ப ஸங்கிராந்தி ஸ்வரூபம்.

கும்ப ஸங்கிராந்தி தேவதையான பஞ்சிகை என்பவள், குதிரை வாஹநத்தில் வீற்றிருப்பவளும், நீல நிறமான

வளும், பருத்த வயிருடையவளும், கைகளில் கபாலம், அபயங்களை வஹிப்பவளுமாவாள். (நீல நிறம்) (11)

கககூச. அய மீநஸங்க்ராந்தி ஸ்வரூபம்.

ஹஸ்திகவரஸாரூடா வக்ராநாம்நீ த்ரிலோசநா ।
மீநாஸ்தாரக்தவர்ணா ஸ்யாத் கபாலாபயஸ

ஸம்யுதா ॥

(ரக்தவர்ணா)

194. மீந ஸங்கிராந்தி ஸ்வரூபம்.

மீந ஸங்கிராந்தி தேவதையானவள், சிறந்த கரடியின் மீது வீற்றிருப்பவளும், வக்கிரை என்றும் மீனு என்றும் பெயருடையவளும், 3 கண்களுடையவளும், சிவப்பு நிறமாக இருப்பவளும், கபாலம், அபயங்களை வஹிப்பவளும் ஆவாள். (வெண்சிவப்பு நிறம்) (12)

அய ஆதிஸங்க்ராந்திநாமாநி —

(ஜ்யோதிஷார்ணவே)

கராளீ ச மஹாகோரா விரூபாக்ஷீ மஹோதரீ ।
ஜிம்ஹிகா ஸிம்ஹிகா மந்தா ஹ்ராதிநீ சோஜ்வலா ததா ॥
ராக்ஷஸீ ஹம்ஜிகா வக்ரா சேதி ஸங்க்ராந்தய:

க்ரமாத் ।

12 ஸங்கிராந்திகளின் பெயர்கள் (ஜ்யோதிஷார்ணவத்தில்)

மேஷ ஸங்கிராந்தி முதலிய 12 ஸங்கிராந்திகளின் தேவதைகள், முறையே, கராளீ 1, மஹாகோரை 2, விரூபாக்ஷீ 3, மஹோதரீ 4, ஜிம்ஹிகை 5, ஸிம்ஹிகை 6, மந்தை 7, ஹ்ராதிநீ 8, உஜ்வலை 9, ராக்ஷஸீ 10,

பஞ்ஜிகை 11, வக்கிரை 12 என்று பெயருடையவர்க ளாவார்கள்.

அத ஸங்க்ராந்திவாஹநாநி.
(ஜ்யோதிஷார்ணவே)

வ்யாக்ர ஸிம்ஹ வராஹாஸ்ச ராஸபோ கஜகுக்குடௌ மேஷ: ।
உஷ்ட்ராஸ்வௌ ச மஹிஷஸ்சோஷ்ட்ர ஸ்வோ ருக்ஷ
ஸ்ச ச ॥

ஏதாநி வாஹநாநி ஸ்யு: ஸங்க்ராந்தீநாம் க்ரமாதித: ।

12 ஸங்கிராந்திகளின் வாஹநங்கள்.
(ஜியோதிஷார்ணவத்தில்)

புலி 1, சிங்கம் 2, பன்றி 3, நாய் 4, கழுதை 5, யானை 6, கோழி 7, ஆடு 8, எருமை 9, ஒட்டகம் 10, குதிரை 11, கரடி 12. இவைகள், முறையே, மேஷாதி ஸங்கிராந்திகளின் வாஹநங்களாம்,

அத ஸங்க்ராந்திஷு தாநாந்யாஹ விஸ்வாமித்ர:.
(ஹேமாத்ரீயே)

மேஷஸங்க்ரமணே பாநோ: மேஷதாநம் மஹாபலம் ।
வ்ருஷஸங்க்ரமணே தாநம் கவாம் ப்ரோக்தம் ததைவ ச ॥

வஸ்த்ராந்நபாநதாநாநி மிதுநே விஹிதாநி து ।
க்ருததேநுப்ரதாநம் து கர்கடே பரிசஸ்யதே ॥

ஸஸௌவர்ணம் சத்ரதாநம் ஸிம்ஹே ச விஹிதம்
ஸதா ।
கந்யாப்ரவேஸே வஸ்த்ராணாம் ஸுரபீணாம்
ததைவ ச ॥ ௧ ॥

துலாப்ரவேஶே தாந்யாநாம் பீஜாநாமேவ சோத்தமம் ।
கீடப்ரவேஶே வஸ்த்ராணாம் வேஶ்மநாம் தாநமேவ ச ॥
தநு:ப்ரவேஶே வஸ்த்ராணாம் யாநாநாம் ச
மஹாபலம் ।
மகரப்ரவேஶே தாரூணாம் தாநமக்நேஸ்ததைவ ச ॥
கும்பப்ரவேஶே தாநம் து கோமஹிஷ்யத்ருண
ஜலஸ்ய ச ।
மீநப்ரவேஶே [illegible]நாமபி சோத்தமம் ॥ ௬ ॥

ஸங்கிராந்திகளில் செய்யவேண்டிய தாநங்கள்.
விசுவாமித்திரர் கூறியுள்ளது.
(பட்டபாஸ்கரீயத்தில்)

ஸூரியன் மேஷத்தில் பிரவேசிக்கின்ற மேஷஸங்கிராந்தி காலத்தில், மேஷ (ஆடு) தாநமானது மஹத்தான பலனைக் கொடுக்கும். (1)

விருஷப ஸங்கிரமண காலத்தில், பசு மாட்டை தாநம் செய்யவேண்டும். அது மஹத்தான பலனையளிக்கும். (2)

மிதுந ஸங்கிராந்தி காலத்தில், ஆடைகள், பற்பல ஆகாரங்கள், பலவித பாநங்கள், வாஹநங்கள் இவைகளை தாநம் செய்யவேண்டுமென்று கூறப்பட்டிருக்கின்றது. (3)

கடக ஸங்கிராந்தி காலத்தில் கிருததேநுவை தாநம் செய்யவேண்டுமென்று கூறப்பட்டிருக்கின்றது. (4)

ஸிம்ஹ ஸங்கிராந்தியில், தங்கத்துடன் பாத்திரங்களை தாநம் செய்யும்படி விதிக்கப்பட்டுள்ளது. (5)

கந்யா ஸங்கிராந்தி காலத்தில், ஆடைகளையும் பசு மாடுகளையும் தாநம் செய்யவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. (6)

துலா ஸங்கிரமண காலத்தில், தாநியங்களையும், விதைகளையும் தாநம் செய்வது சிறந்ததாகும். (7)

விருச்சிக ஸங்கிராந்தி காலத்தில், ஆடைகளையும் வீடுகளையும் தாநம் செய்யவேண்டும். (8)

தநுஸ் ஸங்கிராந்தி காலத்தில், வஸ்திரங்களையும், வாஹநங்களையும் தாநம் செய்வது, மஹத்தான பலனை அளிக்கும். (9)

மகர ஸங்கிராந்தி காலத்தில், தாருக்களை தாநம் செய்வதும், அக்கினி தாநம் செய்வதும் உத்தம பலனை அளிப்பவைகளாம். (தாரு என்பதற்கு மரக்கட்டை என்பது பொருள். ஆகவே, மரத்தினாலே செய்யப்பட்ட வாஹநங்கள், பலகைகள் முதலியவைகள் என்று பொருள் கொள்ளலாம். அக்கினி தாநம் என்பதற்கு, விளக்கு என்றும் கணப்பு என்றும் பொருள் கொள்ளலாம்.) (10)

கும்ப ஸங்கிராந்தி காலத்தில், பசுமாடுகளுக்குப் புல்லைப் போடுவதும் தண்ணீர் வைப்பதும் உத்தமமாகும்.

மீந ஸங்கிராந்தியில், வாடாத (புதிய) புஷ்ப மாலைகளை தாநம் செய்வது உத்தம பலனையளிப்பதாகும்.

அத சாதுர்மாஸ்யாதிஷு நிஷித்தத்ரவ்யாணி.

(ஸைவாகமே)

* யாதாய ூஶா வ ஜிதூஷ்ராவூரா ணஷூூஜ வவ வ ।

விவஹுஸக்ஙவஷுூஜவிஷூம்ஷாமஹமவஷ(ஷா)ண

வவ வ ॥

* ஹரிவம்ஶே த — ஸாண-அ௦ஜ - ஸ௦ஶ-வஜஷீதூ வஷாநாம் ஷூாஜெ, கூூஜெண, வஶ-ண-உ௦ஜ-ஸ௦ஶ-ஸவிதஜ வஷாநி ஷூூஜெ ।

பர்ஜந்யஶ்சாதிமௌ தே ஸங்க்ராந்தீநாம் ஹி
தேவதா: ।

12 மாஸாபிமாநிகளான 12 ஆதித்தியர்களின் பெயர்கள்.

** தாதா 1, அர்யமா 2, மித்திரம் 3, அருணன் 4, சந்திரன் 5, விவஸ்வான் 6, துவஷ்டா 7, விஷ்ணு 8, அம்சு 9, பகன் 10, பூஷா 11, பர்ஜந்யன் 12 ஆகிய 12 ஆதித்தியர்களும் 12 மாஸ ஸங்கிராந்திகளின் (மாஸங்களின்) அபிமாநி தேவதைகளாவார்கள்.*

அத த்வாதஶமாஸாதிபதித்வாதஶாதித்ய தேவதாநாம்
த்யாநாநி.

(ஶைவாகமே — ஶ்லோகை:, மூலைக்யை: விஷ்ணுமஹாகமதந்த்ரே
ஸூர்யஸ்து ஸம்ப்ரவர்ணநே)

௧௩௫. சைத்ராதிப தாத்ருஸூர்ய த்யாநம்.

தாதா க்ருதஸ்தலீ ஹேதி: வாஸுகீ ரதக்ருந்நகே ।
புலஸ்த்யஸ்தும்புருரிதி மதுமாஸம் நயந்த்யமீ ॥ ௧ ॥

தாதா ஶுபஸ்ய மே தாதா ப்ரஜாயோ ப்ரஜயோஷி
ப்ரஜயஸ: ।
ரஶ்மிஜாலஸமாஶ்லிஷ்ட: தமஸ்தோமவிநாஶந: ॥ ௨ ॥

தேவேஷ்வாபி தாதா ஸப்தய: । அஶ்வா: க்ருதஸ்தலீ । மதுபுஷ்பஸம்பந்ந: । புலஸ்த்ய: ரிஷி: । வாஸுகிநீயோ வாஸுகி: । ரதக்ருதாவேலா வத: । ஹேதிநாமா ராக்ஷஸ: । ஸூர்யோரக்ஷஸஹஸ்ராணி ரக்ஷவண: ॥

* ஹரிவம்சத்தில், அருணன், சந்திரன், அம்சு, பர்ஜந்யன் என்ற பதங்களுக்கு பதிலாக முறையே, வருணன், இந்திரன், அம்சன், ஸவிதா என்ற பதங்கள் காணப்படுகின்றன.

12 மாஸாபிமாநிகளான 12 ஆதித்தியர்களின் த்யாநம்.

(சைவாகமத்தில் சுலோகங்களாலேயும், விஷ்ணுபாகவதத்தில் வாக்கியங்களாலேயும் கூறப்பட்டுள்ளன. ரச்மிகள் கூர்ம புராணத்தில் கூறப்பட்டுள்ளன.)

195. அவைகளுள் தாதிரு ஸூரிய த்யாநம்

மேஷ மாஸத்திற்கு அதிதேவதை தாதா என்ற ஸூரியனுவார். கிருதஸ்தலீ என்பவள் அப்ஸரஸ் ஆவாள். ஆயுதமானது வாஸுகி என்பதாம். புலஸ்தியர் ரதத்தை கல்பிப்பவர் (செலுத்துகின்றவர்) ஆவார். தும்புரு கந்தர்வனுவார். இவர்கள் மதுமாஸத்தை (சித்திரை மாஸத்தை)ச் செலுத்துகின்றவர்களாவார்கள்.

ரச்மிஜாலங்களினுலே தழுவிக்கொள்ளப்பட்டவரும் (கிரணங்களின் தொகுதிகளாலே சூழப்பட்டவரும்) இருட்டுக் கூட்டத்தையழிப்பவருமான தாதா என்ற ஸூரியன், அடிக்கடி அளவற்ற சுபங்களையளிப்பாராக.

மேஷ மாஸத்தில் தாதா என்பவர் ஸூரியனுவார். அப்ஸரஸ் கிருதஸ்தலீ என்பவளாவார். கந்தர்வன் தும்புரு என்பவராவார். பாசஸ்தாநத்திலிருப்பது (கயிறுபோன்று வெகுதூரம் வீசுகின்ற ஒளிக்கதிரானது) வாஸுகி என்பதாகும். வர்தகி என்பவர் ரதகாரனும். (ரதகாரன்—தேரோட்டி) ஹேதி என்பவன் ராக்ஷஸனும். கிரணங்கள் எண்ணுயிரம் 8000 (சிவப்பு நிறம்) (1)

௧௯௫. 𑌅𑌥 𑌧𑌾𑌤𑍃𑌸𑍂𑌰𑍍𑌯 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

𑌧𑌾𑌤𑌾 𑌮𑌾𑌰𑍁𑌹𑍋𑌤𑍍𑌰𑍋𑌜𑌃 𑌪𑍍𑌰𑌹𑍇𑌤𑌿𑌃
𑌵𑌾𑌸𑍁𑌕𑌿𑌕𑍃𑌤𑌸𑍍𑌥𑌲𑍀 ।
𑌨𑌾𑌰𑌦𑌃 𑌕𑍃𑌤𑍀𑌰𑌸𑍍𑌥𑍁 𑌨𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑍇𑌤𑍇 𑌸𑍍𑌮 𑌚𑌾𑌯𑌵𑌂 ॥ ௧ ॥

𑌶𑍈𑌲𑌾 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌃 𑌕𑌠𑍋𑌰𑌾𑌕𑌰𑌭𑌾𑌸𑍁𑌰𑌃 ।

𑌅𑌰𑍍𑌯𑌮𑌾𑌸𑍍𑌤𑍁 𑌸𑌦𑌾 𑌭𑍂𑌤𑍍𑌯𑍈 𑌭𑍂𑌯𑌸𑍍𑌯𑍈
𑌪𑍍𑌰𑌣𑌤𑌸𑍍𑌯 𑌮𑍇 ॥ ௨ ॥

𑌵𑍃𑌷𑌭𑍇 𑌮𑌾𑌸𑌿 𑌅𑌰𑍍𑌯𑌮𑌾 𑌸𑍂𑌰𑍍𑌯𑌃 । 𑌪𑍁𑌲𑌹 𑌋𑌷𑌿𑌃 । 𑌅𑌪𑍍𑌸𑌰𑌾𑌃 𑌪𑍁𑌞𑍍𑌜𑌿𑌕𑌸𑍍𑌥𑌲𑍀 𑌨𑌾𑌰𑌦𑍋 𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌃 । 𑌕𑌚𑍍𑌛𑌨𑍀𑌰𑍋 𑌨𑌾𑌗𑌃 । 𑌊𑌰𑍍𑌜𑍋 𑌰𑌥𑌕𑍃𑌤𑍍 । 𑌪𑍍𑌰𑌹𑍇𑌤𑍀 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌃 । 𑌰𑌶𑍍𑌮𑌯𑍋 𑌦𑌶𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌣𑌿 । 𑌪𑍀𑌤𑌵𑌰𑍍𑌣𑌃 ॥

196. அர்யம ஸூர்ய தியாநம்.

விருஷ மாஸத்திற்த (வைகாசி மாஸத்திற்கு) அர்யமா என்பவர் ஸூரியனுவார். புலஹர் இருடியாவார். ஊர்ஜன் என்பவர் ரதகாரனுவார். பிரஹேதி என்பவர் ராக்ஷஸனுவார். புஞ்ஜிகஸ்தலீ என்பவள் அப்ஸரஸ் ஆவாள். நாரதர் கந்தர்வனுவார். கச்சநீரன் என்பவர் நாகனுவார். இவர்கள் மாதவ மாஸத்தை (மாதவம்–விருஷ மாஸகம் அல்லது வைகாசி மாஸம்.) செல்லச் செய்கின்றவர்களாவார்கள்.

மேரு மலையின் கொடிமுடிகளின் நடுவில் ஸஞ்சரிப்பவனும், தாமரைபோடைகளுக்கு பந்துவாக இருப்பவனும், (தாமரைகளை மலரச்செய்பவனும்) ஆன அர்யமா என்னும் ஸூர்யனுவார். அவர் வணங்குகின்ற எனக்கு, எப்பொழுதும் அளவுகடந்த ஐசுவரியத்தையளிப்பாளாக.

விருஷப மாஸத்தில், அர்மா என்பவர், ஸூரியன் ஆவார். புலகர், இருடியாவார். புஞ்ஜிகஸ்தலீ என்பவள் அப்ஸரஸ் ஆவாள். நாரதர் கந்தர்வனுவார். கச்சநீரன் என்பவர், நாகமாவார். ஊர்ஜன் என்பவர் வர்தகியாவார். (வர்தகீ–தேரோட்டி) பிரஹேதி என்பவர், ராக்ஷஸன்
41 ஆவார். ஸூரியனுடைய கிரணங்கள் பதினுயிரம். 10000. (மஞ்சள் நிறம்) (2)

௧௯௭. மித்ர ஸூர்ய த்யாநம்.

மித்ரோऽத்ரி: பௌருஷேயோऽத தக்ஷகோ மேநகா ஹஹா |
ரதஸ்வந இதி ஹ்யேதே ஶுக்ரமாஸம் நயந்த்யமீ ‖ ௧ ‖

நிஶாநிவாரணபடூதயாத்ரிக்ருதாஶ்ரய: |
மித்ரோऽஸ்து மம மோதாய தமஸ்தோமவிநாஶந: ‖ ௨ ‖

மித்ரநாமா ஸூர்ய: | அத்ரி: ருஷி: | மேநகா அப்ஸரா: | ஹாஹா கந்தர்வ: | தக்ஷகோ நாக: | ரதஸ்வநாஹ்வோ வர்தகி: | பௌருஷேயோ ராக்ஷஸ: | ரஶ்மயஸ்ஸப்தஸஹஸ்ராணி | அருணவர்ணா: ‖

197. மித்திர ஸூரிய தியாநம்.

மிதுந மாஸத்தில் மித்திரன் என்பவர் ஸூரியனுவார். அத்திரி ருஷியாவார். பௌருஷேயன் ராக்ஷஸனுவான். தக்ஷகன் நாகனுவான். மேநகை அப்ஸரஸ் ஆவாள். ஹாஹா என்பவர் கந்தர்வனுவார். ரதஸ்வநன் என்பவர் தேரோட்டியாவார். இவர்கள் சுக்லமாஸத்தை (சுக்ல மாஸம்—மிதுந மாஸம்) செலுத்துகிறவர்களாவார்கள்.

இரவைக்கடத்துவதில் ஸாமர்த்தியமுள்ளவரும், உதய பர்வதத்தை ஆச்சிரயமாக (தங்குமிடமாக)க் கொண்டவரும், இருட்டுத்தொகுதிகளை அழிப்பவருமான மித்திரனுவர் எனக்கு ஸந்தோஷத்தை யளிப்பாராக.

மிதுந மாஸத்தில் மித்திரன் ஸூரியனுவார். அத்திரி முநிவராவார். மேநகை அப்ஸரஸ் ஆவாள். ஹாஹா என்பவர் கந்தர்வனுவார். தக்ஷகன் நாகனுவான். ரதஸ்வநன் என்பவன் ரதகாரனுவான், பௌருஷேயன்

ராக்ஷஸனுவான். ரச்மிகள் (கிரணங்கள்) ஏழாயிரம் 7000.
(சிவப்பு நிறம்.) (3)

கக௮. அத அருணஸூர்ய த்யாநம்.

வஸிஷ்டோ ஹ்யருணோ ரம்பா ஸஹஜந்யஸ்ததா
ஹாஹா: ।
சுக்ஷ்சித்ரஸ்வநஸ்சைவ சுசிமாஸம் நயந்த்யமீ ॥ க ॥

ஸூர்ய: ஸ்வந்தாரசைச் சவிபுல்யாஸ்ரீ ரூதாவவாந்து।
காலஸ்வரூப: காமரூபோ ஹ்யருணஸ்ஸேவ்யதே
மயா ॥ உ ॥

கடகே(டே)சுசி அருணஸ் ஸூர்ய: । வஸிஷ்ட:
ருஷி: । ரம்பா அப்ஸரா: । ஹாஹா கந்தர்வ: । சுக்ஷோ
நாக: । சித்ரஸ்வநோ யக்ஷ: । ஸஹஜந்யோ
ராக்ஷஸ: । ரச்மய: ஸப்தஸஹஸ்ராணி । (சோணவர்ண:) ॥

198. அருண ஸூரிய த்யாநம்.

சுசி என்னும் கடக மாஸத்திற்கு அருணன் என்பவர் ஸூரியனுவார். வஸிஷ்டர் முனிவராவார். ரம்பை அப்ஸரஸ் ஆவாள். ஸஹஜந்யன் ராக்ஷஸனுவார். ஹாஹா கந்தர்வனுவார். சுகன் நாகனுவார். சித்திரஸ்வநன் ரதகாரனுவார். இவர்கள் கடக மாஸத்தை நடத்துகின்றவர்களாவார்கள்.

ரதத்தில் வீற்றிருப்பவரும், ஒளிகளை மாலைபோல் அணிந்திருப்பவரும், அதிகமாகப் பொசுக்குகின்ற தன்மையுடையவரும், கால ஸ்வரூபியாக இருப்பவரும், தோன்றிய உருவத்தை எடுக்கும் ஆற்றலுடையவரும், அல்லது மன்மதனைப்போன்ற அழகு வாய்ந்தவருமான அருணன் என்னும் ஸூரியனை நான் ஸேவிக்கின்றேன்.

கடக மாஸத்தில் அருணன் ஸூரியனுவார். வஸிஷ்டர் முனிவராவார். ரம்பை அப்ஸரஸ் ஆவாள். ஹூஹூ கந்தர்வனுவார். சுகன் நாகனுவார். சித்திரஸ்வநன் தேர்ப்பாகனுவார். ஸஹஜந்யன் ராக்ஷஸனுவார். ஐந்தாயிரம் 5000. கிரணங்களாம். (பச்சை நிறம்.) (4)

௧௯௯. அத இந்த்ரஸூர்ய த்யாநம்.

இந்த்ரோ விஶ்வாவஸு: ஶ்ரோதா ஏலாபுத்ரஸ்ததாங்கிரா: |
ப்ரம்லோசா ராக்ஷஸ: ஶர்யோ நபோமாஸம் நயந்த்யமீ ||

ஸஹஸ்ரரஶ்மிஸம்வீதம் இந்த்ரம் வரதமாஶ்ரயே |
ஶிரஸா ப்ரணமாம்யத்ய ஶ்ரேயோவ்ருத்திப்ரதாயகம் || ௨ ||

ஸிம்ஹ மாஸி இந்த்ரஸூர்ய: | அங்கிரா ருஷி: | விஶ்வாவஸுர்கந்தர்வ: | ப்ரம்லோசா அப்ஸரா: | ஏலாபுத்ரோ நாக: | ஶ்ரோதா ரதக்ருத்: | ஶர்யோ ராக்ஷஸ: | ரஶ்மயஸ்ஸஹஸ்ராணி |

(ஶ்வேதவர்ண:)

199. இந்திர சூரிய த்யாநம்.

ஸிம்ஹ மாஸத்திற்கு அதிதேவதை இந்திரன் என்னும் சூரியனுவார். விசுவாவஸு கந்தர்வனுவார். சுரோதா என்பவர் ரதகாரனுவார். இலாபுத்திரன் என்பவர் நாகம் ஆவார். அங்கிரஸ் முனிவராவார். பிரம்லோசா என்பவள் அப்ஸரஸ் ஆவாள். சரியன் என்பவர் ராக்ஷஸனுவார். இவர்கள் நபோமாஸமென்னும் ஸிம்மமாஸத்தை செலுத்துகின்றவர்களாவார்கள்.

ஆயிரக்கணக்கான கிரணங்களினுலே சூழப்பட்டவரும் வேண்டுகின்ற வரங்களையளிப்பவருமான இந்திரன்

என்னும் ஸூரியனை அடைகின்றேன். க்ஷேம லாபங்களையும் அபிவிருத்தியையுமளிப்பவருமான அந்த இந்திரனை இப்பொழுது சிரத்தாலே வணங்குகின்றேன்.

ஸிம்ஹ மாஸத்தில் இந்திரன் சூரியனாவார். அங்கிரஸ் முனிவராவார். விசுவாவஸு கந்தர்வனாவார். பிரம்லோசை அப்ஸரஸ் ஆவாள். இலாபுத்திரன் நாகமாவான். சுரோத்கிரன் ரதகாரனாவான். சரியன் ராக்ஷஸனாவார். கிரணங்கள் ஏழாயிரம் 7000. வெளுப்பு நிறம். (5)

௨௦௦. अथ विवस्वत्सूर्यध्यानम्.

विवस्वानुग्रसेनश्च व्याघ्र आसारणो भृगुः ।
अनुम्लोचाः शङ्खपालो नभस्याख्यं नयन्त्यमी ॥

जगत्प्राणकृतारम्भं सर्वदिग्व्याप्ततेजसम् ।
नमोरूपहराभीवं विवस्वन्तं नमाम्यहम् ॥

कन्यायां विवस्वान्नाम सूर्यः । भृगुः ऋषिः । अनुम्लोचा अप्सराः । उग्रसेनो गन्धर्वः । शङ्खपालो नागः । आसारणो यक्षः । व्याघ्रो राक्षसः । रश्मयो दशसहस्राणि । वह्निवर्णः ॥

200. விவஸ்வத் ஸூரிய தியாநம்.

கந்யா மாஸத்தில், விவஸ்வான் என்பவர் ஸூரியன் ஆவார். உக்கிரஸேநன் என்பவர் கந்தர்வனாவார். வியாக்கிரன் என்பவன் ராக்ஷஸனாவான். ஆஸாரணன் என்பவன் தேர்ப்பாகனாவான். பிருகு என்பவர் இருடி ஆவார். அநுமிலோசை என்பவள் அப்ஸரஸ் ஆவாள். சங்கபாலன் என்பவர் நாகமாவார். இவர்கள், நபஸ்ஸியம்

என்னும் கந்யா மாஸத்தைச் செலுத்துகின்றவர்கள் ஆவார்கள். (1)

உலகத்தைத் தோற்றுவித்தவரும், எல்லாத் திக்குகளிலும் பறந்திருக்கின்ற ஒளியையுடையவரும், ஆகாயத்தில் சஞ்சரிக்கின்ற கிரஹங்களுள் மிகவும் பிரகாசமாக இருப்பவருமான விவஸ்வான் என்னும் ஸூரியனை நான் வணங்குகின்றேன். (2)

கந்யா மாஸத்தில், விவஸ்வான் ஸூரியனாவார். பிருகு முநிவராவார். அநும்லோசை அப்ஸரஸ் ஆவாள். உக்கிரஸேநன் கந்தர்வனாவார். சங்கபாலன் நாகமாவார். ஆஸாரணன் ரதகாரனாவார். வியாக்ரன் ராக்ஷஸன் ஆவார். கிரணங்கள் பதினாயிரமாகும். 10000. அதிகமாக சிவப்பு கலந்த மஞ்சள் நிறம். (6)

௨௱௧. அத² த்வஷ்ட்ருஸூர்யஸ்ய த்⁴யானம்.

த்வஷ்டா ருசீகோ ரக்ஷஸ்து கம்ப³லாஶ்வஸ்திலோத்தமா ।
ப்³ரஹ்மாபோதாய ஶதஜித் த்⁴ருதராஷ்ட்ர இஷம்ஸதா³: ॥

த்வஷ்டா ஶுபா⁴ய மே பூ⁴யாத் ஶிஷ்டாவலி
நிஷேவித: ।
நாநாஶில்பகரோ நாநாயாதார்த்தவ: ப்ரபா⁴கர: ॥

துலாமாஸி த்வஷ்டா ஸூர்ய: । ப்³ரஹ்மாத ருஷி: । திலோத்தமா அப்ஸரா: । த்⁴ருதராஷ்ட்ரோ க³ந்த⁴ர்வ: । கம்ப³லாஶ்வோ நாக³: । ஶதஜிந்நாமா யக்ஷ: । ருசீகோ ராக்ஷஸ: । ரஶ்மயோ(அ)ஷ்டஸஹஸ்ராணி । விசித்ரவர்ணா: ॥

201. துவஷ்டா என்னும் ஸௌரியன் தியாநம்.

துலா மாஸத்தில், துவஷ்டா என்பவர் ஸூரியனுவார். ருசீகன் என்பவர் ராக்ஷஸன் ஆவார். கம்பளன் என்பவர் நாகனுவார். திலோத்தமை என்பவள் அப்ஸரஸ் ஆவாள். பிரம்ஹராதன் என்பவர் இருடியாவார். சதஜித்து என்பவர் ரதகாரன் ஆவார். திருதராஷ்டிரன் என்பவர் கந்தர்வன் ஆவார். இவர்கள், இஷ மாஸமென்னும் துலா மாஸத்தை பரிபாலிப்பவர்களாவார்கள். (2)

சிஷ்டர்களின் கூட்டங்களினுலே சூழப்பட்டவரும் (சிஷ்டர்கள் – சிறந்த ஆசாரம் அநுஷ்டாநம் உடையவர்கள்) பற்பல சில்பங்களைச் செய்யுமாற்றலுள்ளவரும், பலவித தாதுப்பொருள்களின் உருவமுடையவரும், ஒளியையுண்டு பண்ணுகின்றவருமான துவஷ்டா என்னும் ஸூரியனுனவர் எனக்கு மங்களங்களையளிப்பாராக. (2)

துலா மாஸத்தில், துவஷ்டா ஸூரியன் ஆவார். பிரஹ்மராதன் முநிவராவார். திலோத்தமை அப்ஸரஸ் ஆவாள். திருதராஷ்டிரன் க்ந்தர்வன் ஆவார். கம்பளன் நாகனுவார். சதஜித் என்பவர் தேரோட்டியாவார். ருசீகன் என்பவர் ராக்ஷஸனுவார். கிரணங்கள் எண்ணுயிரம் 8000 ஆகும். சித்திரவர்ணம். (7)

௨௱௨. அத விஷ்ணுஸூர்யஸ்ய த்யாநம்.

விஷ்ணுஸ்தபதி ரம்பா ஸூர்யவர்சாஸ்த்வ ஸத்யஜித் ।
விஶ்வாமித்ரோ மகாபேத ஊர்ஜமாஸம் நயந்த்யமீ ॥

ஹாடகஸம்ஹதமயூகம் வேதத்ரயநிஷேவிதம் ।
காயத்ர்யாதிவாஹ்யம் தம் விஷ்ணும் பக்த்யா நமாம்யஹம் ॥

வ்ருஶ்சிகே மாஸி விஷ்ணுஸ்ஸூர்ய: । விஶ்வாமித்ர ருஷி: ।

ரம்பாப்ஸரா: । ஸூர்யவர்சா கந்தர்வ: । ஸத்ய ஜித்க்ராமணீ: । விஶ்வாமித்ர ருஷி: । மகாபேதோ ராக்ஷஸ: । ஷட்ஸஹஸ்ர கிரணாணி । அருண வர்ண: ॥

202. விஷ்ணு ஸூரிய த்யாநம்.

ஊர்ஜம் என்னும் விருச்சிக மாஸத்திற்கு, விஷ்ணு என்பவர் ஸூரியனுவார். அசுவதரன் என்பவர் நாகனுவார். ரம்பை என்பவள் அப்ஸரஸ் ஆவாள். ஸூரியவர்சஸ் என்பவர் கந்தர்வனுவார். ஸத்தியஜித்து என்பவர் தேர்ப் பாகனுவார். விசுவாமித்திரர் இருடியாவார். மஹா பிரேதன் என்பவர் ராக்ஷஸனுவார். இவர்கள் ஊர்ஜ மாஸத்தைச் செலுத்துகின்றவர்களாவார்கள்.

ஸூரியமண்டலத்தின் மத்தியிலிருப்பவரும், 3 வேதங் களினுலேயும் ஸேவிக்க (ஸ்துதிக்க) ப்பட்டவரும், காயத்ரி யினுலே பிரதிபாதிக்கப்பட்டவருமான (காயத்திரியின் பொருளாக விளங்குகின்றவருமான) விஷ்ணு ஸூரியனை நான் பக்தியுடன் வணங்குகின்றேன். (2)

விருச்சிக மாஸத்தில், விஷ்ணு, ஸூரியன் ஆவார். விசுவாமித்திரர் முனிவராவார். ரம்பை அப்ஸரஸ் ஆவாள். ஸூரியவர்சஸ் என்பவர் கந்தர்வன் ஆவார். ஸத்யஜித்து என்பவர் ரதகாரனுவார். அசுவதரன் என்பவர் நாகன் ஆவார். மஹாபிரேதன் ராக்ஷஸனுவார். கிரணங்கள் ஆறுயிரம் 6000 ஆகும். அருண வர்ணம். (8)

௨௦௩. அத அம்ஶுஸூர்யஸ்ய த்யாநம்.

அம்ஶு: காஶ்யபதார்க்ஷ்யௌ ருதஸேநஸ்ததோர்வஶீ ।
விர்யுச்சத்ருஸ்ஸஹாமாஸம்வை ஸேநாநாஸம் நயந்த்யமீ ॥

ஸஹா விஷ்ணுவர்ணாத்ரோ ஜயந்தோஜாதவேதஸ: ।

𑌮𑍁𑌨𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌨𑌿𑌵𑌹𑌸𑍍𑌤𑍁𑌤𑍍𑌯𑌃 𑌸 𑌦𑌿𑌶𑍋𑌤𑍍𑌵𑌂𑌶𑍁𑌨𑌾𑌮𑌕𑌃 ॥

𑌧𑌨𑍁𑌰𑍍𑌮𑌾𑌸𑌿 𑌅𑌂𑌶𑍁𑌸𑍍𑌸𑍂𑌰𑍍𑌯𑌃 । 𑌕𑌾𑌶𑍍𑌯𑌪𑌃 𑌋𑌷𑌿𑌃 । 𑌊𑌰𑍍𑌵𑌶𑍀 𑌅𑌪𑍍𑌸𑌰𑌾𑌃 । 𑌋𑌤𑌸𑍇𑌨𑍋 𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌃 । 𑌮𑌹𑌾𑌶𑌙𑍍𑌖𑍋 𑌨𑌾𑌗𑌃 । 𑌤𑌾𑌰𑍍𑌕𑍍𑌷𑍍𑌯𑍋 𑌰𑌥𑌕𑍃𑌤𑌿𑌃 । 𑌵𑌿𑌦𑍍𑌯𑍁𑌚𑍍𑌛𑌤𑍍𑌰𑍁𑌃 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌃 । 𑌰𑌶𑍍𑌮𑌯𑍋 𑌨𑌵𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌣𑌿 । 𑌹𑌰𑌿𑌦𑍍𑌵𑌰𑍍𑌣𑌃 ॥

203. அம்சு ஸூரிய த்யாநம்.

ஸஹம் என்னும் தநுர் மாஸத்திற்கு, ஸூரியன் அம்சு என்பவராவார். காசியபர் முனிவராவார். தார்க்ஷியன் என்பவர் தேர்ப்பாகனுவார். ருதஸேநன் என்பவர் கந்தர்வனுவார். ஊர்வசீ என்பவள் அப்ஸரஸ் ஆவாள். வித்தியுத்சத்துரு என்பவர் ராக்ஷஸனுவார். மஹாசங்கன் என்பவர் நாகமாவார். இவர்கள் ஸஹம் என்னும் தநுர் மாஸத்தைச் செலுத்துகின்றவர்களாவார்கள். எப்பொழுதும் (தீமைகளை) விரட்டியடிப்பதில் விருப்பம் உடையவரும், உலகத்திற்கு மங்களங்களையளிக்கின்ற பிரகாசமுடையவரும், முனிவர்களின் தொகுதிகளினுலே துதிக்கப்பட்டவருமான அம்சு என்னும் ஸூரியனுனவர் எனக்கு செல்வத்தையளிப்பாராக.

தநுர் மாஸத்தில் அம்சு என்பவர் ஸூரியனுவார். காசியபர் முனிவராவார். ஊர்வசி அப்ஸரஸ் ஆவாள். ருதஸேநன் கந்தர்வனுவார். மஹாசங்கன் நாகமாவார். தார்க்ஷியன் ரதகாரனுவார். வித்தியுத்சத்துரு ராக்ஷஸன் ஆவார். கிரணங்கள் ஒன்பதினுயிரம் 9000 ஆகும். பச்சை நிறம். (9)

௨௱௪. 𑌅𑌥 𑌭𑌗𑌸𑍂𑌰𑍍𑌯 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

𑌭𑌗𑌃 𑌸𑍍𑌫𑍂𑌰𑍍𑌜𑌤𑍍𑌤𑌾𑌰𑌵𑌿𑌷𑍍𑌟𑌨𑍇𑌤𑍍𑌰𑌵𑌰𑍍𑌣𑌃 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌸𑍍𑌤𑍁
𑌵𑌕𑍍𑌷𑌃 ।

क(का)र्कोटकः पूर्वचित्तिः पौषमासं
नयन्तु मे ॥ १ ॥

तिथिमासर्तुवर्षाणां अयनानां च कल्पकः ।
घटिकानां च यः कर्ता भगो भाग्यप्रदोऽस्तु
मे ॥ २ ॥

मकरे मासि भगस्सूर्यः । अरिष्टनेमिः ऋषिः । पूर्वचित्तिरप्सराः । ऊर्णो गन्धर्वः । कर्कोटको नागः । आयू रथकृत् । स्फूर्जो राक्षसः । रश्मय एकादशसहस्राणि । रक्तवर्णः ॥

204. பக ஸூரிய தியாநம்.

பௌஷமெனப்படுகின்ற மகர மாஸத்திற்து, பகன் என்பவர் ஸூரியனுவார். ஸ்பூர்ஜன் என்பவர் ராக்ஷஸன் ஆவார். அரிஷ்டநேமி என்பவர் முநிவராவார். ஊர்ணன் என்பவர் கந்தர்வன் ஆவார். ஆயு என்பவர் ரதகாரன் ஆவார். இவர் ஐந்தாவது நபராவார். கார்கோடகன் நாக மாவார். பூர்வசித்தி அப்ஸரஸ் ஆவாள். இவர்கள் பௌஷ மாஸத்தைச் செலுத்துகின்றவர்களாவார்கள்.

திதி, மாஸம், ருது, வருஷம், அயநம், கடிகை இவைகளைக் கல்பிக்கின்றவரான பகன் என்னும் ஸூரியனுனவர், எனக்கு பாக்கியங்களையளிப்பாராக.

மகர மாஸத்தில் பகன் ஸூரியனுவார். அரிஷ்டநேமி முனிவராவார். பூர்வசித்தி அப்ஸரஸ் ஆவாள். ஊர்ணன் கந்தர்வனுவார். கார்கோடகன் நாகமாவார். ஆயு ரதகாரனுவார். ஸ்பூர்ஜன் ராக்ஷஸனுவார். கிரணங்கள் பதினோராயிரம் 11000 ஆகும். சிவப்பு நிறம். (10)

௨௦௫. 𑌅𑌥 𑌪𑍂𑌷𑌸𑍂𑌰𑍍𑌯 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

𑌪𑍂𑌷𑌾 𑌧𑌨𑌂𑌜𑌯𑍋 𑌧𑌾𑌤𑌾 𑌸𑍁𑌷𑍇𑌣𑌃 𑌸𑍁𑌰𑍁𑌚𑌿𑌸𑍍𑌤𑌥𑌾 ।
𑌘𑍃𑌤𑌾𑌚𑍀 𑌗𑍌𑌤𑌮𑌶𑍍𑌚𑍈𑌵 𑌤𑌪𑌸𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌂 𑌨𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑌮𑍀 ॥
𑌪𑍂𑌷𑌾 𑌤𑍋𑌷𑌾𑌯 𑌤𑍇 𑌭𑍂𑌯𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑌾𑌪𑌨𑍋𑌦𑌨𑌾𑌤𑍍 ।
𑌸𑌹𑌸𑍍𑌰𑌕𑌿𑌰𑌣𑌸𑌂𑌵𑍀𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌶𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌨𑍍𑌤𑌰𑌃 ॥

𑌕𑍁𑌮𑍍𑌭𑍇 𑌮𑌾𑌸𑌿 𑌪𑍂𑌷𑌾 𑌸𑍂𑌰𑍍𑌯𑌃 । 𑌗𑍌𑌤𑌮𑌰𑍍𑌷𑌿𑌃 । 𑌘𑍃𑌤𑌾𑌚𑍍𑌯𑌪𑍍𑌸𑌰𑌾𑌃 । 𑌸𑍁𑌰𑍁𑌚𑌿𑌰𑍍𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌃 । 𑌧𑌨𑌂𑌜𑌯𑍋 𑌨𑌾𑌗𑌃 । 𑌸𑍁𑌷𑍇𑌣𑍋 𑌵𑌰𑍍𑌧𑌕𑌿𑌃 । 𑌧𑌾𑌤𑌾 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌃 । 𑌰𑌶𑍍𑌮𑌯𑌃 𑌷𑌟𑍍𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌣𑌿 । 𑌆𑌰𑌕𑍍𑌤𑌵𑌰𑍍𑌣𑌃 ॥

205. பூஷ ஸூரிய த்யாநம்.

கும்ப மாஸத்திற்கு பூஷா என்பவர் ஸூரியனுவார். தநஞ்ஜயன் என்பவர் நாகமாவார். தாதா என்பவர் ராக்ஷஸனுவார், ஸுஷேணன் என்பவர் வர்தகி (தேர்ப் பாகன்) யாவார். ஸுருசி என்பவர் கந்தர்வனுவார். கிருதாசி என்பவள் அப்ஸரஸ் ஆவாள். கௌதமர் முனிவராவார். இவர்கள் தபஸ்யம் என்னும் கும்ப மாஸத்தை நடத்துகின்றவர்களாவார்கள்.

ஆயிரம் 1000 கிரணங்களாலே சூழப்பட்டவரும், எல்லா திக்மத்தியங்களிலும் உள்ளூர (அந்தராத்மாவாக) இருப்பவருமான பூஷா என்னும் ஸூரியனுனவர், ஸகல பாபங்களையும் விலக்குவதனுலே, உனக்கு ஸந்தோஷத்தை அளிப்பாராக.

கும்ப மாஸத்தில் பூஷா ஸூரியனுவார். கௌதமர் முனிவராவார். கிருதாசீ அப்ஸரஸ் ஆவாள், ஸுருசி

கந்தர்வனுவார். தநஞ்ஜயன் நாகமாவார். ஸுஷேணன் ரதகாரனுவார். தாதா ராக்ஷஸனுவார். கிரணங்கள் ஆறுயிரம் 6000 ஆம். செம்பஞ்சுக்குழம்பின் நிறம். (11)

௨௱௫. அத பர்ஜந்யஸூர்ய த்யாநம்.

க்ரதுர்வர்சா பரத்வாஜ: பர்ஜந்ய: ஸேநஜித்ததா ।
விஸ்வஸ்சைராவதஸ்சைவ தபஸ்யாக்யம் நயந்த்யமீ ॥

ஸர்வஸஸ்யம் ப்ரதபந்து ஸூர்ய: வ்ருஷ்டிபிஸ்த்வாப்யாயந்து ஸர்வத: ।
ஜகதாநந்தஜநக: பர்ஜந்ய: பரிபூஜ்யதே ஸதா ॥ ௨ ॥

* ஸ்ரீமதே பர்ஜந்யஸூர்யாய । பரத்வாஜ ருஷி: । வர்சா கந்தர்வ: । ஐராவதோ நாக: । ஸேநஜித்க்ராமணீ: । விஸ்வோ ராக்ஷஸ: । ரஸ்மயோ நவஸஹஸ்ராணி । அருணவர்ண: ॥

206. பர்ஜநிய ஸூரிய த்யநாம்.

மீந மாஸத்தில் கிரது......ஆவார். வர்சா கந்தர்வன் ஆவார். பரதுவாஜர் முனிவர் ஆவார். பர்ஜநியன் ஸூரியனுவார். ஸேநஜித்து ரதகாரனுவார். விசுவன் ராக்ஷஸனுவார், ஐராவதன் நாகமாவார். இவர்கள் தபஸியன் என்னும் மீநமாஸத்தை செலுத்துகிறவர்கள் ஆவார்கள். (1)

உலகத்தை தபிக்கும்படி செய்கின்றவரும், பிறகு அடிக்கடி மழைகளினுலே செழிக்கச்செய்கின்றவரும்,

---

* அத்ர பாகவ்யாக்யே விஹாய க்ரதுஸப்தோ ந த்ருஸ்யதே । பர்ஜந்ய இதி த்ருஸ்யதே । பர்ஜந்யஸப்த ஏக ஏவ த்விர்நாமோ பவதி । அத:, பர்ஜந்யோ அப்ஸரா: । க்ரதுர்பரத்வாஜயோ: அந்யதர: ருஷி: । அவஸிஷ்டஸ்து பர்ஜந்யோ பவதீதி ஜ்ஞேயம் ॥

உலகத்திற்கு ஆநந்தத்தையளிப்பவருமான பர்ஜந்யன் என்னும் ஸூரியனை நான் பூஜிக்கின்றேன். (2)

*மீந மாஸத்தில் பர்ஜந்யன் ஸூரியனாவார். பரத்துவாஜர் முனிவராவார். வர்சா கந்தர்வனாவார். ஐராவதன் நாகமாவார் ஸேநஜித்து ரதகாரனாவார். விசுவன் ராக்ஷஸனாவார். கிரணங்கள் ஒன்பதினாயிரம் 9000 ஆகும். அருண வர்ணம். (12)

𑌅𑌥 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌰𑌥𑌾𑌶𑍍𑌵𑌾𑌃 ॥

(𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌪𑍁𑌰𑌾𑌣𑍇)

𑌹𑌰𑌿𑌦𑍍𑌵𑌰𑍍𑌣𑌾𑌃 । 𑌸𑌪𑍍𑌤 𑌨𑌾𑌮𑌾𑌨𑌃 𑌛𑌨𑍍𑌦𑌸𑍍𑌸𑌂𑌜𑍍𑌞𑌕𑌾𑌃 ॥
𑌤𑍇𑌷𑌾𑌂 𑌪𑍁𑌰𑍋 𑌗𑌨𑍍𑌤𑌾 𑌸𑌪𑍍𑌤𑌿𑌨𑌾𑌮𑌾 𑌹𑍍𑌯𑌯𑌾𑌨𑌃 𑌸𑌰𑍍𑌵𑌕𑍋
𑌽𑌶𑍍𑌵𑌶𑍍𑌚 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ॥

இந்த 12 ஆதித்தியர்களின் ரதங்களிலுள்ள குதிரைகள்.

(விஷ்ணு புராணத்தில்)

இந்தக்குதிரைகள் யாவும் பச்சை நிறமானவைகள். இவைகளுக்குச் சந்தஸ்ஸு என்று பெயர். இவைகள் 7 குதிரைகளாம். இவைகளுள் முதலில் செல்லுகின்ற குதிரை ஒன்று. அதற்கு ஸப்தி என்று பெயர்.

௨௱௭. 𑌅𑌥 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌨𑌿.

(𑌪𑌦𑍍𑌮𑌪𑍁𑌰𑌾𑌣𑍇)

---

* உரைபோலிருக்கின்ற இப்பகுதியில், கிரது என்னும் சொல் காணப்படவில்லை. வர்சா – கந்தர்வன் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆயினும் வர்சா என்ற பதம் ஒன்றுதான் பெண்பாலைச் சொல்லக்கூடியதாக இருக்கின்றது. ஆகையால் வர்சா என்பதற்கு அப்ஸரஸ் என்றும், கிரது – பரதுவாஜர் என்ற 2 பதங்களில் ஒன்று முனிவரையும் மற்றொன்று கந்தர்வனையும் குறிப்பிடுவதாகக் கொள்ளவேண்டும்.

ஊதஹாவஂ ஜிஹாஜஂ ரக்தஂ ரக்தாம்பரமயமஂ ஷ்ரிதம் ।

வஜ்ஷஹாமெ ஶிரஷ்ரூஂ ஷாநெ விஜயங்கஜ ॥ க ॥

விஹாணஂ கஜருஷஂஷஂ ஹஷ்டாஹூஂ வ கிரீடிநஂ ।

உரஃவ்ருஷெமெ விமஂ ஸுஜகஜஹாஜணிமு ॥

ஸஜாஷ்வெகவக்ரஂ வ ஹாவயெ ரயஜாஷ்ரிதம் ।

207. இந்த 12 ஆதித்தியர்களின் லக்ஷணங்கள்.

(பத்ம புராணத்தில்)

2 கைகளையுடையவரும், சிவப்பு நிறமாக இருப்பவரும், சிவப்பு ஆடையையணிந்திருப்பவரும், நின்றவடிவமாக இருப்பவரும், பின் பக்கத்தில் வட்டமான சிரத்தையுடையவரும், உட்கார்ந்த வடிவமானுல் குற்றமற்ற மண்டலாகாரமாக இருப்பவரும், 2 கைகளிலும் 2 தாமரை மலர்களை தரித்திருப்பவரும், கிரீடத்தை தரிப்பவரும், மார்பில் தோஷமற்றதான ஸ்யமந்தகம் என்னும் உத்தமமான ரத்தினத்தை அணிந்திருப்பவரும், ஒரேவிதமான குதிரைகளையுடையவரும், ஒரே சக்கிரத்துடன் கூடிய ரதத்தில் வீற்றிருப்பவருமான ஸூரியனை த்யாநம் செய்கின்றேன். (2½)

கூய ஸதெஷாஂ வணாஃ.

(வஹ்வராணெ)

ரக்தஃ வீதொஜரணஃ ஶாஜஃ ஶ்வெதொ வஹுஷ்ரகவஹஃ ।

கூஷ்ணொ ஹரிதஶ்வைவ ஶொணஃ காஞ்சநிஹொஜரணஃ ॥

ஸூதிஷாநாஜிமெ வணாஃ ஆதிஸாநாஂ க்ரமாத் ஷ்ருதாஃ ॥

இவர்களின் நிறங்கள்.

(பத்ம புராணத்தில்)

சிவப்பு *1*, மஞ்சள் *2*, அருணம்—குங்கும நிறம் *3*, சியாமம்—நீல நிறம் *4*, வெளுப்பு *5*, பப்ருவர்ணம் நீலமும் மஞ்சளும் கலந்த நிறம் *6*, ஸுவர்ண வர்ணம் *7*, குங்கும நிறம் *8*, பச்சை *9*, சோணவர்ணம்—சிந்தூரம் அல்லது ரக்தவர்ணம் *10*, மநோஹரமான அல்லது குங்குமம் போன்ற நிறம் *11*, ஸிந்தூரவர்ணம் *12*. இந்த நிறங்கள் முறையே, *12* ஸூரியன்களின் நிறங்களாகும் என்று கூறப்பட்டிருக்கிறது. (*1½*)

௨௦௮. 𑌅𑌥 𑌅𑌧𑌿𑌮𑌾𑌸𑌕𑍍𑌷𑌯𑌮𑌾𑌸𑌯𑍋𑌃 𑌲𑌕𑍍𑌷𑌣𑍇.

(𑌶𑌿𑌰𑍋𑌮𑌣𑍌)

𑌅𑌸𑌂𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑌾𑌸𑍋𑌽𑌧𑌿𑌮𑌾𑌸𑌃 𑌸𑍍𑌫𑍁𑌟𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍
𑌦𑍍𑌵𑌿𑌸𑌂𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑌾𑌸𑌃 𑌕𑍍𑌷𑌯𑌾𑌖𑍍𑌯𑌃 𑌕𑌦𑌾𑌚𑌿𑌤𑍍 ।
𑌕𑍍𑌷𑌯𑌃 𑌕𑌾𑌰𑍍𑌤𑌿𑌕𑌾𑌦𑌿𑌤𑍍𑌰𑌯𑍇 𑌨𑌾𑌨𑍍𑌯𑌦𑌾 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍
𑌤𑌦𑌾 𑌵𑌰𑍍𑌷𑌮𑌧𑍍𑌯𑍇𑌽𑌧𑌿𑌮𑌾𑌸𑌦𑍍𑌵𑌯𑌂 𑌚 ॥

[𑌅𑌧𑌿𑌮𑌾𑌸𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌨𑌿𑌜𑌮𑌾𑌸𑌵𑌦𑍇𑌵 𑌦𑍈𑌵 𑌦𑍇𑌵𑌤𑌾 ।
𑌤𑌚𑍍𑌛𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌮𑌪𑌿 𑌨𑌿𑌜𑌮𑌾𑌸𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌵𑌤𑍍 ॥ 𑌕𑌾. 𑌨𑌿𑌂 ॥]

208. அதிமாஸம் க்ஷயமாஸங்களின் லக்ஷணங்கள்.

ஸங்கிராந்தி இல்லாத மாஸமானது, (ஸூரியன் ஒரு ராசியிலிருந்து மற்றொரு ராசிக்குப் போகாமலிருக்கின்ற மாஸமானது) நிச்சயமாக அதி மாஸமாகும்.

ஒரே மாதத்தில் 2 ஸங்கிரமணங்கள் நேர்ந்தால் (ஸூரியன் 2 ராசிகளுக்குச் சென்றால்) அது க்ஷய மாஸமாகும். இது எப்பொழுதாவது நேரக்கூடியதாகும்.

க்ஷய மாஸமானது கார்த்திகை மாதம் முதலான 3 மாதங்களில்தான் நேருவதாகும். மற்ற மாதங்களில் நேராது. அப்படி க்ஷயமாதம் தோன்றினால் அந்த வருஷத்திற்குள் 2 அதிமாஸங்கள் தோன்றுவனவாகும்.

[அதிமாஸத்திற்கும், நிஜமாஸத்திற்குக் கூறப்பட்டு இருக்கின்ற தேவதையே தேவதையாகும் அந்த மாஸத்தின் ஸ்வரூபமும் நிஜமாஸத்தைப் போன்றதே யாகும்.. நிஸ 6]

அதிமாஸே கர்தவ்யதானானி.

ப்ரஹ்மவைவர்தே)

அதிமாஸே து ஸம்ப்ராப்தே த்ரயஸ்த்ரிம்சதபூபகம் ।
ஸகுடாஜ்யபலம் தத்யாத் காம்ஸ்யபாத்ரப்ரதிஷ்டிதம் ॥
ஜனார்தனஸ்ய ப்ரீத்யர்தம் தத்ப்ரதிமாம் ச ஹிரண்மயீம் ।

அதிமாஸத்தில் செய்யவேண்டிய தானங்கள்.

(பிரஹ்மவைவர்த்தத்தில்)

அதிமாஸம் ஸம்பவிக்கும்பொழுது, 33 அபூபங்களை (அபூபம் - அதிரஸம் முதலியவைகள்) வெல்லம், நெய், பழம் இவைகளுடனும் தங்கத்தினால் செய்யப்பட்ட ஜனார்தனமூர்த்தியுடனும், வெண்கலப் பாத்திரத்தில் வைத்து, ஜனார்தனனுடைய பிரீதியை வேண்டி தானம் செய்யவேண்டும். (1½)

௨௱௯. க்ஷய உத்தரஸங்க்ராந்தி ஸூசனம்.

(ஜ்யோதிஷஸாரஸங்க்ரஹே)

சித்ரேவம் க்ருஷ்ணபக்ஷம் ச சதுர்தசாஹம்
த்ரிஷோடசம் ।

ஸப்தஹஸ்தம் த்ரிவக்த்ரம் ச விஶேஷம் போத்யதாம் புதாஃ ॥

ஸப்தாயுதயுதம் தக்ஷே முஸலம் சாஸிபாணகௌ ।
கதாம் வாமே ச விஹ்ராணம் கேடம் பாத்ரம்
ஶராஸநம் ॥

ப்ரஸித்தம் கோரரூபம் தஸ்ய மகரஸங்க்ராந்தி
லக்ஷணம் ।

(க்ருஷ்ணவர்ண்யுஃ)

209. மகர ஸங்கிராந்தி ஸ்வரூபம்.

(ஜியோதிஷ ரத்நாகரத்தில்)

மகர ஸங்கிராந்தியின் ஸ்வரூபமானது, 2 முகங்கள் உடையதும், கருப்பு நிறமானதும், 4 கைகளுடையதும், (4 புஜங்களுடையதும், புஜம் — தோள்பட்டைக்குக் கீழே முழங்கைக்கு மேலேயுள்ள பாகம்) 3 கண்களுடையதும், 7 கைகளுடையதும், 3 கால்களுடையதும், 2 தலைகள் உடையதும், மேல்நோக்கான கண்களையுடையதும், 7 ஆயுதங்களை தரித்துக்கொண்டிருப்பதும், அவற்றுள் வலது பக்கத்திலுள்ள 4 கைகளில் உலக்கை 1, கத்தி 2, அம்பு 3, கதை 4 இவைகளையும், இடது பக்கத்திலுள்ள 3 கைகளில் கேடயம் 1, பாத்திரம் 2, வில் 3 இவைகளையும் வஹித்துக்கொண்டிருப்பதும், பிரஸித்திபெற்ற கோரமான உருவமுடையதுமாகும்.

அத வாரஹேதேந ஸப்தவிதகரஸங்க்ராந்தீநாம்
ஸ்வரூபாணி.

(ஜ்யோதிஷார்ணவே ஸப்தாஃ க்ருஷ்ணவர்ணாஃ)

42 உாய. தத்ராதௌ ஹாநுவாஸரே வொரநாம்நீ
ஸங்க்ராந்தேஃ ஸ்வரூபம்.

ரவிஸங்க்ராந்திகேயா து கோரா நாம்நீ து ஸிம்ஹகா ।
வீணாஸிஜீர்ணஶூர்பாப்ஜானி ஸிதபத்மம் ஶராஸனம் ॥

ஸர்பம் ச ரம்பம் சைவ பிப்ராணா வரதாஸ்து மே ।

210. பாநுவாரம் – மகர ஸங்கிராந்தியின் தேவதையான கோரையின் ஸ்வரூபம்.

மகர ஸங்கிராந்தியானது ஞாயிற்றுக் கிழமையில் வந்தால், கோரை என்பவள், அதற்கு அதிதேவதை ஆவாள். அவள் ஸிம்ஹ வாஹநத்திலிருப்பவளும், வீணை 1, கத்தி 2, மடித்துக் கந்தலான முறம் 3, வெண் தாமரை மலர் 4, வில் 5, பாம்பு 6, ரம்பம் 7, இவைகளை தரிப்பவளுமாவாள். இவள் எனக்கு வேண்டியவைகளை அளிக்கவேண்டும். (1)

௨௧௧. அத ஸோமவாரே த்வாங்க்ஷீஸங்க்ராந்தே: ஸ்வரூபம்.

இந்துவாரே து ஸங்க்ராந்தி: த்வாங்க்ஷீ ஶார்தூல
வாஹநா ।
அஸிம் ஶூர்பம் ஸிதாம்போஜம் துலாதண்டம்
ஶராஸனம் ॥
ஸர்பம் ச ரம்பம் சைவ பிப்ராணா
வரதாஸ்து மே ।

211. ஸோமவாரத்தில் துவாங்க்ஷீ ஸங்கிராந்தியின் ஸ்வரூபம்.

மகர ஸங்கிராந்தியானது திங்கள் கிழமையில் ஸம்பவித்தால், அதற்கு துவாங்க்ஷீ என்பவள் தேவதை ஆவாள். இவள், புலி வாஹநத்திலிருப்பவளும், கத்தி 1, முறம் 2, வெண்தாமரைமலர் 3, தராசின் கோல்

(கயத்துக்கோல் அல்லது தராசு) 4, வில் 5, பாம்பு 6, ரம்பம் 7, இவைகளை தரிப்பவளுமாவாள். இவள் நான் வேண்டும் வரங்களையளிப்பாளாக. (2)

உ௧௨. அத குஜவாரெ மஹோதரீ ஸங்க்ராந்தி ஸ்வரூபம்.

குஜவாரெ யதா க்ராந்தி: வராஹவரவாஹநா ।
மஹோதரீதி விக்யாதா ஜீர்ணஶூர்பம்
ஸிதாம்புஜம் ॥
துலாதண்டம் சாபஸர்பௌ க்ரகசம் க்ஷுரிகாம் தயா ।
பிப்ராணா வரதா ஹ்ருத்யாஸ்து ஸர்வதாऽரிஷ்ட
ஶாந்தயே ॥

212. செவ்வாய்க்கிழமையில் மஹோதரீ ஸங்கிராந்தி ஸ்வரூபம்.

மகர ஸங்கிராந்தியானது குஜவாரத்தில் வந்தால், அதற்கு அதிதேவதை மஹோதரீ என்பவளாவாள். அவள், பன்றி வாஹனத்திலிருப்பவளும், கிழிந்த முறம் 1, வெண்தாமரைமலர் 2, கயத்துக்கோல் அல்லது தராசு 3, வில் 4, பாம்பு 5, ரம்பம் 6, கத்தி (சிறியது) 7 இவைகளை தரிப்பவளுமாவாள். இவள், வரங்களையளிப்பவளாகவும், தீங்குகளைக் களைகின்றவளாகவும் இருப்பாளாக. (3)

உ௧௩. அத புதவாரெ மந்தாகிநீஸங்க்ராந்தே: ஸ்வரூபம்.

மந்தாகிநீ ஸௌம்யவாரெ வரஸிம்ஹஸமாஸ்திதா ।
ஸிதபத்மஶராஸௌ ச துலாதண்டம் ஷணீந்த்ரகம் ॥
க்ரகசக்ஷுரிகாபாணாந்து பிப்ராணா ஶுபதா ஸதா ।

213. புதவாரத்தில் மந்தாகிநீ ஸங்கிராந்தியின் ஸ்வரூபம்.

புதவாரத்தில் மகரஸங்கிராந்தியானது வந்தால், அதற்கு தேவதை மந்தாகிநீ என்பவளாவாள். இவள் கழுதை வாஹநத்தில் வீற்றிருப்பவளும், வெண்தாமரை மலர் 1, வில் 2, துலாதண்டம் (கயத்துக்கோல் அல்லது தராசு) 3, நல்ல பாம்பு 4, ரம்பம் 5, சிறிய கத்தி 6, அம்பு, இவைகளை தரிப்பவளுமாவாள். அவள் சுபங்களை யளிப்பாளாக. (4)

௨௧௪. 𑌅𑌥 𑌸𑍌𑌮𑍍𑌯𑌵𑌾𑌰𑍇 𑌮𑌨𑍍𑌦𑌾𑌸𑌂𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑍇𑌃
𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑍍.

𑌸𑍌𑌮𑍍𑌯𑍇 𑌜𑍍𑌞𑌵𑌾𑌰𑍇 𑌮𑌨𑍍𑌦𑌾𑌖𑍍𑌯𑌾 𑌖𑌰𑌾𑌰𑍂𑌢𑌾 𑌶𑍁𑌭𑌾 ।
𑌸𑌰𑍋𑌜𑌚𑌾𑌪𑌤𑍁𑌲𑌾𑌦𑌣𑍍𑌡𑌨𑌾𑌗𑌰𑌮𑍍𑌭𑍌 𑌕𑍍𑌷𑍁𑌰𑌂 𑌶𑌰𑌾𑌨𑍍 ॥

𑌕𑍍𑌷𑍁𑌰𑌿𑌕𑌾𑌂 𑌭𑌿𑌨𑍍𑌦𑌿𑌪𑌾𑌲𑌂 𑌚 𑌦𑌧𑌾𑌨𑌾 𑌬𑌾𑌹𑍁𑌭𑌿𑌶𑍍𑌶𑍁𑌭𑌾 ।

214. குருவாரத்தில் மந்தா ஸங்கிராந்தியின் ஸ்வரூபம்.

குருவாரத்தில் மகரஸங்கிராந்தி ஸம்பவித்தால், அதன் அதிதேவதை மந்தை என்பவளாவாள். இவள் சிறந்த யானையின் மீது வீற்றிருப்பவளாவாள். ஸந்தோஷத்துடன் கைகளில் வில் 1, துலா தண்டம் 2, நல்லபாம்பு 3, ரம்பம் 4, அம்பு 5, கத்தி 6, பிண்டிபாலம் 7 (பிண்டி 7, பாலம் 8,) இவைகளை தரிப்பவள் ஆவாள். இவள் சுபங்களையளிப்பாளாக. (5)

௨௧௫. 𑌅𑌥 𑌶𑍁𑌕𑍍𑌰𑌵𑌾𑌰𑍇 𑌮𑌿𑌶𑍍𑌰𑌿𑌕𑌾𑌸𑌂𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑍇𑌃
𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑍍.

𑌅𑌥 𑌸𑌂𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑍇 𑌗𑍁𑌰𑍋𑌰𑍍𑌵𑌾𑌰𑍇 𑌮𑌿𑌶𑍍𑌰𑌿𑌕𑌾 𑌹𑌸𑍍𑌤𑌿𑌵𑌾𑌹𑌨𑌾 ।
𑌧𑌨𑍁𑌸𑍍𑌤𑍁𑌲𑌾𑌦𑌣𑍍𑌡𑌸𑌰𑍍𑌪𑌂 𑌚 𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌕𑍍𑌷𑍁𑌰𑌿𑌕𑌾𑌂 𑌤𑌥𑌾 ॥

𑌵𑌿𑌶𑌿𑌖𑌂 𑌭𑌿𑌨𑍍𑌦𑌿𑌪𑌾𑌲𑌂 𑌚 𑌖𑌡𑍍𑌗𑌂 𑌚𑌾𑌪𑌿 𑌬𑌿𑌭𑌰𑍍𑌤𑍍𑌯𑌸𑍌 ।

215. சுக்கிர்வாரத்தில் மிஶ்ரிகா ஸங்கிராந்தியின் ஸ்வரூபம்.

வெள்ளிக் கிழமையில் மகர ஸங்கிரமணம் ஸம்பவித்தால், அதற்கு, மிஶ்ரிதை என்பவள் அதிதேவதை ஆவாள். இவள், மஹிஷ வாஹநத்திலிருப்பவளும், துலாதண்டம் 1, பாம்பு 2, ரம்பம் 3, கத்தி 4 அம்பு 5, பிண்டி-பாலம் 6, குந்தம் (இருப்பு உலக்கை) 7 இவைகளை வஹிப்பவளுமாவாள். (6)

உகசு. அத² ஶநிவாரே ராக்ஷஸீஸங்க்ராந்தே:
ஸ்வரூபம்.

ஶநைஶ்சரஸ்ய வாரே து ராக்ஷஸீ துரக³ஸ்தி²தா |
ஜிஹ்மக³ம் க்ரகசம் சாபி க்ஷுரிகாம் பா³ணமேவ ச ||

பி⁴ண்டி³பாலம் ச குந்தம் ச பு⁴ஶுண்டீ³ம் பி³ப்⁴ரதீ
கரை: |

216. சநிவாரத்தில் ராக்ஷஸீ ஸங்கிராந்தி ஸ்வரூபம்.

சனிக்கிழமையில் மகர ஸங்கிராந்தி வந்தால், அதன் அதிதேவதை, ராக்ஷஸீ என்பவளாவாள். அவள் குதிரையின்மீது வீற்றிருப்பவளும், கைகளில் பாம்ப 1, ரம்பம் 2, கத்தி 3, அம்பு 4, பிண்டி-பாலம் 5, குந்தம் (இரும்பு உலக்கைபோன்ற ஆயுதம்) 6, புசுண்டீ என்னும் ஆயுதம் 7, இவைகளை தரிப்பவளுமாவாள். (7)

உகஎ. அத² ஸங்க்ராந்திஸாமாந்யலக்ஷணம்.

(ஜ்யோதிஷஸங்க்³ரஹே)

அஷ்டபா³ஹுஶ்சதுர்வக்த்ரா ஹ்ரஸ்வகர்ணாஷ்ட
லோசநா |
ஷஷ்டியோஜநவிஸ்தீர்ணா ஶதயோஜநதுங்க³தா ||

ஸஷ்டாயாயகாா வஜேஜ்ரா ஹுஸ்வொஷ்டீ த்ரிவாஜிகா ।
ஊர்த்வகேஶீ விரூபாக்ஷீ ஸங்க்ராந்திஃ
பாராஷாக்ருதிஃ ॥
(நீருவணபூரஃ)

217. ஸங்கிராந்தி ஸாமாநிய லக்ஷணம். (ஜியோதிஷ ஸங்கிரஹத்தில்)

பொதுவாக ஸங்கிராந்தி தேவதையானது, 8 கைகள் உடையதும், 4 முகங்களுடையதும், 8 காதுகளுடையதும், 8 கண்களுடையதும், 60 யோஜனை அளவு விஸ்தாரமானதும், 100 யோஜனை தூரம் உயரமானதும், 7 ஆயுதங்களை கைகளில் தரித்திருப்பதும், தொங்குகின்ற உதட்டையுடையதும், 3 கால்களையுடையதும், ஊர்துவமுகமான (மேல் நோக்கான) கேசங்களையுடையதும், விகாரமான கண்களையுடையதும், புருஷ வடிவமுடையதுமாகும். இத்தகைய ஸங்கிராந்தி தேவதையானது பூஜிக்கத் தக்கதாகும்.

அத காரணரூபேண ஸங்க்ராந்திவிஶேஷேண
ஶுபாஶுபகாரக ஸ்வரூபாணி.
(ஜ்யோதிஷஸங்க்ரஹே)

உகஅ. தத்ராதௌ பவகரணே ப்ரவிஷ்ட
ஸங்க்ராந்தேஃ ஸ்வரூபம்.

ஸிம்ஹோபவிஷ்டஸ்து ஹுஶாங்கபாணீ
வாஹாமுஶாக்ஷ்ணம்பரவிஹாரிணீ ।
கஸ்தூரிகாம் சைவ ஸமாஹ்வாத்ரும்
அன்னம் ச ஹ்ருஷ்டஃ ஹி பவே விவஸ்வான் ॥
(நீருவணபூஃ)

218. அவற்றுள் பவகரணத்தில் ஸங்கிராந்தி ஸ்வரூபம்.

ஸங்கிராந்தியானது பவகரணத்தில் நிகழ்ந்தால், அப்பொழுது, ஸூரியனனவர், ஸிம்ஹ வாஹநத்தில் வீற்றிருப்பவரும், புசுண்டி என்னும் ஆயுதத்தை வஹிப்பவரும், புன்னைப்பூ, வெளுப்பு வஸ்திரம், பவழம், (பவழமாலை முதலிய ஆபரணங்கள்) இவைகளை தரிப்பவரும், கஸ்தூரியை (கஸ்தூரிப்பொட்டை) தரிப்பவரும், தங்கப் பாத்திரத்தை வைத்திருப்பவரும், அந்நத்தை புஜித்துக்கொண்டிருப்பவருமாவார். (தங்கப் பாத்திரத்தில் அந்நத்தை வைத்துக்கொண்டு புஜித்துக்கொண்டிருப்பவராவார்.) (1)

உகக. அத பவகரணே ஸங்க்ராந்தேः ஸ்வரூபம்

ஸிம்ஹோபவிஷ்டா ஶ்வேதவஸ்த்ர ஜாதி
புஸ்பா ஸ்வர்ணபாத்ர ப்ருதாநி ।
கஸ்தூரிம் ச பாத்ரம் ஸஹ ஹிம்ஸிநாம்
யத்ர ரவிः பாயஸஹஸ்தே ச பவே ॥

(நீலவர்ணः)

219. பாலவ கரணத்தில் ஸங்கிராந்தி ஸ்வரூபம்.

ஸங்கிராந்தியானது பாலவ கரணத்தில் ஸம்பவித்தால் அப்பொழுது சூரியன் புலியின்மீது வீற்றிருப்பவரும், சிவப்புப்பூ, சிவப்பு ஆடை, ஜாதி முல்லைப்பூ, முத்துக்கள் (முத்துக்களாலான மாலை முதலிய ஆபரணங்கள்) சந்தனம் இவைகளையணிந்திருப்பவரும், பிண்டிபாலம் என்ற ஆயுதத்துடன் வெண்கலப்பாத்திரத்தை வைத்துக்கொண்டு இருப்பவருமாவார். பாயஸத்தை புஜித்துக்கொண்டு இருப்பார். (வெண்கலப்பாத்திரத்தில் இருக்கின்ற பாயஸத்தை புஜித்துக்கொண்டிருப்பார்.) (நீல நிறம்) (2)

உ௯. ஊய கௌலவகரணஞூவிஷு ஸங்க்ராந்தேஃ
ஷ்வரூபம்.

ஷூர்கவா வராஹெ ஸகுலாநி யூகவா
விசூராம்பரஃ கும்குமஹஸூ ஸஹாவிஃ ।
ஹரிக்ஷூளதிநொ ருஜிதஹஸ்ஷணஷூ
ஸதாஉுவாகூஃ வநூ கௌலவெகூஃ ॥

(நீருவணூஃ)

220. கௌலவ கரணத்தில் ஸங்கிராந்தி ஸ்வரூபம்.

கௌலவ கரணத்தில் ஸங்கிராந்தியானது ஸம்பவித்தால், அப்பொழுது, சூரியனானவர், பன்றி வாஹநத்தில் வீற்றிருப்பவரும், மகிழம்பூ மாலையையணிந்து கொண்டிருப்பவரும், பலவர்ணங்களுடன் கூடிய ஆடையையணிந்திருப்பவரும், குங்குமத்தை வஹிப்பவரும், கத்தியை தரித்துக்கொண்டிருப்பவரும், பக்ஷியங்களுடன் அந்நத்தை புஜித்துக்கொண்டிருப்பவரும், (பக்ஷியம்-தின்பண்டங்கள்) நன்கு பிரகாசிக்கின்ற ஆபரணங்களை அணிந்திருப்பவரும், தாமிர (தாமிரப்-செப்பு) பாத்திரத்தை வைத்துக்கொண்டிருப்பவருமாவார். (நில நிறம்) (3)

உஉக- ஊய தைதூஞூநிஷு ஸங்க்ராந்தேஃ
ஷ்வரூபம்.

ஜம்பூம் கரெ டம்பயஸூ உஜிகா
ஹ்ஸஉநமொரோவநவீதவஷூஃ ।
யதெ ஹூயஃவாகூஉவஉவஹொஜநொ
ஜாணிகுஹஷொஉவி தைதூலெஉகூஃ ॥

(நீருவுணூஃ)

221. தைதுல கரணத்தில் ஸங்கிராந்தி ஸ்வரூபம்.

தைதுல கரணத்தில் ஸங்கிராந்தி ஸம்பவித்தால், அப்பொழுது, சூரியன், நாவப்பழத்தை கையில் வைத்துக் கொண்டிருப்பவரும், கையில் தண்டத்தை தரித்துக் கொண்டிருப்பவரும், மல்லிகைப்பூ, கோரோஜனை, மஞ்சள் ஆடை, இவைகளை தரிப்பவரும், இருப்பு பாத்திரத்தை தரிப்பவரும், அபூபத்தை (அதிரஸம் முதலிய பக்ஷணங்களை) ஆஹாரம் செய்துகொண்டிருப்பவரும், மாணிக்கக் கற்களாலான ஆபரணங்களை அணிந்துகொண்டிருப்பவரும் ஆவார். (நீலநிறம்) (4)

௨௨௨. அத² க³ரஜவிஷ்டஸங்க்ராந்தே: ஸ்வரூபம்.

க³ரஜே(ஜோ)பவிஷ்டஸ்ய நக³ஸ்தோ²ராக்ஷ:
மோதே³யிகாம்ஸுகாரண: வய: பிப⁴ர்து |
நீலாநி வஸ்த்ராணி ச பீஸவாத்ரம்
ஜவாப்ரஸூநாநி க³ரே த³தா⁴தி ||

(நீலவர்ண:)

222. கரகரணத்தில் ஸங்கிராந்தி ஸ்வரூபம்.

கரகரணத்தில் ஸங்கிராந்தி ம்பவித்தால், அப்பொழுது சூரியனுனவர், யானையின்மீது வீற்றிருப்பவரும், செம்பஞ்சுக்குழம்பை (கையில்) வைத்துக்கொண்டிருப்பவரும், கோமேதகத்தினுலே செய்யப்பட்ட ஆபரணங்களையணிந்துகொண்டிருப்பவரும், பாலைப்பருகிக்கொண்டிருப்பவரும், நீலநிறமான ஆடைகளையணிந்துகொண்டு இருப்பவரும், ஈயப்பாத்திரத்தை வைத்துக்கொண்டிருப்பவரும், சம்பரத்தம்பூக்களை தரிப்பவருமாவார். (நீலநிறம்)

௨௨௩. அத² வணிக்ப்ரவிஷ்டஸங்க்ராந்தே: ஸ்வரூபம்.

வணிஜ்யுதயம் மஹிஷோபவிஷ்ட:
ஸகம்பலோ ரக்தசந்தநே ச (?) ।
நீலோத்பலம் நீலமணிம் ச தத்தே
தத்யோதநாசீ தாம்ரபாத்ரதாரீ ॥

(நீலவர்ண:)

223. வணிக்கரணத்தில் ஸங்கிராந்தி ஸ்வரூபம்.

